**“சில்பாலோக்க வேலைத்திட்டம்”**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# இந்துசமயம்

# தரம்-12



**சுயகற்றலுக்கான கையேடு**

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களூடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***வழிகாட்டல்***

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***நூலாக்கக் குழு***

***M.கிருஷ்ணபிள்ளை***
உதவிக் கல்விப் பணிப்பாளர் -(இந்துசமயம்)
வலயக்கல்விப்பணிமனை-கம்பளை

***K.ஜெயறஞ்சி***
ஆசிரிய ஆலோசகர் -(இந்துசமயம்)
வலயக்கல்விப்பணிமனை-கம்பளை

***M.மாலதி***
ஆசிரியை
இந்துதேசிய கல்லூரி-ரஜவெல

# பொருளடக்கம்


| அலகு | பக்கம் |
| --- | --- |
| 1. இந்து சமயத்தின் சிறப்பம்சங்கள் | 06 |
| 2. இந்துசமய இலக்கிய வரலாற்று மூலங்கள் | 07 |
| 3. சிந்துவெளிக்காலம் | 07 |
| 4. வேதங்கள் | 09 |
| 5. ஆகமங்கள் | 17 |
| 6. இதிகாசங்கள் | 21 |
| 7. புராணங்கள் | 24 |
| 8. இயற்கைநெறிக்காலம் | 27 |
| 9. அறநெறிக்காலம் | 30 |
| 10. பக்தியியக்கக காலம் | 31 |
| 11. மடங்கள் ஆதீனங்கள் | 34 |
| 12. அறுவகைச் சமயநெறிகள் | 35 |
| 13. பக்தர்கள்,சித்தர்கள் | 43 |
| 14. இந்துக்கோயிற்கலைகள் | 55 |
| 15. நாட்டார்கலைகள் | 71 |
| 16. இலங்கையில் இந்துசமயம் | 73 |
| 17. இலங்கையில் இந்துக்கோயில்கள் | 77 |
| 18. இலங்கையில் இந்துசமயத்திற்குத் தொண்டாற்றிய பெரியார்கள் | 84 |
| 19. ஊடகம் | 84 |

# 01 - இந்து சமயத்தின் சிறப்பம்சங்கள்

- காலத்தால் முற்பட்ட சமயம் (இ.மு.காலம்)
- பரந்த நோக்குடையது.
- சனாதன தர்மம் எனப்பட்டது.
- இன்று வரை நிலைத்து நிற்பது.
- வாழ்வியல் ஒழுங்கு, ஆன்மீக நாட்டம் என்பவற்றுக்கு வழிகாட்டியாக அமைந்தது.
- காலத்தால் முற்பட்ட வேத இலக்கியங்களைக் கொண்டது.
- இந்திய தத்துவங்களுக்கு அடிப்படையான உபநிடதங்களைக் கொண்டது.
- கலைக்கோயில்களை சிறப்பாகக் கொண்டது. (நுண்கலைகள்)
- இறைவனை எழுந்தருளச் செய்யும் திருக்கோயில்களின் அமைப்பு வழிபாட்டு முறைகள் என்பவற்றைக் கூறும் ஆகமங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.
- உறவு முறை கொண்ட வழிபாடு, பாசுரங்களால் வழிபடுதல்.
- வாழ்வியலும் ஆன்மீகமும் இணைந்த தத்துவத்தை உடையது.
- வேதாந்தம், சைவ சித்தாந்தம் எனும் தத்துவங்களை உள்ளடக்கியது.
- வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்மீக விடுதலை பெற வேண்டும் என்ற உயர் எண்ணத்தைக் கொண்டது, மனித மேம்பாடு லக சகோதரத்துவத்தை வலியுறுத்துவது.
- சுதந்திரமான வழிபாட்டுமுறை (விரும்பும் வடிவத்திலும் பெயரிலும் வழிபடுதல்)
- ஆன்மீக ஒருமைப்பாடு (அனைத்து உயிர்களும் சமம்)
- விஞ்ஞான ரீதியான உண்மைகளைக் கொண்டது. (முற்பிறவி, இப்பிறவி, மறுபிறவி, வழிபாட்டு முறைகள்)
- மகான்களை முன்னுதாரணமாகக் கொண்டது.
- கடவுள் உள்ளத்தில் உறைபவர், தாய், தந்தை குரு, விருந்தினர், அடியவர்களை இறைவனின் பிரதிநிதிகளாகக் கண்டு வழிபடும் முறை காணப்படுதல்.
- இசைப்பாடல் வழிபாடு.
- வேற்றுமையில் ஒற்றுமை காணுதல்.
- குடும்ப உறவுகளின் புனித உறவு ⟶ அன்புமிக்க சமுதாய வாழ்வு
- வைதிக நெறி ⟶ இறை உண்மை இறை நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளுதல்
- சமய வாழ்வியல் + அறிவியல் + உளவியல் ⟶ இந்து மத தத்துவம்
- உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு உடையது.
- சமய தர்மங்களை உடையது (பிறருக்கான பிரார்த்தனைகள், விருந்தோம்பல் போன்றன)
- தொண்டு செய்தல் உயர் பணி என்பதையும் பய்ன கருதாத கடமையையும் வலியுறுத்துவது.
- கலைகள் ⟶ ஆன்மீக அனுபவம், ரசனை இரண்டையும் உள்ளடக்கியது.
- பிறமதக் கருத்துக்களை மதிக்கும் பண்புடையது.
- பிற பண்பாடுகளின் சுவடுகள் அழிந்து போக இன்று வரைக்கும் மட்டுமல்ல என்றும் அழியாத பண்பாட்டை உடையது.

## 02 - இந்து சமய இலக்கிய வரலாற்று மூலங்கள்

- வரலாற்று மூலாதாரங்கள் உண்மையை நிறுவக்கூடிய சான்றுகளாகும்.
- இலக்கிய ஆராய்ச்சி, கல்வெட்டுக்கள், தொல்பொருட் சின்னங்கள், பிறநாட்டு அறிஞர் குறிப்புகள் என்பன.
- வரலாற்று இலக்கிய மூலங்கள் ⟶ * பிரமாணங்கள்

* மெய்க்கீர்த்திகள்
* காப்பியங்கள்
* புராணங்கள்
* சிற்றிலக்கியங்கள்
* நாடகங்கள்
* பழங்கதைகள்

- கற்பாறைத்தூண் எழுத்துக்கள், நாணயங்கள், செப்பேடுகள், பட்டயங்கள், பலவகை மொழிகள், கல்வெட்டுக்கள்
- நினைவுச் சின்னங்கள் (மட்கலம், ஜாடிகள், வணிகப் பொருட்கள்)
- அயல் நாட்டவர் குறிப்புகள் (மெகஸ்தனிஸ் எழுதிய கிண்டிகா எனும் நூல், பிளினி, பாஹியன், யுவான் சுவாங் போன்றோர் எழுதிய குறிப்புக்கள்)
- கல்வெட்டின் அமைப்பு * மங்கல வாசகம்

* கல்வெட்டின் காலம்
* கல்வெட்டின் நோக்கம்
* ஓம்படைக் களவி

- கல்வெட்டுக்களில் உள்ள ஸ்வஸ்திஸ்ரீ ⟶ மங்கள முண்டாக என்னும் பொருளை உடையது.

## 03 - சிந்துவெளிக்காலம்

01. சிந்துவெளி நாகரிக காலத்தினைக் குறிப்பிடுக.
கி.மு. 3250 – கி.மு 2750

02. சிந்து நதி பாயும் பகுதி எந்த ஆண்டு புதைபொருளாய்வுக்கு உட்பட்டது?
1922 – 1930 வரையான காலப்பகுதி

03. சிந்துவெளி அகழ்வாய்வு யாருடைய தலைமையில் இடம்பெற்றது?
சேர்.ஜோன் மார்ஷல்

04. சிந்து வெளி அகழ்வாய்வாளர்களின் பெயர்களைத் தருக.
அலெக்ஸ்சாண்டர் கன்னிங்காம்

05. மொகஞ்சதாரோ தற்போது எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
பாகிஸ்தான்

06. ஹரப்பா தற்போது எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
மேற்கு பஞ்சாப் மாநிலம்

07. முத்திரை ஒன்றில் யோகி வடிவத்தின் கீழ்ப்புறத்தில் காணப்பட்ட மிருகங்கள் யாவை?

யானை, புலி, எருது, காண்டாமிருகம்

08. யோகி வடிவத்தினை சிவனுடன் இனங்காண்கின்றவர் யார்?
சேர்.ஜோன் மார்ஷல்

09. ‘இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது’ எனக் கூறியவர் யார்?
சேர் ஜோன் மார்ஷல்

10. வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ள நடன மாதின் வடிவம் ‘சிவபெருமானது பிற்கால நடனத்திற்குத் தோற்றுவாய் ஆகலாம்’ என்று குறிப்பிட்டவர் யார்?
மா. இராசமாணிக்கனார்

11. சிந்துவெளிச்சமய நிலையை விளக்குக.

- ஆதாரங்கள்
  - கண்டுபிடிக்கப்பட்ட கட்டிடங்கள்
  - கற்சிலைகள்
  - இலிங்க வடிவங்கள்
  - களிமண் பாவைகள்
  - புகைபடிந்த கற்கள்
  - சித்திர வடிவ எழுத்துக்கள்
- சிவ வழிபாட்டிற்கான ஆதாரங்கள்
  - இலிங்க வடிவான கற்கள், முத்திரைகள்
  - யோகி வடிவம்
  - தரைப் பெண் வழிபாடு அல்லது தாய்த் தெய்வ வழிபாடு
  - ஒரு பெண்ணின் கருப்பையிலிருந்து செடி முளைப்பது போன்று பொறிக்கப்பட்டுள்ள முத்திரை
  - நாகவழிபாடு – முக்காலி ஒன்றில் பாற்கிண்ணம் உள்ளது. அருகில் நாகபாம்பு படம் விரித்தபடி உள்ளது போன்ற தாயத்து
  - தேவதைகள் உறையும் மரவடிவங்கள் (மரவழிபாடு மரங்களுக்கிடையில் பெண் உருவம் காணப்படும் முத்திரை விருட்ச வழிபாடு)
  - உயரமான கோயில்களை அமைத்த சுமேரியர்களோடு உறவு காணப்பட்டது.
- குளம் எட்டு அறைகளைக் கொண்டது

படிக்கட்டுக்கள்

- பலியிடுதல்

ஒருவன் ஆட்டைப் பிடித்திருப்பது போலவும் ஒரு பெண் மண்டியிட்டிருப்பதாகவும் ஒருவன் வாளை ஓங்குவது போலவும் காணப்படும் முத்திரை

- நிவேதன வழிபாடு

படைக்கும் தட்டுக்களை ஏந்தியவாறு காணப்படும் முத்திரை

12. சிந்துவெளி மக்களின் வாழக்கை முறைகளைக் குறிப்பிடுக.

- முக்கிய தொழில் வாணிபம் (முத்திரைகள், மட்பாண்டங்கள், கருவிகள் போன்றன) சுமேரியா, மொசப்பத்தேமியா எகிப்து நாடுகளுடன்
- கப்பல் கட்டுதல், தச்சுத்தொழில், சிற்பத்தொழில் கைவினைத் தொழில்
- ஆண்கள் மேலாடை அணிந்துள்ளனர்.
- ஆணின் உடற்பகுதி ஒன்றில் பூவேலைப்பாடுடன் கூடிய ஆடை காணப்பட்டது.

13. சிந்து வெளிக்கால கலை வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக.

- கட்டிடக்கலை

- மாளிகை போன்ற கட்டிட அமைப்புகள்
- களஞ்சிய அறை
- நீராடுகின்ற குளம்
- மாடி வீடுகள்
- செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன
- நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன
- 242 அடி நீளமும் 112 அடி அகலம் கொண்டதாக கட்டிடம் ஒன்று காணப்பட்டது.

- சிற்பக்கலை
  - மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் பல சிற்ப வடிவங்கள் காணப்பட்டன.

## 04 - வேதங்கள்

01. வேத காலத்தினைக் குறிப்பிடுக.
கி.மு 1500 – கி.மு 600

02. வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
அறிவு

03. திரையீ வித்யா என சொல்லப்படும் வேதங்கள் எவை?
இருக்கு, யசூர், சாமம்

04. வேதங்களின் வேறு பெயர்கள் 5 தருக.

1. எழுதாமறை } ஏட்டில் எழுதப்படாதவை
2. எழுதாக்கிளவி } ஏட்டில் எழுதப்படாதவை
3. சுருதி – செவி வழியாகப் பேணப்பட்டவை
4. அபௌருஷேயம் - மனிதனால் ஆக்கப்படாதவை
5. ஆம்நாயம் - இறைவனால் அருளப்பட்டது.

05. இருக்கு என்பதன் பொருள் யாது?
பாட்டு

06. இருக்கு வேதத்தில் 2ஆம் மண்டலம் - 7ஆம் மண்டலப் பாடல்களை இயற்றியோர் யாவர்?
கிருத்ஸமதர், விசுவாமித்திரர், வாமதேவர், அத்திரி, பரத்துவாசர், வசிட்டர்

07. செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்த மந்திரங்களை கொண்ட வேதம் எது?
யசூர் வேதம்

08. இருக்கு வேதம் எத்தனை மண்டலங்களை கொண்டுள்ளது?
10 மண்டலங்கள்

09. இருக்கு வேதம் எத்தனை சூக்தங்களைக் கொண்டுள்ளது?
1028 சூக்தங்கள்

10. யசூர் வேதம் எத்தனை சாகைகளைக் கொண்டுள்ளது?
101

11. அதர்வ வேதம் கொண்டுள்ள காண்டங்களின் தொகை யாது?
20 காண்டங்கள்

12. அதர்வ வேதம் கொண்டுள்ள சூக்தங்களையும், பாடல்களின் தொகையையும் தருக.
731 சூக்தம், 6000 பாடல்

13. அதர்வ வேதத்தின் வேறு பெயர்கள் எவை?
அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ், பிரம வேதம்

14. வேதங்களின் நான்கு பகுதிகளும் எவை?
சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம்

15. சாம வேதம் எத்தனை பாடல்களை கொண்டுள்ளது?
1875

16. சாம வேதம் கொண்டுள்ள பிரிவுகள் யாவை?
ஆர்ச்சிகம் (பாடல்களின் முதல் தொகுதி)
உத்தர ஆர்ச்சிகம் (பாடல்களின் பின் தொகுதி)

17. வேதங்களின் நான்கு பகுதிகளையும் விளக்குக.
சங்கிதை - மந்திரங்களின் தொகுப்பு
பிராமணங்கள் - வேள்வி, கிரியைகளுக்குரிய விதிகளை கூறுபவை
ஆரணியம் - வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்களை எடுத்துரைப்பவை
உபநிடதம் - உண்மைப் பொருள் பற்றிய விசாரணை

18. வேதத்தில் கரும காண்ட பகுதி எது?
சங்கிதை, பிராமணம்

19. ஆரணியம் எந்த காண்டம்?
உபாசனை காண்டம்

20. ஞான காண்ட பகுதி எது?
உபநிடதம்

21. சவித்திரு எனும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய மந்திரம் எது?
காயத்திரி மந்திரம்

22. சதருத்திரியம் எனும் பகுதியில் உருத்திரனுக்கு பல நாமம் கூறி வழிபடும் முறை எந்த வேதத்தில் உள்ளது?
சுக்கில யசூர் வேதத்தில்

23. சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வேதம் எது?
அதர்வண வேதம்

24. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வ செழிப்பை கொடுக்கும் மந்திரம் எது?
பௌஷ்டிகாணி

25. நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரம் எது?
பேஷஜானி

26. நால்வகை வருணப் பற்றி கூறும் வேதம் எது?

இருக்கு வேதம் - புருஷ சூக்தம்

27. இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பம் எவ்வேதத்தில் எந்த சூக்தத்தில் காணப்படுகின்றது.
இருக்கு வேதம் - நாஸதீய சூக்தம்

28. ரிதத்துக்குரிய பொறுப்புடையவன் என்பதால் வருணன் கொண்ட பெயர் யாது?
ரிதஸ்வான், ரிதஸ்ய கோபா

29. பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான விடயங்களைக் கொண்டுள்ள சூக்தங்கள் எவை?
நாஸதீய சூக்தம், (ஜம) யம சூக்தம், வருண சூக்தம்

30. ஆன்மாவின் இறப்பிற்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள் அதன் பயன் பற்றி கூறும் சூக்தம் எது?
இருக்கு வேதம் - யம சூக்தம்

**பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்**

01. வடமொழி இலக்கிய வரலாற்றில் வேதங்களை அடுத்து முக்கிய பகுதியாக காணப்படுவது எது?
பிராமணங்கள்

02. தேவர்களை விளிப்பதற்கு உதவியாக அமைவது எது?
மந்திரங்கள் (சங்கிதை)

03. பிராமணம் எச்சொல்லில் இருந்து வந்தது?
பிரமம், பிராமண

04. வேள்வித்துறையில் வல்லவர்கள் கிரியைகள் பற்றி விரித்துரைக்கும் பகுதி எது?
பிராமணங்கள்

05. மந்திரங்களுக்கு உரை போன்று அமைந்தவை எவை?
பிராமணங்கள்
06. பிராமணங்களின் மூன்று பகுதியும் எவை?
1. சங்கிதை - மந்திரங்களின் பொருள் முதலியவற்றைக் கூறும் பகுதி
2. ஆரணியகம் - ஆச்சிரம தர்மங்கள் பற்றிக் கூறும் பகுதி
3. உபநிடதம் - விடுதலை பெறும் வழி

07. மந்திரங்களின் பொருள் முதலியவற்றை கூறும் முற்பகுதி எது?
சங்கிதை

08. வானப்பிரஸ்தம், ஆச்சிரம தர்மங்கள் பற்றி கூறும் பகுதி எது?
ஆரணியங்கள்

09. ஒருவன் ஆசிரியனை நாடிச்சென்று உபதேசம் பெற்று விடுதலையைப் பெறும் வழியைக் கூறுவதாக அமைவது எது?
உபநிடதம்

10. இருக்கு வேதம் சார்ந்த பிராமணங்கள் எவை?
1. ஐதரேய பிராமணம்
2. கௌஷீதகீயப் பிராமணம்

11. கிருஷ்ண யசுர் வேதத்தின் பிராமணம் எது?
தைத்திரீயப் பிராமணம்

12. சுக்கில யசுர் வேத்திற்கான பிராமணம் எது?
சதபத பிராமணம்

13. சாமவேதம் சார்ந்த பிராமணங்கள் எவை?

- தாண்டிய மகா பிராமணம்
- சட்விம்ச பிராமணம்
- ஜைமிநீய பிராமணம்
- பஞ்சவிம்சதி பிராமணம்
- சாந்தோக்கிய பிராமணம்

14. அதர்வ வேதம் சார்ந்த பிராமணம் எது?
கோபதப் பிராமணம்

15. பிராமணங்களில் போற்றப்பட்ட தெய்வங்கள் யாவை?

- இந்திரன்
- அக்கினி
- விஷ்ணு
- உருத்திரன்
- பிரஜாபதி – முக்கிய தெய்வம்

16. தகுதியற்றவர்கள் கேட்பதன் மூலம் இழப்புக்கள் ஏற்படும் என்பதால் காட்டிலே கற்பிக்கப்பட்ட நூல் எது?
ஆரணியங்கள்

17. ஆரணியங்களின் வேறு பெயர் ஒன்று தருக.
வன நூல்

18. ஆரணியங்களில் இன்று கிடைக்கக் கூடியனவாக உள்ளவை எவை?

- ஐதரேய ஆரணியகம்
- கௌஷீதகி ஆரணியம்
- நைத்திரீய ஆரணியம்

19. ஆரணியங்கள் பற்றிய சிந்தனை தோன்றுவதற்கான காரணங்கள் யாவை?

- வேள்விகள் எதிர்பார்த்த பயனை விளைவிக்க வல்லன அல்ல என்ற நம்பிக்கை
- உண்மையான உறுதிப்பொருள் உண்டு என்ற பூரணமான நம்பிக்கை
- உறுதிப்பொருளை நோக்கி நடக்க முற்படல்
- துறவு, அனுபூதி, உறுதிப்பொருள் பற்றிய சிந்தனைகள் மீட்டுருவாக்கம் பெற்றன.

20. உபநிடதம் வேதங்களின் இறுதிப்பகுதியாக அமைவதால் பெற்ற பெயர் யாது?
வேதாந்தம்

21. உபநிடதம் தோன்றிய காலம் எது?

கி.மு 6 ஆம் ஆண்டு

22. பிரதானமான உபநிடதங்கள் எத்தனை?
108

23. உபநிடதம் என்பதன் பொருள் யாது?
உப + நி + சத் ➞ குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற கோட்பாடுகளை சிரத்தையுடன் கற்றல்
பிரமஞானத்தை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியரின் அடியில் நெருங்கியிருந்து மறைபொருட் கோட்பாடுகளை சிரத்தையுடன் கேட்டல்

24. முந்திய கால உபநிடதங்கள் 2 தருக.
பிருகதாரணிய, சாந்தோக்கிய

25. செய்யுள் நடையில் அமைந்த உபநிடதங்கள் 2 தருக.
சுவேதாஸ்வர, கட

26. பிரமம் என்பதன் பொருளைத் தருக.
பிரஹ் - என்ற விகை அடியாகப் பிறந்தது. இதன் பொருள் வளர்தல், பெருகுதல், பரவுதல்

27. தஜ்ஜலன் என்பதன் பொருள் யாது?
தஜ் - அது, ஜீ – உலகத்தை தோற்றுவிப்பது, லி – தன்னுள் ஒடுங்குவது, அன் - தாங்குவது அதாவது உலகின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருப்பது

28. பிரமத்தின் தன்மைகள் 5 தருக.
1. அனைத்திற்கும் அடிப்படையானது.
2. சொல்லால் விளக்க முடியாதது.
3. உலகையும் உடலையும் இயக்குவது.
4. சத்தியமானது.
5. ஞானமுடையது.
6. அநந்தமானது.
7. பரிபூரணமானது

29. ஆத்மாவே பிரமம் எனும் பொருளைத் தரும் உபநிடத மகாவாக்கியங்கள் 2 தருக.
1. தத்துவமசி
2. அகம்பிரமாஸ்மி

30. உயர் பிரமம் ஒன்றே உண்மை அதற்கு அப்பால் எதுவும் இல்லை என கூறும் உபநிடதம் எது?
பிரசின உபநிடதம்

31. பிரமம் இரண்டற்றது எனக்கூறும் உபநிடதம் எது?
சாந்தோக்கிய உபநிடதம்

32. "இந்த உலகின் அடி யாது? இவ்வுலகம் எதனால் தோன்றி எதனால் இயங்கி, எதில் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம்" எனக் கூறும் உபநிடதம் எது?
பிருகதாரணிய உபநிடதம்

33. பிரமக் கோட்பாட்டை விளக்கும் உத்திகளும் உதாரணங்களையும் தருக.
உதாரணம் - ஆலம் விதை, உப்பு நீர், சிலந்தி, நெருப்புத்தழல்
கதை கூறல் - தைக்கு என்னும் வண்டிகாரன் கதை சத்தியகாமன்

ஜயபாலன் கதை

உரையால் முறை - யாக்ஞுவல்லியர், மைத்திரேயி உத்தலாகர் - சுவேதகேது

தர்க்கித்தல் - ஐயம் தெளிதல், செயல் முறைக் கல்வி ஆகிய உத்திகள் பின்பற்றப்பட்டன

34. ஆன்மா சிற்றறிவுடையதால் எவ்வாறு அழைக்கப்படும்?
அபரவித்யா

35. ஆன்மா மூடப்பட்டுள்ள 5 கோசங்களும் யாவை?
1. அன்மையகோசம்
2. பிராமணமயகோசம்
3. மனோமயகோசம்
4. விஞ்ஞானமயகோசம்
5. ஆனந்தமய கோசம்

36. ஆன்மாவின் இயல்புகள் 5 தருக.
1. உருவமற்றது கண்ணால் காண முடியாது.
2. வண்டியில் கட்டப்பட்ட குதிரை போல உடலை ஆன்மா இயக்குகின்றது.
3. ஆன்மா அஞ்ஞானத்தில் மூழ்கி உழல்வதால் அறியாமை அடைகின்றது. அதனால் தீவினை செய்து பிறவியில் அகப்படுகின்றது.

37. ஆன்மா வெவ்வேறு உடலில் பிறவி எடுப்பதற்கு உபநிடதம் குறிப்பிடும் உதாரணம் எவை?
பொன்கட்டியில் இருந்து ஆபரணங்கள் தோன்றுவது போல, நெற்கதிர் முற்றி உதிர்ந்து மீண்டும் முளைப்பது போல, புழு புல்லின் நுனியில் இருந்து வேறு புற்களுக்குத் தாவுவது போல குறிப்பிடப்படுகின்றது.

38. பிரமஞானத்தை பெறுவதற்கான வழிகள் எவை?
1. சிரவணம்
2. மனனம்
3. நித்தியாசனம்

39. பிரமத்திலிருந்து பிரபஞ்சம் தோன்றியமை பற்றிய உவமைகளைத் தருக.
நிலத்தில் தாவரங்கள் தோன்றுவது போல்
ஒருவரின் உடலில் உரோமங்கள் எழுவது போல
தீயிலிருந்து வெப்பம் தோன்றுவது போல
சிலந்தியிலிருந்து வலை தோன்றுவது போல

40. மறுப்பிறப்பு பற்றி உபநிடதம் கூறும் உதாரணம் யாது?
புழுவானது ஒரு புல்லின் நுனியில் இருந்து வேறு புற்களுக்குத் தாவுவது போல
பழைய ஆடையை கழைந்துவிட்டு புதிய ஆடையை அணிவது போல
ஆன்மா பழைய உடலை கழைந்து புதிய உடலை எடுக்கிறது

**மேலதிக பயிற்சிகள்**
**உபநிடதங்கள்**

1. உபநிடதம் என்பதன் பொருள்
   - உப + நி + சத் → குருவுக்கு மிக அண்மையிலிருந்து கேட்டல்.
   - பிரமஞானத்தை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியரின் அடியிலிருந்து மறைபொருட் கோட்பாடுகளைச் சிரத்தையுடன் கேட்டல்.
   - சீடன் குருவை நெருங்கியிருந்து ஞான உபதேசம் பெறுவதைக் குறிக்கும்.

2. உபநிடதங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
   - வேதங்களின் ஞான காண்டப்பகுதி
   - கிரியைகளின் விளக்கமாக எழுந்தவை
   - 108 உபநிடதங்கள் பிரதானமானவை
   - அறிவு வழியால் இறைவனை வழிபட எழுந்தவை
   - உபநிடதங்கள் பொதுவாக வினா விடை முறையில் எழுந்தவை. குரு – சீட முறையில் உரையாடல்கள் காணப்படுகின்றன.
   - உபநிடதங்கள் பிரம்ம, ஆன்மாவின் உண்மைத்தன்மை பிரபஞ்சம், கன்மம், மறுபிறப்பு, முத்தி, முத்தி அடைவதற்குரிய ஞானமார்க்கம் ஆகியன பற்றியே விளக்கங்களைக் கொண்டுள்ளன.
   - இந்துமத தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைந்தவை

3. உபநிடத மகா வாக்கியங்கள் எவை?
   1. தத்துவமஸ்மி - நீ பிரம்மாய் இருக்கிறாய்
   2. அகப்பிரம்மஸ்மி - நான் பிரமமாய் இருக்கிறேன்
   3. சோகமஸ்மி - எல்லாமே பிரமமாய் இருக்கிறது.

4. உபநிடதம் கூறும் பிரமம் பற்றிய கருத்துக்கள் எவை?
   - பிரஹ் → தோன்றுதல் அல்லது வளர்தல் எனப் பொருள்படும்.

பிரமம → தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமான பொருள்

   - விளக்க, வர்ணிக்க முடியாத பொருள்
   - கிருஷ்டிக்கு ஆதாரமானது அழிவற்றது
   - தடிப்பானதுமல்ல, நுண்ணியதுமல்ல, நீண்டதுமல்ல குறுகியதுமல்ல இருளானதுமல்ல, ஒளியானதுமல்ல, சொல்லால விளக்க முடியாதது.
   - நீரில் உப்பு போல வியாபித்திருப்பது
   - இருநிலை
     1. சகுணநிலை - உலகத்தோடு கலந்த நிலை (தஜ்ஜலன்)
     2. நிர்க்குணநிலை - உலகத்துக்கப்பாற்பட்ட நிலை
   - சத்தியமானது, ஞானமுடையது, அநந்தமுடையது
   - சாந்தோக்கிய உபநிடதம் - பிரமம் சத்தியமானது, ஞானமானது, ஆனந்தமானது
   - முண்டக உபநிடதம் - அனைத்தும் பிரமம்
   - பிரசன்ன உபநிடதம் - உயர் பிரமம் ஒன்றே உண்மை
   - சாந்தோக்கிய உபநிடதம் - பிரம்மம் இரண்டற்றது
   - பிரசதாரண்ய உபநிடதம் - இவ்வுலகம் எதனால் தோனி எதனால் இயங்கி, எதில் ஒடுங்குகின்றதோ அது பிரம்மம்

- பிரம்மம் - பரிபூரணமானது, மாறாத்தன்மையுடையது, குணமற்றாதது, எல்லையற்றது, உலகை இயக்கும் பேரறிவுடைய பொருள்
- பிரமக்கோட்பாட்டை விளக்கும் உத்திகள்
  - ➢ உதாரணம் காட்டல் - ஆலம்விதை / உப்பு நீர் / நெருப்புத்தழல்
  - ➢ உரையாடல் முறை
  - ➢ கதை கூறுதல்
  - ➢ தர்க்கித்தல்
  - ➢ ஐயம் தெனிதல்

5. உபநிடதம் கூறும் ஆன்மா பற்றிய கருத்துக்களைத் தருக.

- ஜீவாத்மா என அழைக்கப்படும்
- உடம்பை இயக்கும் சக்தி
- அகம் பிரம்மஸ்மி ⟶ பிரம்மமும் ஆன்மாவும் ஒன்று
- பல கவசங்களால் மூடப்பட்டுள்ளது (தைத்ரிய உபநிடதம்)
- அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், ஆனந்தமய கோசம், விஞ்ஞானமய கோசம்
- அறிவைப்பெறும் வழிகள் ⟶ நனவுநிலை (ஐம்புலன் செயற்பாடு

கனவு நிலை (மனக்காட்சிப்பதிவு)
ஞானநிலை ( அறிவு வழி)

- வண்டியில் கட்டப்பட்ட குதிரை போல ஆன்மா சரீரத்தில் கட்டப்பட்டுள்ளது.
  - ➢ காண்பது கண்ணமல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு பார்ப்பது ஆன்மா
  - ➢ உடலினின்றும் இந்திரியங்களினின்றும் வேறானது
- எண்ணிக்கையிற் பல, உருவமற்றது, கண்ணால் காண முடியாதது
- பிரமமே பல ஜீவன்களாகத் தோற்றம் பெறுகிறது.
- வினைகளுக்கேற்பப் பிறவியெடுக்கும்
  - ➢ பொன்கட்டி ⟶ ஆபரணம்
  - ➢ நெற்கதிர் முற்றி விழுதல் ⟶ மீண்டும் முளைத்தல்
  - ➢ புல் நுனிப் புழு ⟶ வேறுபுற்களுக்குத் தாவுதல்
  - ➢ கௌஷீதகி உபநிடதம் ⟶ ஒருவன் தனது அறிவுக்கேற்பவும் சிந்தனைக்கேற்பவும் செயலுக்கேற்பவும் பிறவிகளை எடுக்கின்றான்.
- ஆன்மாக்களின் உயர்ந்த இலட்சியம் மோட்சம்

6. உபநிடதம் கூறும் கன்மம் மறுபிறுப்புக் கோட்பாட்டை விளக்குக.

- ஆன்மாக்கள் வினைகளைப் புரிவதன் மூலம் மறுபிறவிக்குட்படுகின்றன
- கன்மமும் மறுபிறப்பும் ஒன்றுக்கொன்று தொடர்பானவை
- அறியாமை காரணமாகப் பற்று வைத்து கர்மங்களைச் செய்து புண்ணிய பாவங்களையும் இன்ப துன்பங்களையும் அனுபவிக்கின்றது.
- கௌஷீதகி உபநிடதம் - ஒருவன் தனது அறிவிற்கேற்பவும் சிந்தனைக்கேற்பவும் செயலுக்கேற்பவும் புழுவாகவோ, பூச்சியாகவோ மனிதனாகவோ பிறவி எடுக்கிறான்.
- சாந்தோக்கிய உபநிடதம் - நல்லொழுக்கம் உள்ளவர்கள் நல்ல கருவிலே புகுந்து பிறவி எடுப்பர். (பிராமணர், சந்திரியர், வைசிகர்) தீயொழுக்கம் உள்ளவர்கள் கீழான பிறவியைப் பெறுவர் (சூத்திரர், பன்றி, நாய் போன்ற பிறவிகள்)

- பிருக தாரண்ய உபநிடதம் - பிறவிக்குப் பிறவி செல்லும் உயிரை புழு ஒரு புல்லின் நுனியிலிருந்து இன்னொரு புல்லுக்குத் தாவுவதற்கு ஒப்பிடுகிறது.
- நெற்கதிர் முதிர்ந்து வீழ்ந்து மீண்டும் விளைவது போல ஆன்மா மீண்டும் பிறவி எடுக்கிறது.
- நல்வினை – மோட்சம், தீவினை – நரகம்
- கட உபநிடதம் - 4 ஆம் 5 ஆம் 6 ஆம் அத்தியாயம் - நசிகேதன் - யமன் உரையாடல்
  - தவறான கிரியைகள் செய்பவர்கள் ஆனந்தமற்ற உலகுக்குச் செல்வர்.
  - உடம்பை விட்ட உயிர் வினைக்கேற்ப உடலைப்பெறும்
  - இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும்.
- பாம்பு செட்டையைக் கழற்றிப் புதிய செட்டையை உருவாக்குவது போன்றது.

7. உபநிடதங்கள் கூறும் முத்திக்குரிய வழிகளைக் கூறுக.
   - ஆன்மாக்களின் உயர்ந்த இலட்சியம் ஆன்மீக விடுதலை அல்லது மத்தி
   - முத்தி
     - விடுதலை / விடுபடுதல்
     - பிறவியிலிருந்து விடுபட்டுப் பிரமத்தோடு ஒன்றி விடுதல்
   - முத்திக்குரிய வழிகள்
   - இறை உண்மையை அனுபவித்தல் → பிரம்மத்தின் மீது உண்மையான வழிபாடு தவம் செய்தல் வேதப்பயிற்சி
     (பிரமம பற்றிய உண்மையை)
   - பிரகதாரணிய உபநிடதம்
     - சிரவணம் (கேட்டல்) → தகுந்த குருவிடம் பிரமம் பற்றி அறிதல்
     - மனனம் (சிந்தித்தல்) → பிரமம் பற்றி இடைவிடாது சிந்தித்தல்
     - நிதித்தியாசனம் (தெளிதல்) → உயர்ந்த தியானத்தின் மூலமாக தன்மைப் பிரம்மம் என உணர்தல்
   - பக்தி → அன்பு
   - ஞானம் → அறிவு

## 2.1.1 ஆகமங்கள்

- ஆகமம்
  - தொன்று தொட்டு வரும் அறிவு.
  - ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்
- ஆகமங்களை சிவபெருமானே அருளினார்.
- ஆகமங்கள் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளையுடையது.
- ஆகமங்கள் ஆலய அமைப்பு முறை, திருவுருவ வழிபாடு, கடவுள் வழிபாடு, சித்தாந்த சிந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.
- கோயில் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச் சித்தம் என நான்கு வகைப்படுத்தப்படுகின்றன.
- நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமியக்கிரியை, நிஷ்காமிய கிரியை எனவும் வகைப்படுத்துவர்.
- ஆலய மகோற்சவக் கிரியைகள் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துகின்றன.

01. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?
    - தொன்று தொட்டு வரும் அறிவு
    - ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்

02. ஆகமங்கள் வேறு எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
சிரௌதம், சுபதந்திரம்

03. சைவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
சிவாகமங்கள்

04. வைணவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
சங்கிதைகள்

05. சாக்த ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
தந்திரங்கள்

06. "வேதமோடாகமம் மெய்யாம் இறை நூல்" என குறிப்பிட்ட நூல் எது?
திருமந்திரம்

07. ஆகமங்களின் கிரியை நெறியை விளக்கி கூறும் நூல் எது?
பத்ததிகள்

08. "மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம்" என பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

09. சைவ ஆகமங்களின் பொருளை விளக்குக.

- ஆ-பசு, க-பதி, ம-பாசம் அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்.
- ஆ-சிவஞானம், க-மோட்சம், ம-மலநாசம்
- அதாவது மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது

10. சிவாகமங்கள் எத்தனை?
28

11. சிவாகமங்கள் ஒவ்வொன்றும் கொண்டுள்ள நான்கு பிரிவுகளும் எவை?
(1) சரியா பாதம்
(2) கிரியா பாதம்
(3) யோக பாதம்
(4) ஞான பாதம்

12. சரியா பாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
பிராயசித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு, உமா மகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்

13. கிரியா பாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
மந்திரம், உற்சவம், நித்திய நைமித்தியம், காமிய கிரியைகள், சிவசின்னங்கள் அணியும் முறை

14. அட்டாங்க யோகம், அட்டமா சித்திகள், அறுவகை ஆதாரங்களை கூறும் பாதம் எது?
யோக பாதம்

15. முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம் பற்றி கூறும் பாதம் எது?
ஞான பாதம்

16. ஞான பாதம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
ஆகமாந்தம்

17. ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி கூறும் ஆகமம் எது?
காமிக ஆகமம் - பிரகார லட்சண விதிப்படலம்

18. திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லை தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் கூறும் பகுதி எது?
சிலாபரீட்சணம்

19. கர்ஷணம் என்றால் என்ன?
ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை பண்படுத்துதல்

20. "திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல" என்று கூறும் நூல் எது?
சுக்கிர நீதி

21. "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே" என பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

22. ஆலய கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?
பிராயசித்தம்

23. சிவாகமங்களில் சைவ சித்தாந்தம் கருத்து கூடுதலாக உள்ள பாதம் எது?
யோக பாதம், ஞான பாதம்

24. சித்தாந்த கருத்துக்கள் அதிகமாக உள்ள ஆகமங்கள் எவை?
கிரணம், ரௌரவம், பௌஷ்கரம்

25. அட்டாங்க யோகங்கள் எவை?
இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி

26. அட்டமா சித்திகள் எவை?
அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம்

27. சாக்த ஆகமங்கள் எத்தனை?
77

28. வைணவ ஆகமங்கள் எத்தனை?
108 / 218

29. வைணவ ஆகமங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
தந்திரம், சங்கிதை, பாகவத சாத்திரம்

30. வைகாசன மரபை தொகுத்தவர் யார்?
வைதிக ரிஷி விகாணஸ்

31. சிவாகமங்கள் 28 எவை?

| | | |
|---|---|---|
| 01. காமிகம் | 11. விஜயம் | 21. புரோற்கீதம் |
| 02. யோகம் | 12. நிச்சுவாசம் | 22. லளிதம் |
| 03. சிந்தியம் | 13. சுவாயம்புவம் | 23. சித்தம் |
| 04. காரணம் | 14. ஆக்கிநேயம் | 24. சந்தானம் |
| 05. அசிதம் | 15. வீரம் | 25. சருவோக்தம் |
| 06. தீப்தம் | 16. ரௌரவம் | 26. பாரமேசுரம் |
| 07. சூக்குமம் | 17. மகுடம் | 27. கிரணம் |
| 08. சகச்சிரம் | 18. விமலம் | 28. வாதுளம் |
| 09. அஞ்சுமான் | 19. சந்திர ஞானம் | |
| 10. சுப்பிரபேதம் | 20. முக விம்பம் | |

32. சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியைகளின் நான்கு பிரிவுகளையும் விளக்குக.

- கர்ஷணம்

ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல்

- பிரதிட்டை

ஆலயத்தில் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்தல்

- உற்சவம்

ஆலயத்தில் வருடமொருமுறை இடம்பெறும் உற்சவம் / திருவிழா

- பிராயச்சித்தம்

ஆலயக் கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

33. நித்திய, நைமித்திய, காமிய, நிஷ்காமி கிரியைகள் என்பதற்கு விளக்கம் தருக.

- நித்திய கிரியை

தினமும் நடைபெறுவது பன்னிரண்டு காலம் வரையும் இடம்பெறலாம்.

- நைமித்திய கிரியை

விசேட நாட்களில் நித்திய கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் கிரியைகள்

- காமிய கிரியை, நிஸ்காமிய கிரியை என்பவற்றை விளக்குக.

நித்திய நைமித்திய கிரியைகளை பயன் கருதிச் செய்யப்பட்டால் காமியக்கிரியை. பயன் கருதாமல் செய்யப்பட்டால் நிஸ்காமியக்கிரியை

34. மகோற்சவக் கிரியைகள் உணர்த்தும் தத்தவத்தை விளக்குக.

- கொடியேற்றத்திற்கு முன் நடைபெறும் மிருகச் சங்கிரணம் அங்குரார்ப்பணம், கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, பேரிதாடனம், சமஸ்த தேவாகனம்
    - கொடியேற்றம் - படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன
    - வாகத்திருவிழா. ஓமம், பலி – காத்தல் தொழிலை உணர்த்துகின்றன
    - சூர்ணோற்சவம், இரதோற்சவம் - அழித்தல் தொழிலை உணர்த்துகின்றன
    - மௌனோற்சவம் - மறைத்தல் தொழிலை உணர்த்துகின்றன
    - தீர்த்தோற்சவம் - அருளல் தொழிலை உணர்த்துகின்றன

- கொடியேற்றப்படாத நிலையில் கொடிமரம் பதியின் சொரூப நிலையை உணர்த்துகின்றன.
    - கொடியேற்றப்பட்டபின் கொடி மரம் பதியின் தடத்த நிலையின் ஆன்மாக்களின் பொருட்டுச் செயற்படுவதனைக் காட்டுகிறது.
    - கொடிமரம் - பதியையும்

கொடிச்சீலை - பசுவையும்

மஞ்சட் கயிறு - திருவருட்சக்தியையும்

தருப்பைக்கயிறு - பாசத்தையும்

சுட்டி நிற்கின்றன.

- ➢ ஆன்மாவானது பாசத்திலிருந்து விடுபட்டு திருவருட் சக்தியின் உதவியுடன் இறைவனை அடைதலாகிய முத்திப் பேற்றினைப் பெறுதல் என்பதையே கொடியேற்றம் உணர்த்தி நிற்கின்றது.
- ➢ மகோற்சவத்தின் போது தினமும் சுவாமி வெளிவீதி வலம் வருதல் இறைவன் சாம்பவ தீட்சையை ஆன்மாக்களுக்கு அளிப்பதாகக் கூறப்படுகிறது.

## 06 - இதிகாசங்கள்

- இதி + ஹ + ஆசம் - இவ்வாறு எங்கும் பிரசித்தமாகி இருப்பது
- இதிகாசங்கள் - இராமாயணம்
  - மகாபாரதம்
  - சிவரகசியம்
  - வித்யாரகசியம்
  - பிரஹ்மஜ ஞானசுகோதயம்
- இதிகாசங்கள் ஐந்தாம் வேதம் எனப்படுகிறது.
- மகாபாரதம், இராமாயணம் இந்துப் பண்பாட்டின் மூலங்களாக அமைகின்றன
- இந்து சமயத்தின் கலைக்களஞ்சியங்கள்
- கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பு தோற்றம் பெற்றாலும் குப்தர் காலத்திலேயே இறுதி வடிவம் பெற்றது.
- இந்து சமுதாய மாற்றங்கள் பற்றி எடுத்துரைப்பவை.
- மகாபாரதத்தின் ஒரு பகுதியான “பகவத்கீதை” உலகப் புகழ் பெற்றது.
- மகாபாரதம், விஸ்ணுவை முதன்மைப்படுத்துவதாகும்.
- மகாபாரதம், இராமாயணம் என்பன வழிபாடு, வாழ்க்கை நெறி, தல மகிமைகள், அறம் வெல்லும், ஒழுக்கப் பண்புகள் என்பவற்றைக் கொண்டுள்ளன.
- நட்பு, தவம், அரச உபாயம் என்பன சிறப்பாகப் போதிக்கப்படுகின்றன.
- இந்துக்களின் விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், யுத்த தர்மம், ஆச்சிரம வாழ்க்கை முறைகள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன.
- பக்தி மார்க்கத்திற்கு முதன்மை

01. இதிகாசங்கள் எவை?
மகாபாரதம், இராமாயணம், சிவ ரகசியம்

02. ஐந்தாம் வேதம் என அழைக்கப்படுவது எது?
மகாபாரதம்

03. இதிகாசங்கள் இறுதி வடிவம் பெற்ற காலம் எது?
குப்தர் காலம்

04. மகாபாரதம் எத்தனை பர்வங்களை கொண்டுள்ளது?
18

05. மகாபாரதம் கொண்டுள்ள சுலோகங்களின் தொகை யாது?
ஆதிபர்வம் - மோட்ச பர்வம் வரை ஒரு இலட்சம் சுலோகம்

06. மகாபாரதம் எழுந்த காலமாக அமைவது?

கி.மு 6 ஆம் நூற்றாண்டு

07. கிருஷ்ண அவதாரத்தை வெளிப்படுத்தும் தத்துவ இலக்கியமாகவும் யோக நூலாகவும், பக்தி நூலாகவும் அமைவது எது?
பகவத் கீதை

08. மகாபாரதத்தின் அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் பற்றி கூறப்படும் பகுதி எது?
சாந்திப்பருவம்

09. இராமாயணத்தை வடமொழியில் எழுதியவர் யார்?
வான்மீகி

10. இராமாயணத்தின் ஏழு காண்டங்களும் எவை?
1. பால காண்டம்
2. அயோத்தியா காண்டம்
3. ஆரண்ய காண்டம்
4. கிஷ்கிந்தா காண்டம்
5. சுந்தர காண்டம்
6. யத்த காண்டம்
7. உத்தர காண்டம்

11. இராமாயணம் எத்தனை சுலோகங்களை உடையது?
24000

12. இராமாயணம் தொகுக்கப்பட்ட காலம் எது?
கி.பி 2ஆம் நூற்றாண்டு

13. இராமாயணத்தை இந்தி மொழியில் பாடியவர் யார்?
துளசி தாசர்

14. இந்து சமய நெறியின் அடிப்படையான இலக்கியம் எது?
மகாபாரதம்

15. இந்து தர்ம நெறிக்கும், மானுட விழுமியங்களுக்கும் அடிப்படையாக இலக்கியம் எது?
இராமாயணம்

16. இந்து சமய மரபில் இதிகாசங்கள் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

- இதிகாசம் - இவ்வாறு எங்கும் பிரசித்தமாகி இருப்பது
- ஐந்தாம் வேதம் எனப்படுகிறது
- இராமாயணம் - ஸ்ரீவான்மீகி முனிவர்
- தமிழில் கம்பராமாயணம் - கம்பர்
- 24000 சுலோகங்கள் - 7 காண்டங்கள், 500 சருக்கங்கள்
- சமயச்சிந்தனைகள், தத்துவக்கருத்துக்கள், ஞானிகளின் வரலாறு, தவத்தின் பெருமை, தர்மத்தின் சிறப்பு, விரதம், யாகங்கள் பற்றி எடுத்துரைக்கின்றன.
- சமயக்கருத்துக்கள்
- பகீரதன் வரவழைத்த கங்கையை சிவன் அடக்கித் தலையில் வைத்தமை. சிவ வழிபாடு பற்றி உத்தர காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- தேவர்களைக் காப்பாற்ற விஷம் அருந்தியமை
- முப்புரம் எரித்த வரலாறு

- கௌசலை சிவனை வழிபட்டமை
- இராவணன் ஒரு சிவபக்தன்
- இமவான் சிவனுக்கு உமையைக் கன்னிகாதானம் செய்த தகவல்கள்
- மகாலட்சுமியே சீதையாக அவதாரம் செய்தமை
- விஷ்ணுவின் அவதாரக்கோட்பாடு
- நாராயண வழிபாடு
- பால காண்டம் - முருகனது தோற்றம், வளர்ப்பு, தேவசேனாதிபதியாகப் போர் புரிதல்
- மர வழிபாடு - சீதை சியாமா என்னும் ஆல மரத்தை வழிபட்ட தகவல்
- நதி வணக்கம் - ஜாந்நவி என்னும் கங்கையை இராமலக்குமணர் தரிசித்தமை
  - கங்கை யமுனை சங்கமம் புனித தீர்த்தம்
  - நர்மதி நதியை சீதை வணங்கியமை
- ரிசிபரம்பரை - வசிட்டர், விசுவாமித்திரர்
- பசு வணக்கம்
- யாகங்கள், கிரியைகள் பற்றிய செய்திகள்
- விழாக்கள் - முடிசூட்டு விழா, இந்திரத்துவ விழா
- நால்வகைப் புருடார்த்தங்கள்
- கர்மம் மறுபிறப்புப் பற்றிய கருத்துக்கள்
- பிரம்மஹத்தி தோசம் நீங்க இராமன் சிவலிங்க வழிபாடு செய்தமை
- சரணாகதி தத்துவம் - அனுமான், விபீடணன்

**மகாபாரதம்**

- அரசியல்
  - வேதம் கூறுகின்ற அரசநெறியின் தொடர்ச்சி
  - தர்மத்தை நிலை நாட்டுவது இராஜதர்மத்தின் குறிக்கோள்
- சமயம் சார் விடயங்கள்
  - திரிமூர்த்திக் கோட்பாடு – சிவன் - சகஸ்ரநாம வழிபாடு
  - அரிச்சுனன் பாசு பதாஸ்திரம் பெற்றமை
  - விஷ்ணுவின் அவதாரக் கொட்பாடு
  - பகத்கீதை - இறைவன், உலகம், ஆன்மீக விடுதலை போதனை
  - துஷ்ட நிக்கிரக சிஸ்ட பரிபாலனம்
  - துர்க்கை வழிபாடு - துர்கை மந்திர உச்சாடனம் பற்றிய குறிப்புகள்
  - முருக வழிபாடு - முருகனை வழிபடுதல், தலயாத்திரை, தருமன் முருகனை வழிபட்ட குறிப்புகள்
  - சூரிய வழிபாடு - குந்திதேவியார் வணங்கிய குறிப்புகள்
  - கிரியைகள் பற்றிய குறிப்புகள்
- வழிபாடு
  - தலயாத்திரை, தவம், மந்திர உபாசனை, தானம், விரதம், வேள்வி, யாகம், தோத்திரம் பாடுதல், ஆச்சிரம தர்மங்கள், புருடார்த்தங்கள்
  - உருவ வழிபாடு
- வாழ்க்கை நெறி
  - தர்மம் வெல்லும்
  - ஒழுக்கப் பண்புகள்
  - வாழ்க்கை இலட்சியங்கள்

சத்தியம், நீதி, தவம், பொறுமை, தருமம், பக்தி, பாசம், நன்றி மறவாமை, நட்பு

# 07 - புராணங்கள்

01. புராணம் என்பதன் பொருள் யாது?
பழமை வாய்ந்தது
– "பூரணாத்புராணம் இதி உச்சயதே" – முழுமையானதால் புராணம்

02. புராணங்களை தோற்றுவித்தவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?
பௌராணிகர்

03. புராணங்கள் முழு வடிவம் பெற்ற காலத்தை குறிப்பிடுக.
குப்தர் காலம்

04. புராணங்களின் பகுப்பு முறையைக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| சிவ புராணம் | - 10 | 18 |
| விஷ்ணு புராணம் | - 04 | |
| அக்கினி புராணம் | - 01 | |
| சூரிய புராணம் | - 01 | |
| பிரம புராணம் | - 02 | |

05. வடமொழிப் புராணங்கள் எத்தனை
18

06. பதினென் புராணங்களையும் குறிப்பிடுக.
1. சிவ புராணம்
2. ஸ்கந்த புராணம்
3. லிங்க புராணம்
4. கூர்ம புராணம்
5. வாமன புராணம்
6. வராக புராணம்
7. பவிஷ்ய புராணம்
8. மத்ஸய புராணம்
9. மார்க்கண்டேய புராணம்
10. பிரமாண்ட புராணம்

விஷ்ணு புராணம் - 04
1. விஷ்ணு புராணம்
2. கருட புராணம்
3. பாகவத புராணம்
4. நாரத புராணம்

பிரம புராணம் - 02
1. பிரம புராணம்
2. பத்ம புராணம்

சூரிய புராணம் - 01
1. பிரம கைவர்த்த புராணம்

அக்கினி புராணம் - 01
1. ஆக்னேய புராணம்

07. வடமொழி புராணங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
மகா புராணங்கள்

08. மகா புராணங்கள் எந்த மொழியில் அமைந்தவை?
சமஸ்கிருத மொழி

09. "சூதர் ஓதிய மூவாறு தொல்கதை" என்ற புராணக்கதை பற்றி குறிப்பிடும் நூல் எது?
கந்த புராணம்

10. பஞ்ச இலட்சணங்கள் எவை?

1. சர்க்கம் - படைப்பு
2. பிரதி சர்க்கம் - மீள் படைப்பு
3. வம்சம் - வம்ச பரம்பரை
4. வம்சானு சரிதம் - வம்சங்களின் வரலாறு
5. மனுவந்தரம் - மனுக்களின் காலம்

11. பஞ்ச இலட்சணம் தவிர்த்த மேலும் 10 இலட்சணங்களில் அடங்குபவை எவை?

1. முக்தி
2. கேது
3. ரக்ஷா
4. அபாரஷய
5. விருத்தி

12. பாவச் செயல்கள் அதன் பிராயசித்தம் என்பவற்றை கூறும் புராணம் எது?
கருட புராணம்

13. யம சங்காரம், பக்தியின் சிறப்பு கூறப்படும் புராணம் எது?
மார்க்கண்டேய புராணம்

14. பூரணாத் புராணம் இதி உச்சயதே என்பதன் பொருள் யாது?
முழுமையானதால் புராணம்

15. ஆன்ம வினைகள், ஆன்ம அருள், ஆன்ம விடுதலை போன்ற விடயங்களை கூறும் இலட்சணங்கள் எவை?
முத்தி, ஹேது, ரக்ஷா, அபாரஷ்ய

16. இந்து சமய அறிவை வளர்க்கப் புராணங்கள் உதவுமாற்றினை விளக்குக.

- சமயக் கருத்துக்களை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.
- விரத அனுட்டானங்கள், புண்ணிய யாத்திரைகள், மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிய விளக்கங்கள்
- கிரியை பற்றிய விளக்கங்கள், யாகங்கள் பற்றி தகவல்கள்
- இறைகொள்கை, இறைவனின் அருட் செயல்கள்
- இந்து சமூகக் கோட்பாடுகள்
- சமயம், தத்துவம், கலை, அரசியல் நீதி, ஆச்சிரம தர்மக் கடமைகள்
- இந்து சமய கலை வரலாறு பற்றிய தகவல்கள்
- விஷ்ணு தர்மேந்திரம் என்னும் பகுதி ஓவியம், நடனம், சிற்பம் ஆகிய கலைகள் பற்றிக் குறிப்பிடுகிறது. விதிகளையும் குறிப்பிடுகிறது.
- ஒழுக்கவியல் சிந்தனை வளர்ச்சி
- கூட்டுறவு, சுயநலமின்மை, உண்மை அன்பு
- தெய்வீக வரலாறுகள், தேவாசுர யுத்தங்கள்

17. புராண இலக்கியங்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

- தலபுராணங்கள், தமிழ்ப்புராணங்கள் சமய அறிவை வளர்க்கத் துணை புரிந்தமை
- கலை மரபு பேணுதல்
- திருவுருவ வழிபாடு, சிற்பக்கலை, ஓவியக்கலை
- இலக்கிய வடிவ தோற்றத்துக்க வழிவகுத்தமை
- பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் காவியங்கள்
- சமயத்தின் அடையாளம்
- சமய சின்னம், இறை நம்பிக்கையை வலுப்படுத்துதல், பக்தி, தவம், தானம், விரதம் போன்ற சமய அடிப்படைகளை விளக்குதல்.
- இந்து சமய தத்துவத்தை வெளிப்படுத்துதல்
- இந்து சமய தத்துவங்களை கதைவடிவில் கூறுவதால் பாமர மக்களுக்கு விளக்கம் ஏற்படும்.
- கந்த புராணம் - ஆணவ அழிப்பு – முத்தி
- மார்க்கண்டேய புராணம் - பக்திச் சிறப்பு

18. இந்து சமய வளர்ச்சியில் மகா புராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
    1. பொருள் விளக்கம்
    2. சமய நெறிகள்
    3. தத்துவ சிந்தனைகள்
    4. புராணங்களின் அமைப்பு
    5. முக்கியத்துவம்

1. புராதனம், பழமையான, தொன்மையானது, முன்னே நடந்தது, பழங்கதை, பழைய வரலாற்றைக் கூறும் நூல்
    - பூரணாத் புராணம் இதி உச்சயதே
    - பௌராணிகரால் வெளிப்படுத்தப்பட்டது
    - குப்தர் காலத்தில் இறுதி வடிவம்
    - கி.பி 100 – கி.பி 600

2. சமய நெறிகள்
    - அறுவகை சமய நெறிகள் பற்றி கூறுகிறது
    - திருவுருவ வழிபாடு, ஆலய வழிபாடு, மூர்த்தி, தலம், தீர்த்தம், யாத்திரை, தலம்
    - தோத்திரங்கள், தியானம், தவம், யோகம், தெய்வங்களுக்குரிய சகஸ்ர நாமங்கள் மந்திரங்கள்
    - மும்மூர்த்தி வழிபாடுகள்
    - அறுவகை சமய நெறியுடன் தொடர்புபடுத்தல். உதாரணம் சி, விஷ்ணு, சக்தி பரத்துவம்
    - அக்கினி புராணத்தில் சூரிய வழிபாடு, அக்கினி வழிபாடு, நாகு வழிபாடு
    - மார்க்கண்டேய புராணம் - சூரிய வழிபாடு
    - வாமன புராணத்தில் - சிவன், உமை, கணேசர் கதைகள்

3. தத்துவ சிந்தனைகள்
    - முழுமுதற் கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், கர்மவினை, மறுபிறப்பு, ஆன்மீக விடுதலை
    - இறை பரத்துவம் - சிவ பரத்துவம், விஷ்ணு பரத்துவம்
    - உலக உற்பத்தி பற்றி கருத்துக்கள்
    - அவதாரத்துவம் தர்மத்தை நிலை நாட்டும் நோக்கமுடையது
    - ஸ்கந்த புராணம் சுட்டும் சூரன் போர் - மும்மல அழிவு
    - மார்க்கண்டேய புராணம் - சிவ உண்மை – பக்தி
    - தெய்வீகக்கதைகள் - தெய்வீக வடிவங்கள் தத்துவ நோக்குடையது

- உலகம் பிரமனால் படைக்கப்பட்டது – பிரம்மகைவர்த்த புராணம்
- சித்தாந்த கருத்துகள்
- பிதிர் வழிபாடு, பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் - கருட புராணம்

4. வடமொழி புராணங்கள் - மகா புராணங்கள் - 18
   - உப புராணங்கள் 18 சமஸ்கிருத மொழியில் உள்ளன
   - பல இலட்சம் சுலோகங்களை உடையது
   - பஞ்ச லட்சணம், தச லட்சணம்
   - தெய்வங்களின் வரலாறுகளை கூறும்
   - பக்தி மரபு – மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதை
   - தெய்வீக தத்துவத்தை விளக்குவது

உதாரணம் - அடி முடி தேடிய கதை - சிவபரத்துவம்
அவதார கதைகள் - விஷ்ணு பரத்துவம்
மகிடாசுரனை துர்க்கை அழித்தமை - சக்தி பரத்துவம்

- திருக்கோயில் வழிபாட்டு முறை பற்றிக் கூறும்

உதாரணம் - விரதம், தீர்த்தம், தவம், தலயாத்திரை, தோத்திரம்

5. முக்கியத்துவம்
   - நண்பரை போல அறிவுரை வழங்குகிறது
   - கோயில் வழிபாடு, உருவ வழிபாடு பற்றி கூறுகிறது
   - சமய கருத்துக்களை இலகுபடுத்தியும், எளிமைப்படுத்தியும் சாதாரண பாமர மக்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் கூறுகின்றது.
   - இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படை

உதாரணம் - பிற்கால காவியங்கள்
திருமுறைகள்
திவ்விய பிரபந்தங்களுக்கு

- கலையின் வளர்ச்சிக்கு அடிப்படை

உதாரணம் -
திருவுருவ வழிபாடு, சிற்பங்கள், ஓவியக்கலைகள், நடனம்

- சமயம் - சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன

இறை நம்பிக்கையை வலுப்படுத்துவன
பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம்
சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், சக்தி – தெய்வங்களின் பரத்துவம் கூறுவன

- தத்துவம் - இந்து சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு கதைவடிவில் கூறுவன

## 08 - இயற்கை நெறிக்காலம்

"மாயோன் மேயக் காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேயத் தீம்புனல் உலகமும்
வருணன் மேயப் பெருமணல் உலகமும்"

01. இயற்கை நெறிக்கால சமயநெறி எப் பின்னணிகளில் நோக்கப்படுகின்றது?

- தமிழர் சமய நெறியின் பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் தொன்மைச் சிறப்பினைக் காட்டும் காலம்
- தமிழ் நாட்டின் ஆரம்பப் பண்பாட்டினைக் குறிக்கின்றது
- மௌரியர், ஐவனர், நந்தர் ஆகியோரின் பண்பாட்டம்சங்கள் தமிழ் நாட்டில் கலந்தமை பற்றிய குறிப்புக்கள்.
- வடமொழி இலக்கிய அம்சங்கள் கலந்த வரலாறுகள்
- அரசியல் பின்னணியில் அரசன் சமூகத்தால் ஏற்கப்பட்ட தலைவன்
- குடி மக்கள் நலன்கருதி பிராமணர்களுக்குத் தானம் வழங்கி மக்களை நீதி முறை தவறாது காத்தல்
- ஐவகை நிலங்களுக்கு ஏற்ற வாழ்க்கை அமைப்பு முறை
- மக்கள் வாழ்வில் இசை நடனம் கலந்த பண்பாடு காணப்படல்
- ஐவகை நில அமைப்பிற்கேற்ப வழிபாடுகள் காணப்படல்
- இயற்கையோடு இணைந்த வாழ்வு காரணமாக வழிபாடு சடங்கு, கலையுணர்வு என்பனவற்றில் மேம்பட்டிருத்தல்
- வணிகப் பண்பாட்டம்சங்கள் காணப்பட்டன

(காவிலிப்பூம்பட்டணம், கடைவீதிகள், வாணிபம்)

- கலைப் பின்னணி காணப்பட்டமை

(கட்டட அமைப்புகள், சித்திரமாடங்கள், துணங்கைக் கூத்துக்கள், பாணர், இசைகள் முதலிய ஆடற்கலைகள்)

02. தமிழ் நாட்டில் இயற்கை நெறிக்காலத்தில் நிலவிய இந்து சமய வழிபாட்டு முறைகளைக் கீழ்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) சிவ வழிபாடு

- இலக்கிய ஆதாரங்கள் பல இயற்கை நெறிக்காலத்தில் காணப்பட்டன
- எந்தவொரு இலக்கியத்திலும் சிவன் என்ற சொல்லைக் காண முடியவில்லை
- பௌராணிக மரபை ஒட்டியே சிவன் விழிக்கப்படுகிறான்
- சிவ வழிபாட்டில் புராணக் கதை மரபுகள் பரவியமை
- சிவனைக் குறிக்கும் பெயர்கள் இலக்கியங்களில் காணப்பட்டமை
    - தாழ்சடை பொலிந்த அருந்தவத்தேன்
    - முக்கட் செல்வன்
    - கறைமிடற்றண்ணல்
    - முது முதல்வோன்
    - நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன்
    - மழை தலை மைந்தன்
    - ஆலமர் செல்வன்
    - புங்கம் ஊர்பவன்
- எரி நிகழ் கணிச்சியோன்
    - ஆதினரயன்
    - ஆதிரை முதல்வோன்
    - கொன்றை மாலை அணிந்தவன்
    - முக்கண்களை உடையவன்
    - முப்புரங்களை எரித்தவன்
- பாண்டுரங்கம், கொடுகொட்டி, கபாலம் என்னும் கூத்துக்களை ஆடியமை
- திருவாதிரை நாள் பற்றிய சைவசமயம் சார்பான விரிவான குறிப்புக்கள் காணப்படுகின்றமை
- திருமுருகாற்றுப்படை பிராமணிய வழிபாட்டையும், நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறுகின்றமை

- நீலமேனி வாலிழை பாகத்தொருவன் என்ற தொடர் மூலம் சிவமும் சக்தியும் ஒன்றினைந்தமையைக் கூறியமை.

(ஆ) கொற்றவை வழிபாடு

- பாலை நிலத்திற்குரிய தெய்வம்
- திராவிடய மக்களது வெற்றித் தெய்வம்

(நெடுநாள் போரிற்குச் சென்ற தலைவன் வெற்றியோடு திரும்ப வேண்டுமென்று வெற்றித் தெய்வமாகிய கொற்றவையை வணங்கினர்)

- பெண் தெய்வங்கள் வீரத்தின் தெய்வமாகக் கருதியமை
- நெடுநல்வாடை, பதிற்றுப்பத்தியது ஆகிய இரு இலக்கியங்களிலும் கொற்றவையின் பலிக்கடன் பற்றிய குறிப்புக்களை காணலாம்.
- இக் கொற்றவையின் வழிபாடே சக்தி வழிபாடாகப் பிற்காலத்தில் மாற்றம் பெற்றது
- முருகன் கொற்றவையின் சிறுவன், மலைமகளின் மகன் என்று அழைக்கப்பட்டதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

(இ) இயற்கை நெறிக்கால வைணவ வழிபாடு

- தெல்காப்பியச் சூத்திரத்தில் ‘‘மாயோன் மேய காடுறை உலகமும்’’ எனக் குறிப்பிடப்படும் தொடர் முல்லை நிலத்திற்கு தெய்வமாக விஷ்ணு குறிப்பிடப்படுகின்றார்.
- வழிபாட்டம்சங்களில் வெறியாட்டு நடுகல், சிலம்பு, என்பன இடம் பெற்றன.
- சங்க இலக்கியங்கள் தழுவியே வைணவ வேதாந்த மரபுகளில் வளர்ச்சிகள் ஏற்பட்டன.
- தொல்காப்பியத்தில் வைணவமே முதலில் கூறப்பட்டதனால் வைணவமே முதன்மை பெற்றது என்பதற்கு இது சான்றாகும்.
- முருக வழிபாடு ஆரிய திராவிய இணைப்பை காட்டுகின்றது.
- திருமுருகாற்றுப்படையில் இருவகை வழிபாடு அறுபடைவீடு என்பன கூறப்பட்டுள்ளன.

(ஈ) இயற்கை நெறிக் கால முருக வழிபாடு

- ‘‘வில்லும் போரும் வெல்க முருகா’’............

‘‘கொற்றவை சிவுர்.........

போன்ற அடிகள் முருகன் வேலன் என்ற நாமத்தால் வணங்கப்பட்டமைக்கு ஆதாரங்களாகின்றன

- முருக வழிபாடு ஆரிய திராவிட இணைப்பைக் காட்டுகின்றது.
- திருமுகாற்றுப்படை அறுபடை வீடுகள்
- குறிஞ்சி நிலக் கடவுள் முருகன்
- முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் வெறியாட்டு விழா இடம் பெற்றமை சம்பந்தமான குறிப்புகள் உள்ளன.
- முருகன் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன்
- சிறந்த போர்த்தெய்வம் / திராவிடத்தெய்வம்
- போரை வெல்லவல்ல முருகன் (மலைபடுகடா)
- புறநானூறு, திருமுகாற்றுப்படை, அகநானூறு போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன.

**சங்க காலம்**

01. சங்க காலத்தில் ஐவகை நில அமைப்புக்கேற்ற வழிபாடுகளை குறிப்பிடுக.

குறிஞ்சி - முருகன்
முல்லை - திருமால்

மருதம் - இந்திரன்
நெய்தல் - வருணன்
பாலை - கொற்றவை

02. கறைமிடற்றணல், ஆலமர் கடவுள், முக்கட் செல்வன் என அடைமொழிகளால் அழைக்கப்பட்டவர் யார்?
சிவன்

03. பிராணிய வழிபாட்டையும், நாட்டார் வழிபாட்டையும் இணைக்கும் நூல் எது?
திருமுருகாற்றுப்படை

04. ஆரிய திராவிட இணைப்பை காட்டுவது எந்த வழிபாடு?
முருக வழிபாடு

05. மனசாட்சியை விட உயர்ந்த தர்மம் எதுவும் இல்லை என கூறும் நூல் எது?
கலித்தொகை

06. சங்க மருவிய காலத்தில் வைதீகநெறியோடு போராடிய வேறு பிரிவுகள் எவை?

- களப்பிரர் எனப்படும் சமண சமய சார்புடையவர்கள்
- பௌத்தர்

**அறநெறிக் காலம்**

- கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் 6 ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகக் கருதப்பட்டமை.
- அந்நியராகிய களப்பிரர்களினால் சில ஆண்டுகள் ஆட்சிக்குட்படுத்தப்பட்டிருந்தமையால் இருண்டகாலம் / பின்னடைவுக் காலம் என அழைக்கப்படும்.
- கி.பி 3ம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தன் தலைநகரமாகக் காஞ்சிபுரம் விளங்கியமை
- களப்பிர ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் வெளியார் படையெடுப்பு நிகழ்ந்தமை
- போர், குழப்பம் போன்றவற்றினால் நாடு அமைதியற்றுக் காணப்பட்டமை.
- மக்கள் இவ்வாறான நுழ்நிலையில் ஒழுக்கம் குன்றிக் காணப்பட்டமை.
- களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாட்டில் சமண பௌத்த செல்வாக்கு மிகுந்திருந்தமை
- களப்பிரர் ஆட்சியில் நலிவுற்றிருந்த தமிழ் மக்களுக்கு சமண பௌத்தர் அறவழியே சிறந்த வழி எனக் காட்டியமை
- ஒழுக்கத்தை வலியுறுத்தும் அறநூல்கள் இவ்வாறான சூழ்நிலையில் தோன்றியமை.
- இந்து மதத்தில் அவதரித்த புத்தபெருமான் வைதீக மதத்திலே காணப்பட்ட பதியுதிடல், பலதாரமணம், மதுவருந்துதல் சாதிப்பாடுபாடு போன்ற குறைபாடுகளைப் போக்குவதற்காக வைதீக மதத்தினை விடுத்து அவைதீக மதத்தில் சேர்ந்தமை.
- மக்கள் அவைதீக மதங்களைப் பின்பற்றியமை
- சமணரும் பௌத்தமும் அறக்கருத்துக்கள் பலவற்றை வலியுறுத்தியமை
- சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் அறக்கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றமை.
- கன்மம் மறுபிறப்பு பற்றி அவைதீக மதங்களாகிய சமண – பௌத்த மதங்கள் வலியுறுத்தி வந்தமை.
- சமண பௌத்தக் கருத்துக்கள் இக்காலத்தில் உயர்வுற்றிருப்பினும் இந்து மதம் நீறுபூத்த நெருப்புப்போல ஆங்காங்கே மிளிர்ச்சி பெற்றிருந்தமை.
- சங்கம் மருவிய கால இறுதிப் பகுதியில் காரைக்கால் அம்மையாராலும் முதல் ஆழ்வார் மூவராலும் இந்து மதம் மீண்டும் புத்துயர்ச்சி பெறத் தொடங்கியமை.

01. சங்கம் மருவிய கால அறநூல்கள் எவற்றை எடுத்துக் கூறுகின்றன?
நீதி, ஒழுக்கம்

02. அறக்கருத்துக்களைக் கூறும் நூல்கள் சங்கம் மருவிய கால நூல்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
பதினெண்கீழ்க் கணக்கு, நூல்கள்

03. அறக்கருத்துக்களைக் கூறும் மிக முக்கியமான நூல்கள் ஆறின் பெயர்களைத் தருக.
(1) திருக்குறள் (2) நாலடியார் (3) திரிகடுகம்
(4) சிறுபஞ்ச மூலம் (5) ஏலாதி (6) ஆசாரக்கோவை

04. களப்பிரர் ஆட்சிக் காலத்துத் தமிழ் நாட்டில் அபரிமித செல்வாக்குப் பெற்றிருந்தோர் யார்?
(1) சமணர்கள் (2) பௌத்தர்கள்

05. சமண பௌத்தக் கருத்துக்கள் சங்கம் மருவிய காலத்தில் உயர்வு பெற்றிருப்பினும் நீறுபூத்த நெருப்புப் போல் மிளிர்ச்சி பெற்றுக் காணப்படும் மதம் எது? இது யாரால் முன்னெடுக்கப்பட்டது?
இந்து மதம், கரைக்கால் அம்மையாராலும், முதல் ஆழ்வார்கள் மூவராலும் முன்னெடுக்கப்பட்டமை

06. வைதீக மதத்தில் குறைபாடுகளாகக் காணப்பட்ட விடயங்கள் என புத்த பெருமான் எவற்றைக் குறிப்பிட்டுள்ளார்?
(1) பலியிடல் (2) பலதாரமணம் (3) மதுவருந்துதல் (4) சாதிப்பாகுபாடு

**பக்தி இயக்க காலம்**

- பல்லவர்கள் காஞ்சி புரத்தைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் கி.பி 6ம் நூற்றாண்டளவில் (வைதிகப் பல்லவர்கள்) தமது ஆதிக்கத்தை நிறுவியமை.
- ஆரம்ப காலப் பல்லவ அரசர்கள் வைதீக சமயத்தை வளர்த்தனர்.
- வேதக் கல்வி மரபு பரவியமை
- ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு கிராமங்கள் எழுச்சியடைந்தமை
- புராதன இதிகாசக் கதைகள் பரவியமை
- சமண சமயத்தைச் சேர்ந்த மன்னர்கள், சைவ சமயத்திற்கும் வைணவ சமயத்திற்கும் ஆதரவு நல்கியமை
- காஞ்சி புரத்தில் வடமொழிக்கல்விக் கூடம் அமைந்திருந்தமை
- அங்கு வேதாந்தம் மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டமை
- சம்ம விஷ்ணு, குமார விஷ்ணு முதலான பல்லவ அரசர்கள் ஆட்சி செய்தமை
- புறச் சமயங்களின் செல்வாக்கை ஒழிக்கவும், இந்து சமயத்தை மீட்கவும், அன்பு வடிவத்தில் இறைவனைக் காட்டித் தொண்டு, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளில் தெய்வ மணங்கமழுவதும், மக்களின் உள்ளங்களைத் தொடுவதுமான பக்திப் பதிகங்களைத் தமிழில் இசையுடன் பாடி சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் நடத்திய ஒரு நாடுதழுவிய இயக்கமே பக்தி இயக்கமாகும். இதற்கு வித்திட்டவர்கள் காரைக்கால் அம்மையார், முதலாழ்வார், திருமூலர் முதலியோர் விளங்கியமை.

**பல்லவர் காலம்**

01. பல்லவர் காலத்தில் தலைநகரமாக விளங்கிய இடம் எது?
காஞ்சி புரம்

02. பல்லவர் காலத்தில் ஆட்சி மொழியாகவும் பண்பாட்டு மொழியாகவும் விளங்கிய மொழி எது?

பிராகிருத மொழி

03. தமிழ் நாட்டில் பல்லவர் காலத்தில் எந்த இடம் வடமொழி கல்விக் கூடமாக விளங்கியது?
காஞ்சிபுரம்

04. பல்லவர் காலத்தில் இந்து மத மறுமலர்ச்சியும், சமய நிலையில் திருப்பங்களும் புதுமைகளும் எந்த மன்னர் காலத்தில் ஏற்பட்டது?
மகேந்திர வர்மன்

05. பல்லவர் கால சமய சின்னம் எது?
நந்திச் சின்னம், சிவனின் கட்டுவாங்கக் கொடியும்

06. பல்லவர் காலத்தில் எந்த பட்டயத்தில் நந்திக்கு மேல் லிங்கம் அமைக்கப்பட்டிருந்தது?
உரம், காசாக்குடி

07. மண், மரம் தவிர்த்து புதிய கற்கோயில்களை குணபர ஈச்சரம் கட்டிய மன்னன் யார்?
மகேந்திர வர்மன்

08. மகேந்திர வர்மனின் விருது பெயர்கள் யாது?
(1) விசித்திர சித்தன் (2) வியத்தகு திறந்தோன் (3) சங்கீர்ண ஜாதி
(4) குணபரன் (5) மத்த விலாசன் (6) ஷேத்காரி
(7) சித்திரகார புலி

09. எந்த கல்வெட்டு மகேந்திர வர்மனின் சைவப்பணிகளை குறிப்பிடுகின்றது?
திருச்சிராப்பள்ளி

10. எந்த இடத்து கல்வெட்டில் இடம்பெற்ற சிவதோத்திரம் மகேந்திர வர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துகிறது?
குடுமியா மலை

11. திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குத் தானம் செய்தவர் யார் என சாசனம் குறிப்பிடுகின்றது?
1ஆம் சிம்மவர்மன்

12. ஐயடிகள் காடவர்கோன் என புகழ்பெற்ற சைவ அடியார் யார்?
3ஆம் சிம்மவர்மன்

13. 24 சிவத்தலங்கள் பற்றி ஷேத்திர வெண்பா பாடியவர் யார்?
3ஆம் சிம்மவர்மன் ஐயடிகள் காடவர்கோன்

14. வாதாபி சாளுக்கியருடன் போராடி, தமிழகத்தை மீட்ட பெருமைக்குரியவர் யார்?
மாமல்லன் (முதலாம் நரசிம்ம பல்லவன்)

15. மாமல்லபுர ஒற்றைக்கற் கோயில்களில் சிவனுக்குரிய ரதங்கள் யாவை?
அர்ஜீன ரதம், தர்மராஜ ரதம்

16. ரதக்கோயில்களை அமைத்து திறந்தவெளி பாதைகளில் சிற்பக்கூடங்களை அமைத்த மன்னன் யார்?
மாமல்லன் (1ஆம் நரசிம்மன்ன)

17. வாதாபி கணபதியை தமிழ் நாட்டிற்கு வெற்றிச்சின்னமாக கொண்டு வந்த மன்னன் யார்?
மாமல்லன்

18. வித்யாவிநீதன் எனும் விருதுப்பெயர் கொண்ட மன்னன் யார்?
பரமேசுவரவர்மன்

19. காஞ்சி கடிகையை மறுசீரமைப்பு செய்து, வடமொழி பண்பாட்டை பரப்பிய மன்னன் யார்?
இராசசிம்மன் (2ஆம் நரசிம்ம வர்மன்)

20. "கூரம்" என்ற இடத்தில் கோயில் கட்டி பூசைகளுக்கௌ 108 சதுர்வேதிகட்கு நிலமளித்த மன்னன் யார்?
பரமேசுவர வர்மன்

21. இராசசிம்மன் காலத்தில் சிவாலயங்களுக்கு வழக்கப்பட்ட நிலபுலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
தேவ தானம்

22. வைணவ ஆலயங்களுக்கு சொந்தமான நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
திருவிடையாட்டம்

23. தனது திருமுடியில் உருத்திராட்சத்திலான மகா சிவலிங்கத்தை தரித்திருந்தவன் யார்?
பரமேசுவரவர்மன்

24. "சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை ! அவனே முழுமுதற் கடவுள் சிவனை நினையாதோர் ஆறு முறை சபிக்கப்பட்டவர்கள்" என பரமேசுவர வர்மனின் ஆழ்ந்த சிவபக்தியை எடுத்து காட்டும் கல்வெட்டு எது?
மாமல்ல புர கணேசர் கோயில் கல்வெட்டு

25. "கலியுகத்தில் அசரீரி கேட்டவன்" என்று சாசனங்கள் யாரை குறிப்பிடுகின்றது?
இராசசிம்மன்

26. இராசசிம்மனது சைவ ஈடுபாட்டு காட்டும் விருது பெயர்கள் யாவை?
சிவசூடாமணி, சங்கர பக்தன்
ஆகமப் பிரியன், ரிஷபலாஞ்சனன்
சைவ சித்தாந்த மார்க்கன்

27. காஞ்சி கைலாசநாதர் கோயிலை (பெரிய திருக்கற்றளி) கட்டிய மன்னன் யார்?
இராசசிம்மன்

28. பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படும் மன்னன் யார்?
இராசசிம்மன்

29. மங்கள சாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள் யார்?
ஆழ்வார்கள்

30. பல்லவர் காலத்தில் சைவத்தின் பிரிவுகள் யாவை?
காளாமுகர், மாவிரதர், பாசுபதர்

**மடங்கள், ஆதினங்கள்**

01. மடம் என்பதன் விளக்கத்தை தருக.
மடம் என்றால் இருக்கை எனப்பொருள்படும்.
(அது துறவிகள் இருக்குமிடம் என விரிந்த பொருளிலும் கொள்ளப்படும்)

02. இன்று மடம், ஆதீனம் என்பவை எவ்வாறு குறிக்கப்படுகின்றன.
மடம் - சத்திரத்தையும், ஆதீனம் என்பது துறவிகளின் ஊழியத்துக்குரிய பெரிய நிறுவனம் எனப்படுகின்றது.

03. மடங்கள் தோன்றியதன் காரணம் யாது?
இஸ்லாமியர்களின் தாக்கத்தினால் வீழ்ச்சி அடைந்த இந்து சமயத்தினை நிறுவன ரீதியாக கட்டியெழுப்ப தோன்றின. மற்றும் யாத்திரையினை மேன்மையடைய செய்யவும் அடியவர்க்கு உணவளிப்பதற்காகவும், எளியவர்களுக்கு உணவளிப்பதற்காகவும், சைவத்தை காக்க வேண்டும் என்ற நோக்கிலும் மடங்கள் தோன்றின.

04. மடாதிபதியின் இலக்கணம் யாது?

- நல்லொழுக்கம்
- கல்வி அறிவொழுக்கம் உடையவராக இருத்தல்.
- கலாசாரத்தை பின்பற்றுபவராக இருத்தல்.
- அனுஷ்டான விதிமுறைகளை பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும்.

05. மடங்களுக்குரிய கடமைகள் எவை?

- மடங்களுக்குரிய மானியங்களை ஒழுங்காகப் பேணல்
- திருநந்தவனம் அமைத்தல்.
- அறிவும், ஆற்றலும் உடையோரைக் கொண்டு ஆன்மீகப் போதனை நடத்தல்.
- உயர்வு தாழ்வு கருதாது எல்லா மக்களையும் சமமாக கருதி அன்னம் வஸ்திரம் முதலான தருமங்களை அளித்தல் வேண்டும்.
- சமூக சேவையில் ஈடுபடுதல் வேண்டும்.

06. அன்னதானம் பெறத் தகுதியுடையோர் யார்?

- திருமுறை, வேதாகமம் படிப்போர், சமய போதனை செய்வோர்.
- ஆலய சேவை புரிவோர்.
- துறவிகள், அங்கவீனமுற்றோர், யாத்திரை செல்வோர்.

07. ஆதீனங்கள் தோற்றம் பெற்றதற்கான காரணத்தை தருக.
சைவ சமயத்தை பாதுகாத்து வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டன.

08. ஆதீன கர்த்தாவின் பண்புகள் யாவை?

- சித்தாந்த நூல்களையும், வேதாகமங்களையும் கற்றிருக்க வேண்டும்.
- செயலில் துறவு வேண்டும்.
- அன்பு, பக்தி, ஞானம், வைராக்கியம் முதலான பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும்.

09. ஆதீன கர்த்தாக்களின் கடமைகள் யாவை?

- மாணவர்களுக்கு அன்னம், வஸ்திரம், உறையுள் கொடுத்து கற்பித்தல்.
- யாவரையும் சமமாக மதித்தல்.
- ஆதீனங்களில் உள்ளோர் நத்திய கருமம், திருமுறை வேதாகம அனுஷ்டானம், ஆலயசேவை, வாய்மை, இரக்கம், பொறை, அடக்கம் முதலான பண்புகள் உடையவர்களாக இருக்க வழிப்படுத்தல் வேண்டும்.

10. திருவாவடுதுறை ஆதீனம் தோன்றிய காலம், இடம் என்பவற்றை தருக.

- நாயக்கர் காலம்
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் உள்ளது.

11. திருவாவடுதுறை ஆதீனத்தின் பிரதான நூல்களாக அமைபவை

- மெய்கண்ட சாஸ்திரங்கள்
- தசகாரியங்கள்
- அதிசய மாலை
- நிட்டை விளக்கம்
- நமசிவாய மாலை
- சித்தாந்த சிகாமணி

12. திருவாவடு துறை ஆதீனத்தின் சமயப்பணிகள் 5 தருக.

1. நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆதீனத்தின் கிளை மடங்களை நிறுவுதல்.

(உதாரணம் - தஞ்சாவூர், வேலூர், கடலூர், தூத்துக்குடி)

2. பாடல் பெற்ற தலங்களையும், பிற கோயில்களையும் ஆட்சி கோயில்களாக கொண்டிருத்தல்.
3. பல நூல்களையும், கண்டனங்களையும் எழுதுதல்.

(உதாரணம் - சிவஞான முனிவர் - சிவஞான பாடியம் சிவஞான சித்திப் பொழிப்புரை, கச்சியப்ப முனிவர் - தணிகைப் புராணம்)

4. புலவர்களை பேணல்.

(உதாரணம் - முத்துக்குமாரத் தம்பிரான், அருணாசலக்கவிராயர், ஆறுமுக நாவலர்)

5. மானியங்களை நிர்வகித்தல் - 50000 ஏக்கர் நிலங்களை பாதுகாத்தல்

13. திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவியவர் யார்?
நமசிவாய மூர்த்திகள்

14. திருவாவடுதுறை ஆதீனத்தின் சமூகப்பணிகள் 4 தருக.

1. மேல்நிலைப் பள்ளிகள், ஆகமப் பள்ளிகள், தட்டச்சு, சுருக்கெழுத்து பள்ளிகள் அமைத்தல்.
2. வள்ளலார் குருகுலம், கன்னியா குருகுலம், கருணை இல்லம் முதலானவற்றை அமைத்தல்.
3. நூல் வெளியீடு செய்தல், மெய்கண்டான் எனும் சஞ்சிகை நடத்துதல்.
4. வெள்ளப்பெருக்கு, சுனாமி முதலான இயற்கை அனர்த்தங்களின் பொழுது உதவுதல்.

## 09 - அறுவகை சமய, நெறிகள்
## சண்மதங்கள்

01. சண்மத பிரதித்தாபகர் யார்? (அறுவகைச் சமய நெறிகளை மீள நிறுவியவர்)
ஆதிசங்கரர்

02. அறுவகைச் சமய நெறிகளும் எவை?
சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம்

**(அ) காணபத்தியம்**

03. கணபதியை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடும் சமயம் எது?
காணபத்தியம்

04. "கவிஞர்களின் கவிஞன், ஞானிகளின் ஞானி, அரசர்களின் அரசன்" என இருக்கு வேதம் யாரை குறிப்பிடுகின்றது?
கணபதி

05. "கணானம் தீவாம் காணபதிகூம்" என கணபதி பற்றி எந்த வேதம் குறிப்பிடுகின்றது?
யசூர் வேதம்

06. விநாயகர் விக்கினங்களை தீர்ப்பவராகவும் அடியவர்களை சாந்தப்படுத்துபவராகவும் விளங்குகின்றார் என எந்த நூல் குறிப்பிடுகின்றது.
பிராமணங்கள் - ஐதரேயம்

07. "ஓம் கணபதியே வணக்கம் நீயே காணும் உண்மைப் பொருள் நீயே படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனுமாய் உள்ளாய்" என எந்த நூல் குறிப்பிடுகின்றது?
ஏரம்ப, கணேச உபநிடதம்

08. "கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை" என கணபதியைக் குறிப்பிடும் நூல் எது?
மணிமேகலை

09. வட இந்தியாவில் இருந்து வாதாபிக்கு விநாயக உருவத்தை கொண்டு வந்தவர் யார்?
அகத்தியர்

10. அங்கமும் வேதமும் - ஏந்தியாடும் கணபதிச்சரம் காமுறவெ என பாடியவர் யார்?
திருஞான சம்பந்தர்

11. திருநாரையூர் பொள்ளப் பிள்ளையரின் அருளை பெற்று விநாயகர் மீது பல பாடல்களை பாடியவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

12. கணபதியின் உடலில் காணப்படும் தெய்வங்கள் யாவை?
முகம் - விஷ்ணுரூபம்
கண் - சிவரூபம்
வலப்பாகம் - சூரியரூபம்
இடப்பாகம் - சக்திரூபம்
நாபி - பிரம்ம ரூபம்

13. கணபதிக்குரிய காரணப்பெயர்கள் 5 தருக.
1. பிள்ளையார் - பிள்ளைகளுக்குரிய கடவுள்
2. விநாயகர் - தனக்கு மேல் தலைவன் இல்லாதவர்
3. லம்போதரர் - பெரிய வயிறை உடையவர்
4. கணபதி - கணங்களுக்கெல்லாம் தலைவர்
5. கணேசன் - மனம், வாக்கு என்பவற்றிற்கும் அவற்றை கடந்த நிலைக்கும் உரியவர்

14. விநாயகரின் திருவுருவத்துவத்தை குறிப்பிடுக.
1. பானை வயிறு - உலகம் முழுவதும் வயிற்றில் உள்ளடக்கம்

2. யானை முகம் - ஓம் என்ற பிரணவ மந்திரத்தை குறிக்கின்றது.
3. பெரிய செவி - அன்பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடையவர்
4. மோதகம் - இன்ப வடிவானவன்
5. ஒற்றைக் கொம்பு - தியாகத்தை குறிக்கும்.

15. கணபதி வடிவம் ஐந்தொழில்களை உணர்த்தும் விதத்தினை குறிப்பிடுக.
1. எழுத்தாணி பிடிக்கும் கரம் - படைத்தல்
2. மோதகம் இருக்கும் கரம் - காத்தல்
3. அங்குசம் ஏந்திய கரம் - அழித்தல்
4. அமுத கலசம் - அருளல்
5. பாசம் கொண்டிருக்கும் கை - மறைத்தல்

**(ஆ) சைவம்**

- சைவம் -- சிவம் --- அன்பு
- சனாதன தர்மம் - நிலையான அழிவற்ற தர்மநெறி
- சிவபெருமான் முழுமுதற்கடவுள் - எந்நாட்டவர்க்கும் இறைவன்
- சிந்துவெளியிலிருந்து தொன்மை கூறப்படுகிறது. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சிந்துவெளிச் சான்றுகள்
- இந்தியா, இலங்கை, நேப்பாளம், பூட்டான், கம்போடியா போன்ற நாடுகளில் நிலவுகின்றன. இன்று புலம்பெயர் தமிழர்களால் மேலைத்தேய நாடுகளில் பின்பற்றப்படுகிறது.
- வேதத்தின் ஞான காண்டமும் சிவாகமங்களும் சைவத்துக்கு ஆதாரமான வடமொழி நூல்களாகும்.

தமிழில் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சைவசித்தாந்த நூல்களும் விளங்குகின்றன – முப்பொருளுண்மை பற்றிக் கூறுகின்றன புராணங்கள்

- காலந்தோறும் சைவம் காத்தவர்கள்

நாயன்மார்கள் / சந்தானகுரவர் / சித்தர்கள் / ஞானியர் / பக்தியாளர்கள் / சமய மறுமலர்ச்சியாளர்கள்

- வழிபாடு
  - பல வடிவங்களில் காணப்பட்டாலும் சிவன் ஒருவனே கடவுள் “யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகிய யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்
  - கிரியைகள், திருவிழாக்கள், விரதங்கள்
- சைவம் காத்த நிறுவனங்கள் பற்றிய குறிப்புகள்

**(இ) சாக்தம்**

- சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டது
- இந்நெறியை கடைப்பிடிப்பவர்கள் சாக்தர்கள்
- சாக்தேயம், வாமம் என அழைக்கப்படும்
- நூல்கள்

நால் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சாக்த ஆகமங்கள், சங்க நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, அபிராமி அந்தாதி

சாக்த ஆகமங்கள் உதாரணம் - மகாநிருவாண தந்திரம்
காமகலா விலாசம்

சகலகலாவள்ளி மாலை, மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், தேவி பாகவதம், தேவி மகாத்மியம், துர்க்கா தோத்திரம்

- காலந்தோறும் வளர்ச்சி
  - சிந்துவெளி - தரை பெண் வடிவங்கள்
  - வேத காலம் - உஷை, சவிதா, ராத்திரி
  - உபநிடதம் - கேன உபநிடதம்
  - குப்தர் காலம் - சந்திர குப்தனுடைய நாணயம் - சிங்கத்தின் மீது அம்மன்
  - இதிகாசங்களில் - துர்க்கா தோத்திரம்
  - புராணங்களில் - உமை – தாட்சாயிணி
  - சங்க காலம் - பாலைநில தெய்வம் - கொற்றவை
  - சங்க மருவிய காலம் - சிலப்பதிகாரம், காளி, துர்க்கை
  - பல்லவர் காலம் - தோவரங்கள் - மாதர்பிறைக்கண்ணி……
    மங்கையர்கரசி……..
    பிடியதனுருகுமை……
  - சோழர்காலம் - ஆலங்கள், படிமங்கள்
  - நாயக்கர் காலம் - மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிறப்பு
  - தற்காலம் - சாக்தர் மட்டுமன்றி இந்துக்கள் வழிபடுகின்றமை

- பௌத்தர் பத்தினி தெய்யோ என வழிப்படுகின்றமை

மகேஸ்வரி - பேரரசி
காமேஸ்வரி - ஆசையை நிறைவேற்றுபவள்
உமா - ஓங்காரமானவள்
கல்யாணி - மங்களத்தை உடையவள்
சங்கரி - நன்மை செய்பவள்
விஜயா - வெற்றி வடிவானவள்

**வழிபாட்டு முறைகள்**

- ஆகமம் சார்ப்பானவை
- மந்திர, தந்திர, யந்திர வழிபாடுகள்
- திருக்கோயில் வழிபாடுகள்
- சாரதா நவராத்திரி, வசந்த நவராத்திரி
- கொலுவைத்தல், திருவிளக்கு பூசை, கௌரி விரதம், வரலட்சுமி விரதம், ஸ்ரீ சக்கரப் பூசை
- வாம மார்க்கம், தட்சிண மார்க்கம் வழிபாடுகள்
- கிராமிய வழிபாட்டுமுறைகள்
- சைவ வழிபாட்டிலும் சக்தநெறி கலந்துள்ளது.

**சமுதாய செல்வாக்கு**

- தனி ஒரு மதமாக வளர்ச்சி – சைவத்தோடு இணைந்துள்ளமை
- பௌத்தர் - பத்தினி தெய்யோ
- தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் மேலைத்தேய நாடுகளில் சிறப்பு
- இந்தியாவில் - அசாம் மாநிலத்தில் - சாக்தர்கள்
- உருவ வழிபாடு - மந்திரோபாசனை - ஆகமமுறை
- பொங்கல் வைத்து - ஆகமம் சாரா முறை
- நவராத்திரி
- இந்திய தலங்கள் - காஞ்சி காமாட்சி, மதுரை மழுனாட்சி, விசாலாட்சி காசி

- இலங்கையில் - நயினை நாகபூஷனி, தெல்லிப்பலை துர்க்கையம்மன், மாத்தளை முத்துமாரி அம்மன்

**(ஈ) வைணவம்**

அறுவகைச் சயப் பிரிவுகளில் ஒன்றாகத் திகழும் வைணவம் மகாவிஷ்ணுவினை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறி இந்நெறியை கடைப்பிடிப்பவர்கள் வைணவர் ஆவர்.

நூல்கள்
வேதங்கள், உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம், புராணங்கள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், வைணவ ஆகமங்களாகிய பஞ்சராத்திரம், வைகாசனம், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள்

காலந்தோறும் வளர்ச்சி
சிந்துவெளிக்காலம்
காளிங்க நடனம், கருடபதக்கம்

வேதங்கள்
விஷ்ணு விண்ணை சார்ந்த தெய்வம், சதபதப் பிராமணம் விஷ்ணு ஆமையாகவும், பன்றியாகவும் அவதாரம் எடுத்தார் என குறிப்பிடும்.

உபநிடதங்கள்
உபநிடதங்களில் உரைக்கும் பிரம்ம விஸ்ணு

மௌரியற் காலம்
புத்தபெருமான், மகா விஷ்ணுவின் ஓர் அவதாரமாகக் கருதப்பட்டார்

குப்தர் காலத்தில்
வைணவத்தின் பாகவதர், பஞ்சராத்திரர் எனும் இரு பிரிவுகள் காணப்பட்டது.

இதிகாசங்களில்
அவதாரம் பற்றிய கருத்துக்கள் இராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், இராமாயணம், மகாபாரதத்தில் சிறப்பு

புராணங்கள்
விஷ்ணு, கருட, பாகவத, நாரதீய, வராக, உரிம, மச்சய, வாமன புராணங்களில் மகா விஷ்ணு பற்றிய குறிப்புக்கள்

சங்க காலம்
முல்லை நில மக்கள் திருமாலை வழிபடுதல்

சங்கமருவிய காலம்
சிலப்பதிகாரம் - கண்ணனது லீலைகள்
பேயாழ்வார், பொய்கையாழ்வார், 1 பூதத்தாழ்வார் எனும் முதல் மூன்று ஆழ்வார்கள் வைணவத்தை வளர்த்தனர்.

பல்லவர் காலம்
ஆழ்வார்கள் பாசுரங்களை பாடி வைணவத்தை வளர்த்தனர்.

சோழர் காலம்
ஸ்ரீ மத் நாதமுனிவர் ஆழ்வார் பாசுரங்களான நாலாயிர திவ்விய பிரபந்தங்களாக தொகுத்தார்.

நாயக்கர் காரம்

தற்காலம்
இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் விஷ்ணு தெய்யோ என போற்றுகின்றனர்.

விரதங்கள்
இராம நவமி, கிருஷ்ண ஜெயந்தி, ஏகாதசி

**அவதாரத்துவம்**

வைணவத் தந்திரங்கள் கடவுளின் ஐந்து வடிவங்கள் பற்றி கூறுகின்றன.

1. யாவும் கடந்து நிற்கும் வடிவம் - பரம்
2. கூட்டான வடிவம் - வியூகம்
3. அவதார வடிவம் - விபவம்
4. உள்ளார்ந்த வடிவம் - அந்தர்யாமித்துவம்
5. விக்கிரக வடிவம் - அர்ச்சை

- விஷ்ணுவின் விபவ வடிவங்களே அவதாரங்கள்
- அவதாரம் என்பதன் பொருள் "கீழே இறங்கி வருதலாகும்" ஆன்மாக்களை ஈடேற்றம் பெறச்செய்வதற்காக இறைவன் தன் நிலையிலிருந்து கீழே இறங்கி வருதல் அவதாரமாகும்.
- அவதார தெய்வம் - மகாவிஷ்ணு
- அதர்மத்தை அழித்து தர்மத்தை காப்பாற்றுவதற்காக இறைவன் உலகிலே தோன்றுவான்.
- பத்து அவதாரங்கள்
  1. மச்சய அவதாரம் - மீனாகத் தோற்றியமை
  2. உர்ம அவதாரம் - ஆமையாக தோன்றியமை
  3. வராக அவதாரம் - பன்றியாக தோன்றியமை
  4. நரசிம்ம அவதாரம் - மனிதனும், மிருகமும் சேர்ந்த வடிவம் கலப்பு
  5. வாமன அவதாரம் - குள்ளனாக தோன்றியமை
  6. பரசுராம அவதாரம் - ஜமதக்கினி, ரேணுகையின் மகன்
  7. பலராம அவதாரம் - வாசு தேவன், ரோகிணியின் மகன்
  8. ஸ்ரீ இராம அவதாரம் - தசரதன், கோசலையின் மகன்
  9. ஸ்ரீ கிருஷ்ண அவதாரம் - வாசுதேவ தம்பதியின் வயிற்றில் பிறந்த ஆயர் பாடியில் வளர்தல்
  10. கல்கி அவதாரம் - அறத்தை நிலைநாட்ட குதிரை வீரனாக தோன்றியமை

பாகவத சமயநெறி

- வைணவத்தின் ஓர் பகுதி பாகவதம்
- இது புத்தர் காலத்திற்கு முன்பு தோன்றியமை
- பாகவதம் - பகவான் எனும் இறைவனை வழிபடும் நெறி
- பாகவதர் விஷ்ணுவையே பகவான் எனக்கூறி வழிப்பட்டனர்.
- சின்னம் - கருடன்

ஆகம வழிபாடு

- ஆகம வழிப்பாடு சிறப்பு - இருவகை ஆகமங்கள்

- பஞ்சராத்திரம், வைகாசனம்
- சமய தத்துவம், வழிபாட்டுமுறை, கிரியைகள், கோயிலமைப்பு, விக்கிரக அமைப்பு
- ஆலயஸ்தாபனம், விக்கிரகஸ்தாபனம், கட்டிட அமைப்பு, காலநேர பூசைகள் ஆராதனைகள்
- நித்திய, நைமித்திய சடங்குகளும் அவற்றிற்குத் தேவையான ஆசாரங்களும், உபாசாரங்களும்
- விழாக்கள்
- வழிபடுவோருக்கான தகுதி
- வழிபடுவதால் அடையும் பயன் (முத்தி)
- பரம், வியூகம், விபவம், அந்தர்ஜாமி, அர்ச்சம்
- பஞ்சராத்திரம் - சமய கடமைகள்
- வைகாசனம் - கோயில் வழிபாடு

வழிபாட்டு முறைகள்

- விஷ்ணு வழிப்பாட்டில் ஷராமநவமி – 10 தினங்கள்
- பங்குனி புனர்பூச நட்சத்திரமும், நவமி திதியும் கூடிய நாளில்
- இராமர் அவதரித்த தினம் - மக்கள் விரதம் இருப்பர்
- ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் கோகுலாஷ்டமி தினம்
- கண்ணன் தங்கள் வீடுகளில் பிறந்ததாக கருதி கிருஷ்ண ஜெயந்தி
- வைகுண்ட ஏகாதசி ஒவ்வொரு ஆண்டும் மார்கழி வளர்ப்பிறையில் வரும் ஏகாதசியில் வைணவர்கள் விரதம் இருத்தல்.
- அன்று சொர்க்க வாசல் திறக்கப்படும் என்பது ஐதீகம்
- இவ்வைபவம் ஸ்ரீ ரங்கத்தில் சிறப்பு
- புரட்டாதி சனி – வெங்கடாசலபதிக்குரிய நாள்
- இம்மாதம் முழுவதும் விரதமிருந்து சனிக்கிழமைகளில் விசேட பூஜை செய்து வெங்கடேச பெருமானுக்கு மாவிளக்கு ஏற்றுவர்.
- பஞ்சசமஸ்கார வழிபாடு – முத்திரை தரித்தல், திருமண்காப்பு, தாஸீய நாமம் ஆடுதல், திருமந்திர உபதேசம் திருவாதாரணம்.

**(உ) கௌரமாரம்**

- இது முருகப்பெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் நெறி
- இதனை கடைப்பிடிப்பவர்கள் கௌமார நெறியினர்
- நூல்கள்

வேதங்கள், பிராமணங்கள், இதிகாசங்கள், குமார சம்பம், ஸ்ரீ தத்துவ நிதி, ஸ்கந்த புராணம், திருமுழுகாற்றுப்படை, பரிபாடல், மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், திருச்செந்தூர் புராணம், திருத்தணிகை புராணம், கந்த புராணம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரணுபூதி, திருவகுப்பு, கந்தரந்தாதி, வேல் விருத்தம்.

வளர்ச்சி

- சிந்துவெளி - ஓர் கல்லில் இருந்து ஆறு தீப்பொறிகள் வெளி வருவது
- தென்னிந்தியா - ஆதிச்ச நல்லூர், திருநெல்வேலி – சேவல் சின்னம், வேலாயுதம் காவச் செடிகள்
- வேதம் - சுப்ரமண்ய என்ற சொல்

| | |
|---|---|
| இதிகாசங்கள் | - குகன், வேலாயுதன் என அழைக்கப்படுதல் |
| ஸ்கந்த புராணம் | - முருகன் தோன்றியமை பற்றி கூறும் |
| குப்தர் காலம் | - நாயணத்தில் மயில் பொறிக்கப்பட்டமை,<br>குமாரகுப்தன் |

சங்க காலம் - குறிஞ்சி நில கடவுள்
சிலப்பதிகாரம் - ''ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''
பல்லவர் காலம் - சைவத்துடன் இணைந்து – தேவாரப்பாடல்கள்
சோழர் காலம் - முருகனுக்கு படிபங்கள் உருவாக்கப்பட்டமை
விஜய நகரர் - கச்சியப்பர் - கந்தபுராணம், அருணகிரி, குமரகுருபரர்
தற்காலம் - ஆகமம் சார் / சாரா
விரதங்கள் - கந்த சஷ்டி, திருக்கார்த்தினை, வெள்ளிக்கிழமை விரதம்

- ஐந்தொழில் தத்துவம்

படைத்தல் - சேவல் கொடி
காத்தல் - மயில்
அழித்தல் - வேல்
மறைத்தல் - வள்ளி
அருளள் - தெய்வ யானை

- தொல்பொருள் சின்னங்கள்
  - பழனி, பழமுதிர்சோலை, சுவாமி மலை முதலிய ஆறுபடை வீடுகள் கூறப்பட்டன
  - தேவார முதலிகளும் முருகனுக்கு துதி செய்தல்
  - குப்தர் தம் நாணயங்களில் முருகனின் வாகனமான மயில், சேவல் பொறித்தல்
  - இலங்கையில் பிராமிர் கல்வெட்டுக்களில் வேல் குறிப்புக்கள்

- திருமுருகாற்றுப்படை
  - சங்க இலக்கியம் - பத்துப்பாடல் நூல்களில் ஒன்று

நக்கீரர் பாடியல்

  - முருகனை வழிபடுவதற்கு ஆற்றுப்படுத்துதல் / வழிபடுதல்

ஆறுபடை வீடுகள் பற்றி கூறப்பட்டுள்ளது

  - படை வீடுகளில் நடைபெறும் அற்புதங்கள், வழிபாட்டு முறைகள் போருக்கான அழைப்பு
  - வழிபாடு – ஆகமம் சார், ஆகமம் சாராதது

- சோமாஸ்கந்தர் வடிவம்
  - சிவனுக்கு திருவுருவங்களில் ஒன்று
  - சிவாலயங்களில் - சவின், உமையோடு கந்தன் சேர்ந்திருக்கும் வடிவமாகும்.
  - தேவாரங்களிலும் இவ்வடிவம் சிறப்ப
  - பல்லவ, சோழர் காலத்தில் திருவுருவமாக வளர்ச்சி
  - சோமாஸ்கந்தன் என்பதன் பொருள் - உமையுடனும் கந்தனுடனும் கூடியிருப்பவர்
  - இத்திருவுருவ அமைப்பினை கந்தபுராணம், சில்பரத்தினம் கூறுகின்றது
  - சிவாலயத்தேர் திருவிழாக்களிலே இத்திருவுருவமே திருவுலாவிற்கு எடுத்து செல்லப்படுகிறது.
  - சிவாலங்களிலும் அவற்றின் கருவறையின் பிற்பகுதித் திருச்சுற்றில் கிழக்கு நோக்கிய மண்டபத்திலும் காணலாம்.

- சிவன் இடது காலையும் சக்தி வலது காலையும் மடித்து ஒரே அல்லது தனித்தனி நீண்ட சதுரத்தாமரைப்படலத்தில் அமர்ந்திருப்பார் சிவன் 4 கரங்கள் உடையவராய் பின்கரங்களில் மான், மழு தாங்கிய முன்கரம் அபய, வரத முத்திரை காட்டியும், சடைமுடியை கொண்டும் விளங்குவார்.
  - செவிகளில் சுருள் ஓலை, மகரம் ஆகியவற்றை குண்டலங்களாக அணிந்தவராகவும் நெற்றிக்கண் உடையவராகவும் விளங்குவார்.

- உமை வலக்கரத்தில் மலரேந்தியும் தலையில் கரண்ட முடி அணிதலும் அதனை சிரச்சக்கரம் அழகு செய்யவும் விளங்குவார்.

- கந்தன் ஆடை எதுவுமின்றி கரண்டமுடி சூடி கைகளில் மலர் பிடித்தோ, அபய, வரத முத்திரைகள் கட்டியே, பழம் ஏந்தியோ விளங்குவான்.

**(ஊ) சௌரம்**

- சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம்
- ஐரோப்பா, தென்னமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் சிதைந்த சூரியன் கோயில்கள் இன்றும் காணப்படுகின்றன.
- பண்டைய எகிப்தியர் - ஆதன்

கிரேக்கநாடு – அப்பலோ

- இந்தியா -- இயற்கை வழிபாட்டோடு தொடர்புடையது
- காயத்ரி மந்திர வழிபாடு
- இருக்கு வேதம் - பன்னிரு ஆதித்தர்கள் பற்றிக் கூறுகிறது
- பாரசீகம் (ஈரான்) எகிப்து, ஐரோப்பா, ஒரிசா (கோனாரகச் சூரியன் கோயில்), மாமல்லபுரம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் சூரியச் சிலைகள் காணப்படுகின்றன.
- சிவனின் அட்ட மூர்த்தங்களுள் ஒன்றாகக் கூறப்படுகிறது.
- நவக்கிரக வழிபாட்டில் சூரிய பகவானுக்கு முக்கிய இடம்
- சூரிய வணக்கம் - தைப்பொங்கல்

## 10 – பக்தர்கள், சித்தர்கள்

**1. பக்தர்கள்**

01. இந்து சமய வரலாற்றில் பக்திநெறியாளர்களின் பங்களிப்புக்கள் போற்றத்தக்கன.

(அ) பக்தர்கள் பொருள் விளக்கம்

(ஆ) நாயன்மார் காலச் சூழல்

(இ) நாயன்மார்கள்

(ஈ) ஆழ்வார்கள் பற்றிய குறிப்புக்கள்

**(அ) இறைவனின் பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தவர்கள்**

- சைவநெறி அன்பு நெறி என பறைசாற்றியவர்கள்
- வைதீகம் சரியாதபடி திடமாக நிறுவியவர்கள்
- இறைவனிடம் ஈடுபாடும் கொண்டு அகங்குழைந்து, நெஞ்சமாகிய திரையில் அவரைப் பற்றிய எண்ணங்களை அழியாமல் தீட்டி வைத்து “நான்” என்னும் செருக்கை அறுப்பவர்களாயின் கடவுளின் திருவருள் தானாக வந்து எய்தும் என்பதே பக்தர்களின் கொள்கை
- தாம் பெற்ற பேரின்பத்தைப் பெற மக்களுக்கு வழி காட்டினர்
- எண்ணம், செயல் ஆகியவற்றில் தூய்மை வேண்டும் என எடுத்துக்காட்டுபவர்
- உலக இயல்புகளையும், இயற்கை எழிலிலும் நிரம்பிய இறைவனைக் கண்டார்கள்
- பக்திப் பாடல்களால் சைவத்தை வளர்த்தவர்கள்

**(ஆ) கி.பி 6 நூற்றாண்டு – கி.பி 9ஆம் நூற்றாண்டு**

- சமண, பௌத்த சமயங்களின் வருகையால் சைவம் வீழ்ச்சியடைந்த காலத்தில் சங்கமருவிய கால இறுதிப்பகுதியில் காரைக்கால் அம்மையார் தோன்றியமை

- அவர் பக்தி இயக்கத்தின் முன்னோடியாக விளங்கியமை
- பின்னர் நாயன்மார்கள் அப்பக்தியை பல்லவர் காலத்தில் வளர்த்தமை
- இக்காலத்தில் தமிழக அரசியலுடன் சைவப்பண்பாட்டு, சைவநெறி சிறப்படைந்தது
- சைவநெறி அரச ஆதரவு பெற்றமை
- நந்திக்கொடி அரச சின்னமாகவும், சைவ சமய சின்னமாகவும் சிறப்படைந்தது
- வடமொழி சார்ந்த மரபுகள் தமிழக்தில் கலந்தன
- அரசர் சைவராக மக்களும் அவ்வழி நின்றனர்.
- தொண்டர் குலம் தொழுகுலம் என்ற நிலை ஏற்பட்டது

**(இ) நாயன்மார்**

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

- சோழநாடு – சீர்காழி – சிவபாத விருதயர், பகவதி அம்மை
- மூன்று வயதில் தேவாரம் பாடியவர்
- ஐந்தெழுத்து பொறித்த பொற்தானம் பெற்றதுடன் அதில் ஓசையை இறைவி கொடுத்தமை
- முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் கிடைக்கப்பெற்றமை
- சமயத்தின் முதற் குரவரானமை
- இறை அருளால் அடியவரின் பிணி, துன்பம் நீக்கியமை

உதாரணம் - நாவுக்கரசருடன் பதிகம்பாடி படிக்காசு பெற்று பஞ்சப்பிணி போக்கியமை

- திருமறைக்காட்டில் வேத மந்திரங்களால் மூடியிருந்த கதவை நாவுக்கரசர் திறக்க இவர் மூடியமை
- பாண்டியனின் வெப்பு நோய் நீங்க செய்தமை
- அனல் வாதம், புனல் வாதம்
- கூன் பாண்டியனை நின்ற சீர் நெடுமாறனாக்கியமை
- பஞ்சம் நீங்க தந்தை வேள்வி செய்ய ஆயிரம் பொற்காசு – உலவாக்கிளி இறைவனிடம் பெற்று தந்தைக்கு வழங்கியமை
- கொல்லி மழவன் மகளின் முயலகன் நோயை தீர்த்தமை
- குளிர் ஜுரம் நீங்கியமை
- பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தமை
- ஆலய வழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்தியவர்
- பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியமை
- ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியமை
- தொண்டர் குலமே தொழுதகு குலம் என எண்ணியமை
- பௌத்த தலைவரோடு வாதிட்டு அவரை சைவமாக்கியமை
- ஒழுகிய நெறி - கிரியை, முத்தி – சாமீபம்
- குரு பூசை தினம் - வைகாசி மூலம் (16 வயது)
- சற்புத்திர மார்க்கத்தில் நின்று வாழ்ந்து காட்டியவர்
- தேவாரம் பாடியமை
- தலயாத்திரை மேற்கொண்டமை
- வாதம் புரிந்து சைவத்தை வளர்த்தமை
- இயற்கையை போற்றியமை
- சிவ சின்னங்களை போற்றியமை (உதாரணம் - திருநீறு, பஞ்சாட்சரம்)
- சமூக நோக்கு

இறைவழிபாட்டால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டியவர்

- கலை, தத்துவ வளர்ச்சி

இயற்கை அழகையும் இறை ஆற்றலையும் உணரச் செய்தவர்

**திருநாவுக்கரச சுவாமிகள் - "என் கடன் பணி செய்து கிடப்பதே"**

- திருமுனைப்பாடி நாட்டில் - திருவாரூர் - புகழனார், மாதினியாரின் மகனாக – மருணீக்கியார்
- பெற்றோரை இழந்தமை, தமக்கையோடு வளர்ப்பு
- கல்வி, வேள்வியில் வல்லவர் - சமணத்தால் ஈர்க்கப்பட்டு பாடலிப்புர சமணப்பள்ளியில் தலைவரானமை (தருமசேனர்)
- சூலை நோய் நீங்கியமை

- சமணரால் ஏழு நாள் நீற்றறையில் அடைக்கப்பட்ட போதும்
  - நஞ்சு கலந்த பாற்சோறு உண்ட போதும்
  - மதம் கொண்ட யானையை ஏவிய போதும் } இறை அருளால் பதிகம்பாடி மீண்டமை
  - கல்லோடு கட்டி கடலில் போட்ட போதும்
- மகேந்திர வர்மனை சமணத்திலிருந்து சைவனாக்கியமை
- தல யாத்திரை மேற்கொண்டமை – புல், பூண்டு, கற்களை உழவாரத்தால் சுத்தம் செய்து, உழவாரப் படையாளி (சரியை தொண்டு)
- சூல, இடப இலட்ச்சினையை தோளில் பொறிக்கப் பெற்றமை
- இறைவனால் சோலையும், குளமும் உருவாக்கப்பெற்று பொதிசோறும் பெற்றமை
- இறைவனின் திருக்கைலாய கோலத்தை திருவையாற்றில் கண்டமை
- சம்பந்தருடன் சேர்ந்து பதிகம்பாடி பசிப்பிணி போக்கியமை
- வேதங்களால் மூடப்பட்டிருந்த திருமறைக்காடு கதவு திறக்க பாடியமை
- இறைவனால் இடப்பட்ட பொன்னையும், மணியையும் ஓடு போலவே நோக்கியவர்
- இவரின் சமூகப்பணிகளுள் - அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பித்தமை
- படிகாசு பெற்று பஞ்சம் போக்கியமை - இவை குறிப்பிடத்தக்கது.
- கோயிற்திருப்பணி – திருவங்கமாலை (உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் விளித்து அவற்றை இறை வழிபாட்டுக்கு நெறிப்படுத்துவதாக)
- தாச மார்க்கத்தில் வாழ்ந்தமை
- அரசரை மதம் மாற்றியமை – ஆன்ம வீரம்
- சமூக, சமரச மனப்பாங்கை வளர்த்தமை – "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்"
- தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பினை விளக்குதல், இறை நம்பிக்கை இறைவனின் உருவம் உலக நிலையாமை கருத்துக்கள்
- சிரமதானப் பணிக்கு முன்னோடி
- பக்தி பூர்வமாக இறைவனை வழிபட வேண்டுமென வாழ்ந்து காட்டியவர்

உதாரணம் - சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்

- பஞ்சாட்சர மந்திரம் - தேவாரப் பதிகமூடாக விளக்குதல்
- 81 வயது – சித்திரை சதயம் குருபூசைத் தினம்
- சாலோக முத்தி

**சுந்தரமூர்த்தி நாயனார்**

- திருமுனைப்பாடி – திருநாவலூர் - சடையனார், இசைஞானி அம்மையார் - நம்பியாரூரர்
- அழகுக் குழந்தையை – நரசிங்க முனையார் அரண்மனையில் வளர்த்தமை
- திருமணம் - புத்தூர் சடங்கவி சிவாச்சாரியின் மகள் - திருமணம் தடை

- இறைவன் - முதியவேதிடனாக தோன்றி அடிமை ஓலை காட்சி தடுத்தாட் கொண்டமை
- திருக்கைலாய சேடியர் - கமலினி – திருவாரூர் - பரவையாராக பிறந்து நம்பியாரூரரை மணந்தமை
- திருவாரூர் பங்குனி உத்திர திருவிழாவிற்கு செலவிற்காக செங்கற்கள் - பொன் கட்டியானமை
- பன்னீராயிரம் பொன்னை மணிமுத்து ஆற்றில் போட்டு திருவாரூர் குளத்தில் பெற்றமை
- தண்ணீர், பொதிசோறு பெற்றமை
- (அநிந்திதை) சங்கிலியாரை மனந்தமை
- பங்குனி உத்தர திருவிழா காண ஊர் எல்லையை தாண்டி கண்பார்வை இழந்தமை
- இறைவனிடம் ஊன்று கோல் பெற்றமை பின் இடக்கண் பார்வையும், பின்னர் வலக்கண் பார்வையையும் பெற்றமை
- இறைவன் சுந்தரர் பொருட்டு பரவையாரின் கோபம் தணிய தூதுவராக சென்றமை
- சேரமான் பெருமாளுடன் நட்பு – சேரமான் தோழரானமை
- தேவார பதிகம் பாடியமை
- தலயாத்திரை - இராமேஸ்வரத்தில் இருந்து திருக்கேதீச்சரத்தை பாடியமை
- சேரநாடு செல்லும் போது காவிரி ஆறு பெருக்கெடுக்க – பதிகம்பாடி – காவி பிரிந்து வழி விட்டமை
- யோக நெறியில் நின்றமை
- 18 வயது வரை வாழ்ந்து ஆடிச்சுவாதியில் - முத்தி – சாரூபம்
- தேவர்கள் வெள்ளை யானையில் சுந்தரரை ஏற்றிக் கையிலைக்கு செல்லல்
- சேரமான் வெள்ளைக் குதிரையில் சென்றமை
- தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பு – சிவனது தோற்றப் பொலிவு, வேதாகம கருத்துக்கள்
- சமூக, சமரச மனப்பாங்கை வளர்த்தமை

**மாணிக்கவாசகர் - 9ஆம் நூற்றாண்டு**

- பாண்டிய நாடு – திருவாதவூர் - சம்புபாதாசிரியார், சிவஞான வதியாருக்கும், வாதவூரர் பிறந்தது
- மதுரையை தலைநகராகக் கொண்ட அரிமர்த்த பாண்டிய அரசவை அமைச்சராக இருந்தார்
- வாதவூரரின் திறமை, சிறந்த பணியால் தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் பெறல்
- கீழைத்துறைமுகத்தில் அராபியக்குதிரைகள் - மரக்கலங்களில் வந்திருந்தமை – வாதவூரர் பரிவாரங்களுடன் குதிரை வாங்க சென்று இடையில் குருந்த மர நிழலில் - குருநாதர் சீடர்களுக்கு போதிப்பதைக் காணுதல்
- உலக பந்தங்கள் அறுந்து ஆன்மீக நாட்டம் ஏற்படும் தானும் சீடனாகிக் கொண்டு வந்த பொருட்களை சிவனடியாருக்கு உணவளிக்கவும், மடங்கள் கட்டவும் செலவிட்டமை
- மன்னனின் அழைப்பில் மீண்டும் மதுரை திரும்பி குருநாதர் கொடுத்த மாணிக்கத்தை மன்னனுக்கு கொடுத்து ஆவணி மூல நாளில் - குதிரைகள் வரும் என்றமை
- குதிரைகள் வராமல் சிறையில் அடைக்கப்பட்டமை. காட்டிலுள்ள நரிகளை பரிகளாக்கி இறைவனே தலைமை வணிகனாக மதுரை வந்தமை
- தொழுவத்தில் பரிகள் மீண்டும் நரிகளானமை, ஏனைய குதிரைகளை கடித்து குதறியமை
- வாதவூரர் சுடுமணலில், நெற்றியில் கல்வைக்கப்பட்டமை - இறை அருளால்

அடை மழை பெய்தமை – வைகை பெருக்கெடுப்பு – விடுதலை

- செம்மனச்செவ்வி – சிவன் கூலியாள் - முதுகில் பிரம்படி - கூலியாள் மறைய அடி அரசன் முதுகிலும், ஜீவராசிகள் அனைத்திலும் பட்டமை
- இறைவன் இடபரூபராக தோன்றி – வாதவூரர் பொருட்டே திருவிளையாடல்

- சிவ தலங்கள் - யாத்திரை – மணிமிணிப் பனுவல்களை பாடி – மணிவாசகர்
- ஊமைப்பெண்ணை பேசவைத்தமை
- திருவாசகம், திருக்கோவையார் பாடியமை
- தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பு -இறைவனின் இயல்புகள்

அடியார்க்கு அருள் செய்யும் திறம்
சைவ சித்தாந்த கருத்துக்கள்
மும்மலங்கள், கன்மம், மறுபிறப்பு, பக்தி, ஞான வாழ்க்கை சிறப்பு

- தலைமைத்துவம், தெய்வ நம்பிக்கை
- 32 வயது வாழ்ந்து – ஆனிமகம் - சாயுச்சிய முத்தி – ஞான நெறி

**02. பக்தி இயக்கத்தின் பொதுப்பண்புகளை ஆராய்க.**

- பக்தி இயக்கம் பல்லவர் காலத்திலே வைதிக கலாச்சாரத்தை வளர்த்து செல்வதில் மிக முக்கிய பங்களிப்பு
- சைவ, வைணவ கருத்துக்களை அதன் அடிப்படை அம்சங்களை இவ்வியக்கம் அழகிய தமிழினை ஆயுதமாகக் கொண்டு பரப்பியமை
- பாடல்களில் பக்தி எனும் உணர்வு
- அற்புதங்கள் மூலம் சைவ, வைணவ கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துக்காட்டல்
- பல்வேறு குலத்தினை சேர்ந்தவர்களை தம்மோடு இணைத்துக் கொண்டமை
- சைவ, வைணவ தலங்களின் சிறப்பை எடுத்துக்காட்டியமை
- அரச சபை முதல் குடிமக்கள் வரை பக்தி இயக்கத்தின் செயற்பாடுகள்.

- இறைவனது தோற்றத்தினை பாடி மக்கள் மணதில் இறைவனுக்கு இடம் அளித்தல்

உதாரணம் - “தோடுடைய செவியன்.........”
“குனித்த புருவமும்......”
ஆழ்வார் - “பச்சை மாமலை போல் மேனி......”

- ஒரு அசைவியக்கமாக செயற்பட்டமை
- வாதங்களை புரிந்து சமயத்தை வளர்த்தமை
- சிவனடியவர்களை இறைவனாக கருதி வழிபடுதல் வேண்டும் என்ற கொள்கை
- இலகுவான வழிபாடு – அன்பு வழியில் இறைவனை அடையலாம் என்பதை வாழ்ந்து காட்டியமை
- தலங்களையும், சூழவுள்ள சுற்றாடலையும் பாடலாகப் பாடியமை

உதாரணம் - திருக்கேதீச்சரம், திருகோணேச்சரம்

- பெண்களையும் பக்தி இயக்கத்தில் சேர்த்துக்கொண்டமை
- ஆலயத் தொண்டுகள் செய்தமை
- ஊர் ஊராக சென்று பிரச்சாரம் செய்தனர் - புராண, இதிகாச கதைகளை பாடல்களில் இணைத்துக் கொண்டமை
- சிவ சின்னங்களின் சிறப்பை எடுத்தக் காட்டியமை

உதாரணம் - “மந்திரமாவது நீறு......”

- சரியைத் தொண்டின் சிறப்பு – பாடல்களில் இடம்பெறுதல்
- குரு லிங்க சங்கம வழிபாட்டின் முக்கியத்துவம்
- நாயன்மார் பல்வேறு மார்க்கங்களில் இறைவனை போற்றுதல்
- தாம் பெற்ற பேரின்பத்தை பெற மக்களுக்கு வழி காட்டியமை
- இயற்கையில் இறைவனை கண்டனர்

- பேசுகின்ற சொல்லிலும், எண்ணுகின்ற எண்ணங்களிலும் கடவுள் கலந்துள்ளார் என்பதை வலியுறுத்தினர்
- மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டியவர்கள்

01. வைணவ பக்தி இயக்கத்தை வளர்ப்பதில் ஆழ்வார்களின் பணிகள் மகத்தானவை என்ற அடிப்படையில் கீழ்வரும் விடயங்களை ஆராய்க.
   1. நம்மாழ்வார் பணிகள்
   2. நம்மாழ்வாரின் பாடல்கள்
   3. பெரியாழ்வார்
   4. ஆண்டாள் பாடல்களும் உட்கருத்தும்

- ➢ திருமாலின் மங்கள கல்யாண குணங்களில் தம்மை ஆழ்த்தியவர்கள்
- ➢ வைணவ மத பக்கதர்கள் - ஆழ்வார்கள்
- ➢ ஆழ்வார்கள் பன்னிருவர் - நாலாயிர திவ்ய பிரபந்தம் (ஸ்ரீ மத்நாத முனிவர்)

**1. நம்மாழ்வார்**

- பாண்டிய நாடு – திருநெல்வேலி மாவட்டம் - தாமிரபரணி – ஆழ்வார் திருநகரி எனும் திருக்குரு ஊரில் - காரியார், உடைய நங்கை (பெற்றோர்
- வைகாசி விசாகத்தில் அவதரித்தவர் - ஸ்ரீ சடகோபர் (ஸ்ரீ வைணவ குலபதி)
- வைணவ சமய உண்மைகளான தத்துவம், இதம், புருடார்த்தம் என்ற 3 பிரிவுகளையும், அர்த்த பஞ்சஞானத்தையும், வைணவ சமய தத்துவங்கள், இறை உண்மைகள், இறைவனுக்கு புரியும் கைங்கரியங்கள், வீடுபேறு – பாடலில் குறிப்பிட்டவர்.

**2. நம்மாழ்வாரின் பாடல்கள்**

- திருவிருத்தகம் - 100 பாடல்கள் உலக கட்டியிலிருந்து விடுபடல்
- திரு வாசிரியம் - 7 ஆசிரியபா, இறைவன் அருட்குணங்களை பரமானந்தம் பொலிய அனுபவித்து பாடியுள்ளார். சரணாகதி முறை வற்புறுத்தப்பட்டுள்ளது.
- பெரிய திருவந்தாதி – 87 பதிகங்கள், பரமானந்தத்தை அனுபவிக்கும் ஆசை பெருக்கத்தை பாடியுள்ளார்.
- திருவாய் மொழி – 27 பதிகங்கள், றைவன் தனக்கு அருள் செய்தமை பற்றி பாடியுள்ளார்.

நம்மாழ்வார் பாடல்களில் பிரம சூத்திரம் பற்றிய கருத்து

- பிரம்ம சூத்திரம் - தத்துவபரம், உபாசபைரம் என 2 பகுதிகளை உடையது
- திருவாய் மொழியில் - 10 பாசுரங்களும் - தத்துவ பரம் - இறைவனின் குணம்
- திருவாய் மொழியில் - அடுத்த 10 பாசுரங்களும் - உபாசன பரம் - இறைவனின் செயல்கள்
- திருவாய் மொழியில் - அடுத்த 10 பாசுரங்களும் - ஜீவாத்மாவின் நிலை - இறைவனின் பெருமைகள்
- பின் ஜவுன் அடையும் பயன்
- பிரம சூத்திரத்தில் பொருள் விஷயமான ஐயம் ஏற்படும் போது திருவாய் மொழியை கொண்டு ஐயம் தீரப்பெற்று, சூத்திர அர்த்தங்களை பாஷியக்காரர் நிர்ணயிப்பர் என்பர் - அழகிய மணிவாளப்பெருமாள் நாயனார்.

**3. பெரியாழ்வார் (பட்டர் பிரான்)**

பாண்டிய நாடு - ஸ்ரீ வில்லிபுத்தூர் - வேயக்குடீ – முகந்தர், பதுமை – மகன் கருடாழ்வாரின் அம்சமாக – ஆனி சுவாதி நட்சத்திரம்

- இளமையிலேயே மனதில் விஷ்ணுவை நிலைநிறுத்த வழிபட்டமையால் - விஷ்ணு சித்தர்
- நந்தவனம் அமைத்து – மலர்கொய்து – மாலை தொடுத்து – திருமாலுக்கு சாத்தும்பணி

- பாண்டிய அரசவையில் - இறையருளால் பொற்கிழி பெற்று ஸ்ரீ வில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானுக்கு கோயில் கட்டி – அங்கு மலர் மாலை

- பிரபந்தங்கள் - திருப்பலாண்டு, பெரியாழ்வார் திருமொழி

திருப்பல்லாண்டு – பாண்டியன் - பெயரியாழ்வாரை நகர்வலம் அழைத்து வந்த போது – பொருமாள் பிராட்டியுடன் கருடன் மீதமர்ந்து காட்சி கொடுக்க இக்கலிகாலத்தில் முகம் காட்டுகிறாரே. அவருக்கு தீய்கு நேருமோ என பயந்து யானை மீதிருந்த மணிகளை எடுத்து தாளமாகக் கொண்டு ‘‘பல்லாண்டு பல்லாண்டு’’ என மங்களாசாசனம் செய்தார்.

- பெரியாழ்வார் திருமொழி – 43 பதிகங்கள் (திருமொழி)
  - கண்ணனின் அவதார சிறப்புடன் தொடங்குகின்றது.
  - கண்ணனின் பிள்ளைக் குணங்களையும், இளம் பருவ செயல்களையும் கண்ணனின் வளர்ப்பு தாயான யசோதையாகவே தம்மை நினைத்து பாடியுள்ளார்.
  - விசிட்டாத்வைத கோட்பாட்டின் - சிறப்பைக்காட்டும்
  - விஷ்ணுவின் சித்தத்தில் உடையவராக வாழ்க்கையை தொடங்கி விஷ்ணுவின் சித்தத்தில் உறைபவராக முதரிச்சி பெற்றதையும் காட்டுகிறது.

**4. ஆண்டாள்**

- நந்தவனம் அமைத்து மாலைகட்டி ஸ்ரீவில்லி புத்தூர் பெருமாலுக்கு சாத்தி வந்த பெரியாழ்வார் துளசி செடிக்கு கீழ் கிடைத்த பெண் குழந்தைக்கு கோதை என பெயரிட்டு வளர்த்தார் அவரே ஆண்டாள்.

- கோதை பெரியாழ்வாருடனும், பாகவதர்களுடனும் பழகி பூர்வமான ஞானத்தையும், கற்பனா சக்தியையும், கவிதை இயற்றும் சக்தியையும் பெற்றிருந்தார்.

ஆண்டாள் - பாடல்கள் - திரப்பாவை, நாச்சியார் திருமொழி
திருப்பாவை - 30 பாசுரங்கள்

- பல பகுதிகளை கொண்டது
- அஞ்ஞானத்தில் ஆழ்ந்த கிடக்கும் ஆன்மாக்களுக்கு ஞானம் ஊட்டி இறைவனுடன் கலந்து பேரின்பத்தை அனுபவிக்க செய்வதை விளக்குகின்றது.
- 1 – 5 அர்த்த பஞ்சமான ஈசுவர சொரூபம்
- 6 – 15 பகவதி கொரூபம்
- 16 – 20 ஆன்மாக்களையும் கையற்று நிற்கும் நிலையும்
- 21 – 25 உபாயமாகிய பிரபகதியும்
- 26 30 வீடுபேறு அடையும் நிலையும் உணர்த்தப்படுகின்றன

**நாச்சியார் திருமொழி**

- 143 பாசுரங்கள்
- ஆண்டாள் விஷ்ணுவை தன்னுடைய காதலனாக்கிக் கொண்டு பாடும் முறையில் அமைந்தது.

**2. சித்தர்கள்**

01. அனுபூதி என்றால் என்ன?
   1. இறைவனை கண்ட அனுபவத்தில் பூரிப்பது அனுபூதியாகும்.
   2. மனித நிலைமாற்றத்தை நோக்காகக் கொண்ட பல்வேறு அனுபவங்கள், சம்பிரதாயங்கள், முறையான பயிற்சிகள், ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செயன்முறையால் உண்டாகும் மனித நிலைமாற்றம்.
   3. மனித மனத்தின் நிலைகள் மற்றும் அசாதாரண அனுபவங்களுடன் இணைந்த ஒரு ஆன்மீக நிலை

02. அனுபூதி பற்றி "ஆன்மீக வாழ்க்கை பற்றிய கலை அல்லது அறிவியல் தான் அனுபூதி" என்று கூறியவர் யார்?
ஈவீலின் அன்டகில் (Evelyn Underhill)

03. "இறுதி உண்மையை விளங்கிக் கொள்வதற்கு இட்டு செல்லுகின்ற விசேட மனம் சார் நிலைகள் தான் அனுபூதி" என குறிப்பிட்டவர் யார்?
மெக் லெனன்

04. இறைவனுடன் நேரடித்தொடர்பு கொள்கின்ற ஓர் அனுபவமே அனுபூதி எனக்குறிப்பிட்டவர்கள் யாவர்?
Blake More (பிளக்மோர்)
Jennett (ஜெனட்)

05. ஆன்மீக உண்மை பற்றிய அறிவை வழிபாட்டின் ஊடாக அல்லது ஆழ்ந்த சிந்தனையின் ஊடாகவே அடைய முடியும் என்ற நம்பிக்கையால் எழுந்த ஒரு சமய செயற்பாடு அனுபூதி என கூறும் அகராதி எது?
Merriam webster அகராதி

06. அனுபூதியை இறை அனுபவ ஞானம் என எந்த அகராதி குறிப்பிடுகின்றது?
செந்தமிழ் அகராதி

07. தானே உணர்ந்து பெற்றிடும் அறிவு அனுபூதி என குறிப்பிடும் அகராதி எது?
நர்மதாவின் தமிழ் அகராதி

08. சித்தர்கள் எப்படிப்பட்டவர்கள்?
சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள்

09. சித்தரின் வழிபாடு எத்தகையது?
பிராணாயாமத்தின் மூலம் சித்தம் ஒடுங்கி வழிபாடு செய்யும் நிலையே சித்தர் வழிபாடாக அமைகின்றது.

10. ஆன்மார்த்த வழிபாட்டை அறிமுகம் செய்தவர்கள் யார்?
சித்தர்கள்

11. தமிழ்நாட்டுப் பதினெண் சித்தர்களும் யாவர்.

01. அகத்தியர
02. பட்டினத்தார்
03. பத்திரகிரியார்
04. குதம்பைச்சித்தர்
10. திருமூலர்
11. சிவவாக்கியர்
12. அகப்பேய்ச்சித்தர்
13. கருவெளிச்சித்தர்

05. அநகுணிச்சித்தர்
06. பாம்பாட்டிச்சித்தர்
07. கருவூரார்
08. கணபதி தாசர்
09. சட்டைமுனி
14. கொங்கணச்சித்தர்
15. இடைக்காட்டுச்சித்தர்
16. மதுரைவாலை சாமி
17. உரோமரிஷி
18. போகர் சித்தர்

**(அ) திருமூலர்**

12. திருமூலர் வாழ்ந்த காலத்தினை குறிப்பிடுக.
கி.பி 3ம் நூற்றாண்டுக்கும் 6ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்

13. திருமூலர் எந்த மரபில் வந்தவர்?
திருக்கைலாச மரபில் வந்தவர் (சிவ மரபு ∴ நந்தி மரபு ∴ நாதன் மரபு)

14. திருமூலர் சிவாகமங்களை யாரிடம் கற்றுணர்ந்தார்?
திருநந்தி தேவரிடம்

15. திருமூலரின் இளமைத் திருநாமத்தைக் குறிப்பிடுக.
சுந்தர நாதன்

16. திருமூலர் என பெயர் பெற்றதன் காரணத்தை தருக.
இடையன் மூலனின் இறந்த உடலுள் கூடுவிட்டுப் புகுந்ததால் திருமூலராக விளங்கினார்.

17. திருமூலர் எங்கே யோக நிஷ்டையில் ஆழ்ந்தார்?
திருவாவடுதுறையில்

18. சித்தர் பரம்பரையின் வித்தாகவும், தமிழ்நாட்டில் உதித்த சித்தர்களில் தலைமை சித்தராகவும் விளங்குபவர் யார்?
திருமூலர்

19. மூவாயிரம் பாடல்களாலான சைவத் திருநூல் எது?
திருமந்திரம்

20. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையாக உள்ளது?
பத்தாம் திருமுறை

21. தமிழ் ஆகமம் என்று கூறப்படும் நூல் எது?
திருமந்திரம்

22. மந்திர சாத்திரம், தந்திர சாத்திரம் என போற்றப்படுவதுடன் தர்மசாத்திரமாகவும் விளங்கும் நூல் எது?
திருமந்திரம்

23. "தற்பரம் கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே" என்றும் சைவத்தின் முடிந்த முடிபான சித்தாந்த கொள்கை பற்றி முதன் முதலில் குறிப்பிட்ட திருநூல் எது?
திருமந்திரம்

24. திருமந்திரத்தில் விரித்துத் தமிழ்ப்படுத்தி 9 ஆகமங்களையும் குறிப்பிடுக.
1. முதலாம் தந்திரம் - காரணாகமத்தின் சாரம்
2. இரண்டாம் தந்திரம் - காமிகாகமத்தின் சாரம்

3. மூன்றாம் தந்திரம் - வீராகமத்தின் சாரம்
4. நான்காந் தந்திரம் - சித்தியாகமத்தின் சாரம்
5. ஐந்தாற் தந்திரம் - வாதுளாகமத்தின் சாரம்
6. ஆறாந் தந்திரம் - வியாமளாகமத்தின் சாரம்
7. ஏழாந் தந்திரம் - காலோத்தராகமத்தின் சாரம்
8. எட்டாம் தந்திரம் - சுப்பிராபேதாகமத்தின் சாரம்
9. ஒன்பதாம் தந்திரம் - மகுடாகமத்தின் சாரம்

**(ஆ) ஈழத்துச்சித்தர்கள்**

25. ஈழத்து சித்தர்கள் 6 வரை தருக.
1. கடையிற் சுவாமி
2. சித்தானைக்குட்டி சுவாமி
3. நவநாத சித்தர்
4. யோகர் சுவாமி
5. செல்லப்பா சுவாமி
6. பெரியானைக் குட்டிச் சுவாமி

**(இ) கடையிற்சுவாமிகள்**

26. கடையிற் சுவாமிகள் வாழ்ந்த காலத்தையும் இடத்தையும் தருக.
இந்தியாவில் பெங்களூரில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்

27. இவர் யாருடைய உத்தம சீடராக கருதப்பட்டார்?
ஸ்ரீ நரசிங்க பாரதியாரின்

28. ஸ்ரீ நரசிங்க பாரதியாரால் பெற்ற தீட்சா நாமம் யாது?
முத்தியானந்தர்

29. கடையிற் சுவாமிகள் ஆரம்பத்தில் செய்த தொழில் யாது?
பெங்களூர் நீதிமன்றில் நீதிபதியாகக் கடமையாற்றினார்

30. கடையிற் சுவாமிகள் யார்மூலம் ஈழத்திருநாட்டிற்கு வருகை தந்தார்?
யாழ்ப்பாணம் வயிரமுத்துச் செட்டியார்

31. இவருக்கு கடையிற் சுவாமிகள் என பெயர் வரக்காரணம் யாது?
யாழ்ப்பாணம் பெரியகடை வீதியைத் தமது பிற்கால வாழ்விடமாக கொண்டமையால்

32. கடையிற் சுவாமிகள் யாரை உத்தம சீடனாக்கிக் கொண்டார்?
குழந்தை வேல் சுவாமிகளை

33. கந்தர் மடத்தில் அமைந்தள்ள வேதாந்த மடம் யாரால் தாபிக்கப்பட்டது?
மகாதேவ சுவாமிகளால்

34. “பெரிய கடைநாதன், பித்தன் திருக்கோலம் கரியவர்ண சீலை கருந்தோலான சால்வை துரியாத்தப் பொட்டுத் துலங்க நடைமெட்டுச் சரியாய் அறிந்தேத்தித் தழைத்தாட்படுவீரே” எனப்பாடியவர் யார்?
குழந்தைவேற் சுவாமிகள்

35. இவரின் (கடையிற் சுவாமிகள்) பணிகள் மூன்று தருக.
   1. ஆன்மீக வேதாந்த ஞானத்தை உட்பொருளாகக் கொண்டு செயற்பட்டார்.
   2. மக்களின் துயரங்கைளக் களைத்தார்.
   3. மக்களின் இன்ப துன்பங்களில் தானும் ஒருவராக சேர்ந்து செயற்பட்டார்.

36. இவரின் சித்துவேலைகள் 3 தருக.
   1. பொய்யொழுக்கமுடையவரை சீரான வழியில் கொண்டுவர வழியில் மெழுகு உருக்கியிருந்தவனிடம் அதனை வாங்கி உண்டு, சுற்றித் திரிந்தவர்களை அவ்வெழுக்கத்திலிருந்து விலகச் செய்தமை.
   2. கந்தையாச் செட்டியாரின் பாட்டியாரும் பாட்டனாரும் வறுமையுற்று வாழ்ந்த போத வறுமை போக்க இரும்பைப் பொன்னாக்கிக் கொடுத்தமை.
   3. கடலில் புயலில் தத்தளித்த மீனவனை காப்பாற்ற வீட்டு முற்றத்தில் நின்று தடியினால் சவள்போன்று முற்றத்தை வலித்து, மீனவனைக் காப்பாற்றிக் கரைசேர்த்தமை

**(உ) சித்தானைக்குட்டி சுவாமிகள்**

37. கடையிற் சுவாமிகள் எங்கு எப்போது சமாதியானார்?
நீராவியடியில் 1882 புரட்டாதி மாதம் பௌர்ணமி தினத்தில்

38. சித்தானைக்குட்டி சுவாமிகள் எந்த பரம்பரையில் உதித்தவர்?
தமிழகத்தில் இராமநாதபுரத்தில் ஆட்சி செய்த சிற்றரசர் பரம்பரையில்

39. சித்தானைக்குட்டி சுவாமிகளின் இளமை திருநாமம் யாது?
கோவிந்தசாமி

40. பெரியானைக்குட்டி சுவாமிகளின் ஆத்மார்த்த சீடராக விளங்கியவர் யார்?
சித்தானைக்குட்டி சுவாமிகள்

41. சித்தானைக்குட்டி சுவாமிகளின் பணிகள் 4 தருக.
   1. பல்வகை நோய்களை குணப்படுத்தியமை
   2. இறைநம்பிக்கையை ஏற்படுத்தவதற்காக கிராமங்கள் தோறும் சென்று ஆன்மீக தத்துவங்களை விளக்கியமை
   3. சாதி, மதம், இனம் பாராது யாவருக்கும் அறிவுரை கூறியமை
   4. தொழில் செய்பவர்களின் குறைகளை அல்லல்களை போக்கியமை

42. சித்தானைக் குட்டி சுவாமிகளின் சித்துவேலைகள் 5 தருக.
   1. இந்தியாவில் புகையிரதப் பயணத்தில் நவநாதசித்தர், பெரியாணைகுட்டி சுவாமிகளுடன் வருகை தந்து புகையிரதச் சீட்டினை பெறாமையினால் மூவரையும் இறக்கியமையால் புகையிரதத்தை ஓடாமல் நிறுத்தி பின் புகையிரதத்தை குறிப்பிட்ட நேரத்தின் பின் ஓடச் செய்தமை
   2. கதிர்காமத்தில் வருடாந்த உற்சவத்தின் போது திரைச்சீலை பற்றி எரிந்த போது கல்முனை சந்தியில் நின்று ‘‘கதிர்காமத் திரைச்சீலை பற்றுகின்றது’’ எனக் கூறியவர்.
   3. மட்டக்களப்பு கிராமத்தில் சூட்டுக்களத்தினை பிரித்து ஒவ்வொரு வயல் வரவைகளில் இட்டு விவசாயிகளின் வேலைக்காரக் கோலினால் அடியுண்டு களத்தில் நெற் பொலி பிரகாசிக்கச் செய்தார்.
   4. மட்டக்களப்பில் நோய்வாய்ப்பட்டு இறந்த ஒரு பெண்மனியை உயிர் பெற்றெழச் செய்தமை.
   5. மீனவர் வாடிக்குச் சென்று வலைகளை அறுத்து, துண்டுகளாக்கி சவளினால் அடியுண்டு பின் வலைகளை முன்பிருந்த நிலைக்கு ஆக்கியமை

43. சித்தானைக்குட்டி சுவாமிகள் யாரால் ஆட்கொள்ளப்பட்டவர்?
நவநாத சித்தராலும், பெரியானைக்குட்டி சுவாமிகளாலும்

44. சித்தானைக்குட்டி சுவாமிகள் சமாதியடைந்த இடத்தைத் தருக.
மட்டக்களப்பு கரைத்தீவில்

**(ஊ) சிவயோக சுவாமிகள்**

45. "நீர் ஒரு தெய்வீக மனிதர்" என்று சியோக சுவாமிகளை குறிப்பிட்டவர் யார்?
பிறௌனி என்ற ஆங்கிலேயர்

46. ஸ்ரீ திக்கிரி பண்டா திஸ்ஸநாயக்க காரியதரிசி, இலண்டன் புத்த விகரை எழுதிய கட்டுரையில் யாது குறிப்பிடப்பட்டிருந்தது?
யோகர் சுவாமிகள் நான் சந்தித்த மாபெரும் ஆத்மீகத்தலைவர்

47. யோகர் சுவாமிகளுக்கு தூண்டுகோலாக அமைந்த நூல்கள் யாவை?
வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, திருமுறைகள், ஔவையார் பாடல்கள், திருக்குர் ஆன், விவிலிய வசனங்கள்

48. யோகர் சுவாமிகளின் குரு யார்?
செல்லப்பா சுவாமிகள்

49. சுவாமிகளின் சமய ரீதியான சிவதொண்டு யாவை?
1. சிவதொண்டு நிலையங்களை உருவாக்கியமை.
2. திருமுறை வகுப்புக்கள்
3. புராண படனம்
4. சித்தாந்த சாத்திரங்களை கற்றல்
5. கோயில் தொண்டுகள்
6. பாதயாத்திரைகளை மேற்கொண்டமை
7. தியானப் பயிற்சிகள்

50. யோகர் சுவாமிகளின் சமூக ரீதியான சிவதொண்டுகள் யாவை?
1. சிரிய வாழ்க்கை முறை
2. வாழ்க்கையில் தியானம் செய்தல்
3. கடமையே வழிபாடு
4. ஒருவரைப் பற்றி குறை கூற எமக்கு உரிமையில்லை
5. நோய் தீர்த்தல்
6. மழை பெய்வித்தமை
7. மது விலக்கு
8. விவசாய விருத்தி
9. சிவதொண்டாக மொழிப்பெயர்ப்புப் பணிகள்
10. இனம், சாதி, சமயம் பாராது சிவதொண்டு

**(எ) வைகுந்த சுவாமிகள்**

51. வைகுந்த சுவாமிகள் பிறந்த இடம், ஆண்டு, பெற்றோர் என்பவற்றை தருக.
இடம் :- இந்தியாவின் தென்கோடியான குமரி மாவட்டத்தில் தாமரைக்குளம் எனும் சிற்றூர்

ஆண்டு :- கி.பி 1809
பெற்றோர் :- பொன்னு நாடார், வெயிலாள் தம்பதிகள்

52. தீயசக்திகளை ஒடுக்குதல், மற்றும் பேய்களின் எரிப்பு பற்றி எந்த நூல் குறிப்பிடுகின்றது?
அகிலதிரட்டு அம்மானை

53. வைகுந்த சுவாமிகளின் பணிகள் 3 தருக.
1. சாதிவேறுபாடின்றி ஒரே குளத்தில் குளிக்க போதித்தார்
2. சமபந்தியில் உண்பதை எடுத்துரைத்தார்
3. தாழ்த்தப்பட்டவரை இறையியல் ரீதியாகவும், சமூதாய ரீதியாகவும் வெகுவாக தேற்றி தைரியமளித்தார்.

54. இந்தியாவின் முதல் சம்பந்தி எங்கு நிறுவப்பட்டது?
வைகுந்த சுவாமியின் சமய பீடங்களிலே நிறுவப்பட்டது.

55. வைகுந்த சுவாமிகளது ஒருமைக் கோட்பாட்டு சமயத்தின் மூன்று சட்டங்கள் எவை?
1. மனுநீதம் - சமுதாயத்தில் தனிமனிதனின் கடமைகள்
2. இராம நீதம் - ஆட்சி புரியும் மன்னனுக்கான கடமைகள்
3. தேய்வ நீதம் - இறையியல் சட்டங்கள் மற்றும் கடமைகள்

56. வைகுந்த சுவாமிகள் எப்போது சமாதி அடைந்தார்?
1851 யூன் மாதம் திங்கட்கிழமை

57. வைகுந்த சுவாமிகளின் அவதார உடல் தற்போது எங்கு உள்ளது?
சுவாமித் தோப்பு பதியில் பள்ளியறையாக இருக்குமிடத்தில் மண்ணறையில் வைக்கப்பட்டுள்ளது.

# 11 - இந்து கோயிற் கலைகள்

## அறிமுகம்

- இந்துக் கலைகள் லலித கலைகள், அழகியல் கலைகள், கவின் கலைகள் எனப்படும்.
- இசை, நடனம், நாடகம் - அவைக்காற்று கலைகள்
- இறை நம்பிக்கையையும் ஆன்மிகச் செய்திகளையும் வெளிப்படுத்தும் ஊடகங்களாக இந்து கலை வடிவங்கள் விளங்குகின்றன.
- இந்து பண்பாட்டின் ஒரு உறு கலையாகும்.
- கலை என்பது ஒரு வகையில் வழிபாடாகும்.
- கலைகள் சமய ஆசாரங்களாகவும், சமய அனுபவங்களாகவும் சுட்டி காட்டப்படுகின்றன.
- கலை என்பது ஒரு வகையில் அழகியல் ரசனை அனுபவமாகும். மற்றொரு வகையில் இறைவெளிப்பாட்டு அனுபவமாகும்.
- வட இந்தியா, தென் இந்தியா முழுவதிலும் வெவ்வேறு கலை வடிவங்கள் முதன்மை பெற்றுள்ளன. வேசரம், நாகரம், திராவிடம், கலிங்க மரபுகளில் கோயிற் கட்டட மரபுகள் விருத்தி பெற்றுள்ளன.
- ஆலயங்களில் வழிபாடுகளும் பண்பாடுகளும் வளர்ச்சி பெற்று வருவதால் அவை நுண்கலைகளின் உறைவிடமாக அமைகின்றன.

**(அ)**

**1. காஞ்சி கைலாசநாதர் கோயில் அமைப்பு பற்றி விளக்குக.**

- தமிழக திராவிட கட்டிடக் கலை மரபு
- விமானம், மண்டபங்கள், பரிவாரத்தேவர் கோட்டம், சுற்றாலை , பிரகாரம் கோபுரம்
- கருவறை – 16 பட்டை கொண்ட இலிங்கம் உள்ளமை
- கர்ப்பகிரகத்தை சுற்றி வருவதற்கு பாதை அமைப்பு
- கர்ப்பகிரகத்தின் கிழக்கு தவிர ஏனைய 3 திசையிலும் பக்கச் சுவர்களின் நடுவில் - தேவ கோட்டம்
- விமானம், பல தாளம், உள்நோக்கிய சரிவுடன், மேலே ஒடுங்கியது.
- நாற்சதுர வடிவான விமானத்தின் தளங்களில் மாடங்களும், புராதண சிற்பங்களும் சிகரத்தின் மேலே தூபி
- திருச்சுற்றாலையை சுற்றி 58 சிறிய தேவகோட்டங்கள்
- இராச சிம்மனால் கட்டப்பட்டது.
- பெரிய கற்றளி என அழைக்கப்படுவது

**2. காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலின் கலை அழகினை விளக்குக.**

- பல்லவர் கால கட்டடகலையின் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு
- கைலாசநாதர் கோயிலை விட பெரியது
- சுற்றாடலை மண்டம், கருவறை, முக மண்டபம்
- கருவறை 90 அடி நீளமுள்ள பக்கங்களை கொண்ட சதுர வடிவம்
- கருவறை உயரம் தரையிலிருந்து 60 அடி ஆகும்.
- விமானம் 4 தளம் - சுற்றிலும் தடைவழி உள்ளது.
- விமானத்தின் சிற்ப வேலைப்பாடுகள்
- ஆலயத்திலே பிரசாரத்தின் உட்புறத்திலுள்ள திருச்சுற்றானது கூடங்கள் பொருந்திய சாலைகளுடன் காணப்படுகின்றது.
- சாலை நெடுகிலும் யாழித்தூண் நிரைகள்
- பல்லவர் கால கட்டடக்கலையிலும் கலை வேலைப்பாடுகளிலும் மிக உயர்ந்த வளர்ச்சிக் காலம் இராசசின்னமது காலம்

**(ஆ) சிற்பக்கலை**

**முகவுரை**

- கட்டடக்கலையுடன் நெருங்கிய தொடர்புடையது சிற்பக்கலை
- ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி
- சிற்பக்கலை தொடர்பாக ஆகமங்கள், சிற்ப சாத்திரம் கூறுகின்றன.
- சாத்திர நூல்கள் - சிற்பங்களுக்குரிய மூலப்பொருட்கள்

அவற்றை கொண்டு அமைக்கப்படும் வடிவம்
அளவு பிரமானம்
பங்க அமைதிகள்
அங்க இலட்சணங்கள்
} விதிகளாக விபரிக்கின்றன

- சிற்பங்களை இருத்தும் நிலையில் 3 வகைப்படும்.
  1. சல வடிவம் - இடத்துக்கிடம் நகர்த்தக் கூடியவை
  2. அசல வடிவம் - ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுபவை

3. சலாசல வடிவம்- இடத்திக்கிடம் நகர்த்தக்கூடியனவாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது எனும்
நோக்கத்திலம் நிறுவப்பட்டவை.

- தோற்றத்தை கொண்டு 3 வகைப்படும்
  1. அமைதித் தோற்றம்

அமைதியான நிலையில் அடியவர்களுக்கு வேண்டுவனவற்றை வழங்கும் திருக்கரங்களுடன் கூடிய வடிவம்

  2. அருளும் தோற்றம்

ஊர்திகளுடன் நின்ற நிலையில் அணிகலன்களுடன் படைக்கலங்களுடன் அச்சம் அகற்றி காத்தருள்வது

  3. அச்சுறுத்தும் தோற்றம்

பகைவர்களை கொல்லும் தோற்றத்தில் படைக்கருவிகளுடன் அச்சுறுத்தும் போர்தொழில் செய்யும் வடிவம்

- செதுக்கப்பட்டுள்ள விதத்தைக் கொண்டு 3 வகைப்படும்
  1. முழுவடிவ சிற்பங்கள்

முழு அங்கங்களும் வெளியே தெரியும்

  2. புடைப்புச் சிற்பங்கள்

வடிவத்தின் அங்கங்களின் ஒரு பகுதி மட்டும் தெரியும்படி செதுக்கப்படுபவை

1. சிற்பக்கலையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குக.
   - இந்திய வரலாற்றில் - சிந்துவெளிக்காலத்தில் தோற்றம்
   - சிந்துவெளி – நடன மாதின் வெண்கலப் படிமம், ஆணின் வடிவம் குட்டிகளுடன் கூடிய குரங்கின் வடிவம்
   - வட இந்தியா – கி.பி 4ஆம் C இந்துசமய சார்புடைய சிற்பங்கள்
   - உதயகிரி, தியோகா, வட மதுரை – வைணவ சமய சார்புடைய விஷ்ணு அவதார சிற்பகங்கள்
   - லிங்கராஜர் கோயில், பரசுராமர் கோயில், கோனராக் சூரியனார் கோயில்
   - தக்கணத்தில் இந்து சமய சார்புடைய சிற்பங்கள்

உதாரணம் - வாதாபிச் சாலுக்கியர்கள், கல்யாணி சாளுக்கியர்,கொள்சல மன்னர்கள் அமைத்த ஆலயங்கள்

   - வாதாபி சாளுக்கியரின் குகை கோயில் - விஷ்ணுவின் அனந்த சயனவடிவம் வராக அவதாரம்
   - ஐகோளே துர்க்கையம்மன் சிற்பங்கள் - குக்கனூர் கல்லேஸ்வரம், சௌத்தம்பூர் முக்தேஸ்வரர் போன்ற இடங்கள்
   - கொய்சல மன்னர் கால கோயிற் சிற்பங்கள்
   - கொய்சல ஈஸ்வரத்தின் தூண்களில் நர்த்தன விநாயகர், நடன சரஸ்வதி நரசிம்மர் தெய்வ வடிவங்கள்

2. தமிழகத்தில் சிற்பக்கலை வளர்ச்சி பற்றி ஆராய்க.
   - கி.பி 5ஆம நூற்றாண்டு – சிற்பக்கலை புதைபொருட் சான்றுகள்
   - பல்லவர் - காஞ்சி கைலாசநாதர் கோயில் சிற்பங்கள், குடைதளி, செதுக்குதனி, கட்டுத்தளி } சிற்பங்கள்
   - விஜய நகர நாயக்க மன்னர்கள் - இறை வடிவங்கள்
     - லெபாஹி வீரபத்திரர் கோயில் - வீரபத்திரர் வடிவம், கல்யாண சுந்தரேஸ்வரர் நாகலிங்கம்
     - மதுரை மீனாட்சியம்மன் கோயில் - லிங்கோற்பவர், கங்காதரர், அர்த்த நாரீஸ்வரர்
     - தேவிகாபுரத்தில் உள்ள லிங்கோற்பவர், கால சங்காரர்

- மதுரை மீனாட்சியம்மன் கோயில் - இராவணன் கயிலை மலையை தூக்கிய காட்சி

திருவண்ணாமலை - கோபுரத்தில் மகிடாசுரமர்த்தனி

கிருஷ்ணாபுரத்தில் - கர்ணன் - அருச்சுனன் போர்

- இதிகாச, புராண கதை சிற்பங்கள்
- தமிழ் மொழிப் புராண கதை சிற்பங்கள் (உதாரணம்) கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம்
- லெபாஷி வீரபத்திரர் கோயிலில் - பெரிய புராணம் - சிறுத்தொண்டர் நாயனார்

(தனது மகனை உணவாகச் சமைத்து, சிவனடியாருக்கு பரிமாறியமை)

3. மாமல்ல புரத்துச் சிற்பங்கள் பற்றி ஆராய்க.

- மாமல்ல புர குகைச் சிற்பம், மாமல்லபுர ரதக்கோயில் சிற்பம், மாமல்லபுர கற்றளி சிற்பம், மாமல்லபுர பாறைச் சிற்பம்
- மாமல்லபுர மலைதளியில் - தருமாரதம், வீம ரதம், நகுல சகாதேவரதம், அர்ச்சுன ரதம், கொற்றவை ரதம், வடக்கு பிடாரி, தெற்கு பிடறி வலையான் குட்டை ரதம்
- நாகர, திராவிட கலைப்பாணி
- 3 தளங்களை உடைய தருமராஜ ரதம் புத்த விகாரை அமைப்புடையது.
- தருமராஜ ரதம் - சிற்பக்கலைக் களஞ்சியம் எனப்படும்.
- தருமராஜ ரதத்தில் இந்து சமய சார்புடைய சிற்பங்கள் (உதாரணம்) நடராஜர்
- பிடாரி ரதம் - அம்மன் சிற்பம்
- இராசசிம்மன் - கட்டுதளஜ மரபு

உதாரணம்

1. மாமல்ல புரக்கட்கரை கோயில்
2. ஈஸ்வரன் கோயில்
3. முகுந்தன் கோயில்
4. தென்னார்காடு – பனைமலை கோயில்
5. காஞ்சி – வைகுந்த பெருமாள் கோயில்

- மாமல்ல புர கடற்கரை கோயில் - ஜலசயனம் எனப்படும்
- காஞ்சி கைலாசநாதர் கோயில் - பெரிய கற்றளி எனப்படும் - இராச சிம்மன்

**(இ) ஓவியக்கலை**

- கலை அழியாது என்பதை எடுத்துக்காட்டும்
- 64 கலைகளில் தனித்துவமானது
- மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி இறைவனை அடைய வழிவகுக்கும்
- ஆரம்ப காலம் - மட்பாண்டம், மரம் / பின்னர் - குகை சுவர்களில் தீட்டப்பட்டன
- ஓவியக்கலை பீடங்கள் - வட இந்தியா – அஜந்தா, வாதாபி, எல்லோரா, ராஜபுத்திர

தென் இந்தியா - பல்லவர் - சித்தன்னவாசல்
- சோழர் - தஞ்சாவூர்
- நாயக்கர் - மதுரை

1. தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்களை ஆராய்க.

- இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது
- கருவறையைச் சுற்றியுள்ள சுற்றாலை இரு பக்கமும் உள்ள சிற்பமானது பல்லவர் கால சிறப்பையும் பிற்கால வளர்ச்சிக்கும் அமைவானது

- யோக தட்சணாமூர்த்தி – பக்கச் சுவரில் முதலில் உள்ள சிவபெருமானின் யோக நிலை
- மான் தோலின் மீது காலை மடித்து அர்த்த யோகப்பட்டத்துடன் சிவன்

- திருக்கைலாயக் காட்சி

சுந்தரரும் சேரமான் பெருமாளும் கைலை செல்லும் காட்டி 4 தந்தமுடைய வெள்ளை யானையில் தாயுள்ள ஒரு இளைஞன் அமர்ந்து பாடிக்கொண்டு கையிலுள்ள தாளத்தில் தாளம் போட்டு செல்கின்றார். அதற்கு வலப்பக்கமாக விரைவாக பாய்ந்து செல்லும் குதிரையில் நல்ல உடற்கட்டுடன் ஒருவன் எனக்காட்டப்பட்டமை.

- தடுத்தாட்கொண்ட வரலாறு

பல தூண்கள் கொண்ட மண்டபத்தில் - அந்தனர் வட்டம் நடுவே கையில் தாழங்குடைப் பிடித்துக் கொண்டு மற்றொருகையில் ஒரு சுவடியை அவையிலே காட்டிய வண்ணம் முதியவர்.

- தில்லைக்காட்சி

சுவரில் - தில்லைப்பொன்னம்பலம் போல கூரையும், அம்பலவாணரின் திருவுருவத்தின் ஒரு பகுதியும், அருகில் அரச கோலத்துடன் ஒருவன் தொழுவதும், அவனுடன் 3 மகளீர் கூப்பிய கைகளுடன் வணங்குகின்றமை.

- திரிபுராந்தகர்

வடபுற சுவர் - சிவன் திரிபுரத்து அசுரர்களை எதிர்த்து போரிடுதல் இதில் சிவனுக்கு உதவியான துர்க்கை சிங்கத்திலும், முருகன் மயிலிலும் போர்க் கோலம் பூண்டு அசுரப்பெண்களின் அவலம்

- இராஜராஜனும் கருவூர்த்தேவனும்

ஆன்மீக பொலிவு மிக்க தோற்றமுடைய முதியவரும் அவரருகிலே ராஜகளை ததும்பிய வதனமுடைய ஒருவன்.

- அன்றாட வாழ்க்கை ஓவியம்

எழில் மிகு இளம் பெண் ஒருத்தி சமையலறையில் அமைப்பதும் மற்றொருத்தி வேகும் அரிசியை கரண்டியால் கிளறுவதும் வேறொருத்தி அடுப்பினுள் விறகை விடுவதும்.

- மங்கையரின் மாண்பு மிகு ஓவியம்

அழகிய ஆடைகளை அணிந்தும் வேலைப்பாடு வாய்ந்த அணிகளை பூண்டும் அமர்ந்த இரு பெண்கள்

- நடன மாதர்

தேவ அரம்பையர் சிலர் நடனமாடும் காட்சி

2. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஓவியங்களை ஆராய்க.

- நாயக்கர் ஓவியங்கள் - மதுரை
- மீனாட்சியம்மன் கோயில் - மண்டப விதானம் - சிவனின் 64 திருவிளையாடல்கள்
- பொற்றாமரை குளத்தருகில் ஊஞ்சள் மண்டப உரை –
  (1) மீனாட்சி திர்விஜயம்
  (2) மீனாட்சி, சுந்தரேஸ்வரர் திருமணம்
- திருமண காட்சியை வானுலக தேவர்கள், பூலோக மக்களும் காண்பது போன்ற காட்சி மற்றும் இடையில் ராணி மங்கம்மாவும், தளவாய் நரசப்பையரும் கண்டுகளிக்கும் காட்சி
- மீனாட்சியம்மனிடமிருந்து ஒருவர் செங்கோலை வாங்கும் காட்சி

- அட்டதிக்கு பாலகருடன் மீனாட்சி போர் செய்வது
- நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல், ஒப்பனை, அணி வகைகள் காணலாம்.

**(ஈ) விக்கிரகக் கலை**

- திருவுருவங்களை ஆலயத்தின் தூண்கள், சுவர்கள், அதிட்டானங்கள் போன்ற இடங்களில் செதுக்குமிடத்து அவை சிற்பங்கள்
- சிற்பங்களது எல்லா அங்கங்களும் வெளித்தெரியும்படியுள்ளவை – விக்கிரகம்
- விக்கிரக மூலப்பொருள் - ஆரம்பத்தில் கருங்கல் பின் உலோகம்
- இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய விக்கிரகம் - பொன், வெள்ளி, செம்பு, சுதை. சுர்க்கரை, ஓடு முதலானவற்றாலும்

நிலையாக நிறுத்தப்படுபவை – கல்வி, மரம் பயன்படுத்த வேண்டும்

- மானசாரம்

விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள் பற்றி பொன், வெள்ளி, செம்பு, கல், மரம், சுதை, சர்க்கரை, பளிங்கு, ஓடு முதலியவற்றால் உருவங்கள் அமைக்கப்பட வேண்டும் என்கின்றது.

- ஆகம, சிறப சாத்திர விதிகளுக்கு அமைய அமைக்கப்படும் விக்கிரங்கள் 3 வகை
    1. சல விக்கிரகம் - இடத்துக்கிடம் நகர்த்த கூடியவை
    2. அசல விக்கிரகம் - நிலையான ஓரிடத்தில் நிறுவப்பட்டவை
    3. சலாசல விக்கிரகம் - நகர்த்தக்கூடியதாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது எனும் நோக்கில் அமைந்தவை
- உலோகங்களில் வார்க்கப்பட்ட படிமங்கள் - பல்லவ, சோழ, விஜய நகர நாயக்க
- ஆகம, சிற்ப சாஸ்திரங்கள், பிரமானமாக அமையும்

- இந்துக்களின் வார்ப்புக்கலை தொடர்பாக பின்வரும் விடயங்களை ஆராய்க.
    1. விக்கிரகம் வார்க்கும் முறை
    2. நடராஜர் மூர்த்தம்
    3. சண்முக வடிவம்

- உலோகத்தினால் எந்த உருவை செய்ய வேண்டுமோ அந்த உருவைப்போல முதலில் மெழுகினால் செய்து கொள்வது வழக்கம்.
    - ➢ மெழுகு வடிவத்துக்கு மேல் புற்று மண்ணை ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று முறை பூசுதல்
    - ➢ அவ்வாறு பூசப்பட்ட மெழுகுப் பாவையை பல நாட்கள் நிழலில் உலர்த்துதல்
    - ➢ பின்னர் தீயிலிடுதல்
    - ➢ உள்ளிருக்கும் மெழுகு உருகி வெளியே வருவதற்கும் பின்னர் உலோகத்தை உருக்க ிஉள்ளே வார்ப்பதற்கென மண்ணின் ஆங்காங்கே துளைகள் இடப்படும்.
    - ➢ மெழுகு உருகி வெளியே வந்ததும் மண் அச்சில் உலோகக் குழம்பை வார்ப்பர்.
    - ➢ வார்த்த வடிவத்தை உளி கொண்டு செம்மைப்படுத்தி நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அழகு செய்வர்.
    - ➢ தமிழகம் 3000 ஆண்டுகளுக்கு முன்பே விக்கிரகங்களை வார்க்க தொடங்கி விட்டது.

உதாரணம் ஆதிச்ச நல்லூர் - உலோக வடிவம்

**(1) நடராஜ மூர்த்தம்**

- 64 – 25 சிறப்பான மூர்த்தங்கள் - 1 நடராஜர்

- சிற்ப சாஸ்திர அளவு பிரமாணப்படி அமைக்கப்படும்
- சைவ சித்தாந்தம், திருமந்திரம், தோத்திர பாடல்கள் - போற்றும்
- சமயம், கலை, தத்துவம்
- ஆனந்த குமார சுவாமி – சிவானந்த நடனம் - ஆய்வு நூல்
- சிவன் கோயில் அனைத்திலும் நிறுவப்படும்
- ஆலயங்களில் ஆடல் வல்லனாகச் சிறப்பு
- இலங்கையில் - பொலநறுவை – அகழ்வில் - நடராஜர் வடிவம்
- சிதம்பரத்தில் - தில்லைக் கூத்தன்
- நடராஜ மூர்த்தம் - மார்கழித் திருவாதிரையுடன் தொடர்பு
- வழிபாடுகள், திருவாதிரை, திருவெம்பாவை, சிதம்பரத்தில் வழிபாடு
- தோற்றம் துடியதனில் தோயுந்திதி ...... உண்மை விளக்கம்
- அங்க இலட்சணங்கள்

முயலகன் - ஆன்மா
பாம்பு - ஆணவம்
புலித்தோல் - கோபத்தை கட்டுப்படுத்துபவன்
முக்கண் - இச்சா, கிரியா, ஞானா சக்தி
சிலம்பு - பலவினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதை குறிக்கும்
திருவாசி - ஓங்காரம்
சிவந்த மேனி - தூய்மைப் படுத்தும் தன்மை
4 கரம் - திசைகள்
திசைகள் - எல்லை இல்லா ஆற்றல்
நெற்றிக்கண் - உயிர்களின் துன்பங்களை புன்முறுவலால் நீக்குகின்றார்
சடாமுடி - ஞானம்
பிறை - பேரழகு
திருநீறு - பராசக்தி
சூலம் - முச்சக்தி
கோடரி - பேராற்றல்
மான் - வேதநாயகன்

- பஞ்ச கிருத்திய விளக்கம்

சிருஷ்டி - படைத்தல் - உடுக்கை ஏந்திய கை
ஸ்திதி - காத்தல் - அபயகரம்
சங்காரம் - அழித்தல் - தீ ஏந்திய கை
திரோபவம் - மறைத்தல் - ஊன்றிய திருவடி
அநுக்கிரகம் - அருளல் - தூக்கிய திருவடி

- திருவைந்தெழுத்தின் தொடர்பு

ந - திருவடி
ம - திருவயிறு
சி - திருத்தோள்
வா - திருமுகம்
ய - திருமுடி

**(2) சண்முக வடிவம்**

- கௌமாரம் - முருகனின் 26 வகை வடிவம்
- சரவணபவன், கந்தசாமி, கார்த்திகேயன், சண்முகன், பால சுப்பிரமணியம்
- கந்த புராணம் - சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் எழுந்து ஆறுமுகமாகி வடிவமே சண்முகன்
- பிரதிமாலட்சணங்கள்
    - ஆறுமுகங்கள்
    - பன்னிரு தோள்கள்
    - பன்னிரு கைகள்
    - வேல்
    - மயில் வாகனம்
    - பல்வேறு ஆயுதங்கள்
- சண்முக தத்துவம்
- சதாசிவன் ஐந்து முகம் அதோமுகன்
- பரமேஸ்வரனின் வெளித்தெரியும் முகங்கள்
    - ஸத்யோகஜாதம்
    - வாமதேவம்
    - தத்புருஷம்
    - ஈசானம்
    - அகோரம்
- பரம ஞானியர் உள்நோக்குக்கு மட்டும் புலப்படும் உள்முகம் - அதோ முகம்
- ஆறுமுக தத்துவம்
- சிவமூர்த்திக்குரிய ஆறு அருட்குணமும் ஆறுமுகமாதல்
    - முற்றறிவு
    - வரம்பில் இன்பமுடைமை
    - இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல்
    - முடிவில் ஆற்றலுடைமை
    - பேரருளுடைமை
    - தன்வயமுடைமை

**(உ) இசைக்கலை**

01. இந்து மதத்தில் இசைக்கலையானது வளர்ச்சி அடைந்த விதத்தை கால அடிப்படையில் ஆராய்க.

- திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைகளில் இசைக்கலையும் ஒன்று
- இறைவனே இசை வடிவினன்
- செவிக்கு இன்பமூட்டுவதோடு ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றை தரவல்லது

**வட இந்தியா**

வேதம் - நான்கு வேதங்களுள் சாமவேதம் - இசைப்பாடல்களால் ஆனவை

**புராணம்**

இறைவனே இசைவடிவினன்

| | | |
|---|---|---|
| உதாரணம் - | சிவன் | - உடுக்கு |
| | நாரதர் | - தம்புரா |
| | சரஸ்வதி | - வீணை |
| | கண்ணன் | - புல்லாங்குழல், சங்கு |
| | திருநந்திதேவர் | - மத்தளம் |

**இதிகாசம்**
இராவணன் சாம கானம் பாடுவதில் வல்லவன்
தனது 10 தலையில் ஒன்றை வெட்டி எடுத்து, நரம்புகளின் துணையுடன் இசை மீட்டி சிவனிடம் வரம் பெற்றவன்

**குப்தர் காலம்**
நாணயத்தில் சமுத்திர குப்தன் வீற்றிருந்து வீணை வாசிப்பது
சமுத்திரகுப்தன் பெரிய கவி எனப்பட்டமை

**தென் இந்தியா**
**சங்க காலம்**
பரிபாடல், சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு

- 5 வகை பண் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
- பண்களை பாடியவர் பாணர்
- யாழ் - இசைக்கருவிகளில் சிறப்பானது
- பெருநாரை, பெருங்குளுகு, தாள சமுத்திரம் - இசை நூல்கள்

**சங்கமருவிய காலம்**

- சிலப்பதிகாரம், மணிமேகலை, காரைக்கால் அம்மையார் பாடல்கள் முதலாழ்வார் மூவர் பாடல்களில் இசையின் சிறப்பு

உதாரணம் - அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை

**பல்லவர் காலம்**

- நாயன்மார்கள், ஆழ்வார்கள்

ஏழிசையாய் இசைப் பயனாய் - சுந்தரர்
ஓசை ஒலி எனலாம் ஆனாய் - அப்பரும் } இசையினைப்
பண்ணும் பதமேழும் - சம்பந்தர் } போற்றிப்
பண் சுமந்த பாடல் பரிசு – மாணிக்கவாசகர் பாடியுள்ளமை

- ஆழ்வார் பாடல்கள் - ''அறுகால் வரி வண்டுகளாயிர நாமஞ்'' என்று திருமாலின் 1000 நாமங்களை பண் இசைந்து பாடுவது.
- மகேந்திர வர்மன் - பரிவாதினி எனும் வீணையில் வல்லவனாக இருந்தான்.
- இராசசிம்மன் இசையில் புலமை பெற்றிருந்தமை – வாத்ய வித்யாதரன் வீணாதரன் (விருது பெயர்)

**சோழர் காலம்**

- ஆலயங்களில் பல் வகை இசைக்கருவிகள் ஆராதனையில் வாசிக்கப்பட்டன.

உதாரணம் - தக்கை, தண்ணுமை

- 1ஆம் இராஜராஜன் கோயில்களில் ஓதும் வழக்கத்தை நடைமுறைப்படுத்தினான்
- வாச்சிய மாராயன் பட்டம் இசைக்கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது.
- தேவாரம் ஓதுவார்களை மேற்பார்வை செய்ய, தேவார நாயகம் நியமிப்பு

**நாயக்கர் காலம்**

- தமிழ் நாட்டில் கீர்த்தனை வடிவம் - நந்தனார் கீர்த்தனை, இராம நாடக கீர்த்தனை
- இசைத்தூண்கள் - உதாரணம் மதுரை அழகர்
- அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் - திருப்புகழ் சிறந்த சந்த லயம் உடைய நூலாகும்

**தற்காலம்**

- கர்நாடக இசை - மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், தியாகராஜ பாகவதர்
- விபுலாநந்தரின் - யாழ் நூல் சிறந்த இசை நூல்
- பாடசாலை - ஆரம்ப வகுப்பு – பல்கலைக்கழகம் வரை ஒரு பாடமாக உள்ளமை
- ஆலயங்களில் பஜனை, பிரார்த்தனை, நாமகீர்த்தனம், கதாகாலாட்சேபம்
- நாதாஞ்சலி, புராண படனம், இசைக்கருவிகள் ஆலயங்களில் பயன்படுத்தல
- பஞ்ச புராணம் பாடும் மரபு

**(உ) பண்ணிசையின் தோற்றம் பற்றி விளக்குக.**

- தமிழ் மக்களின் பாரம்பரிய இசையில் பண் முக்கியம்
- "தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் என்றும் 8 இடங்களாலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு எனும் 8 வகை முயற்சியாலும் பண்ணப்படுவதே பண்" பஞ்ச மரபு எனும் இசைநூல்
- பண் - கர்நாடக இசையில் இராகம் எனப்படும்
- பழந்தமிழ் நூல்களில் - இயல், இசை, நாடகம் எனும் முந்தமிழ் கூறப்பட்டது
- இதில் இசை என்பது - தமிழ்ப்பண் இசை
- பழந்தமிழ் இலக்கியங்களில் பண்ணிசை பற்றியது - பஞ்ச மரபு எனும் நூல்
- சங்கத்தொகை நூல்கள் - நற்றிணை, பரிபாடல், சிலப்பதிகாரம், காரைக்கால் அம்மையார் பாடல்கள்
- பல்லவர் - நாயன்மார் - தேவாரப்பாடல்
- தேவார பதிகங்களை - ஓதுவார்கள், பிடாரர்கள் பாடியமை
- தேவாரப்பாடல்கள் 23 பண்களை கொண்டுள்ளமை
- திருமுறைகண்ட புராணத்தில் பாணர் மரபில் தோன்றிய வல்லி என்றும் பெண் இசை அமைத்ததாக அறிய முடிகின்றது
- தேவாரம் திருவாசகம் - பண் சுமந்த பாடல்கள்
- இறைவனை புகழ்ந்து பாடும் தோத்திரங்களை பண்ணோடு ஓதுவதனால் இறைவனிடம் அன்பும் ஈடுபாடும் பக்தியும் உண்டாகின்றது.
- மனம் பண்படுகின்றது
- புலன்கள் அடங்குகின்றன, இறை அருளும் கிடைக்கின்றது
- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்னும் பஞ்ச புராணம் ஓதும் மரபாக பண்ணிசை விளங்கியமை
- இறை வழிபாட்டில் இசை முக்கியமானது, மகோற்சவங்களில் இசையும், கீர்த்தனையும் பிரதானமானவை.

## 12 - நாட்டார் கலைகள்

01. நாட்டார் கலை என்றால் என்ன?
இயற்கை பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை களிப்படையச் செய்யும் கலைகளை நாட்டார் கலைகள் எனலாம்.

02. நாட்டார் கலையின் மூன்று வகைகளும் எவை?
1) சமயம் சார் கலை
2) சமூகம் சார் கலை
3) தொழில் சார் கலை

**(அ) கூத்து**

03. சங்க காலத்தில் கூத்தினை ஆடுவோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்
கூத்தர்

04. "கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்" என எந்த நூல் குறிப்பிடுகின்றது
சங்க இலக்கியம் - புறத்தினை நூல்

05. சங்க மருவிய காலத்தில் கூத்து எவ்வாறு அழைக்கப்பட்டது.
குரவை கூத்து என அழைக்கப்பட்டது

06. பல்லவர் காலத்தில் கூத்துகளுக்கெல்லாம் தலைவனாக போற்றப்பட்டவர் யார்?
இறைவன்

07. இலங்கையில் காணப்படும் கூத்து வகைகளை தருக.
மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் - வடமோடி, தென்மோடிக் கூத்து
மன்னார் - வடபாங்கு, தென்பாங்கு
மலையகம் - காமன் கூத்து

08. கூத்துக்களுக்கான பொருள் மரபாக அமைவது எவை?
- சமய ரீதியான கதைகளை உள்ளடக்கியது.
- இதிகாச, புராணங்களின் செல்வாக்கு

அரிச்சுனன் தபசு, வாலிவதை, அல்லி அருச்சுனா, கணையாழி, வள்ளி திருமணம், அரிச்சந்திரா மயான காண்டம், காமன்கூத்து போன்றவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.
- சமயப் பெரியார் வரலாறுகள்

மார்க்கண்டேயர், சிறுத்தொண்டர்

09. வடமோடி கூத்திற்கான ஒப்பனைகள் எத்தகையது.
- ஆண்களுக்குரிய முடி பூமுடியாகக் காணப்படும்
- கொடுக்கு கட்டியிருப்பர்
- உடல் முழுவதும் வெள்ளை நிறப்பவுடர் பூசியிருப்பர்
- ஏற்கும் பாத்திரத்திற்கேற்ப ஒப்பனை அமையும்
- ஒப்பனைகளை வைத்துக்கொண்டே பாத்திரங்களை அடையாளம் காண்பர்
- காலில் சலங்கை கட்டி, கையில் ஏதாவது ஆயுதம் ஏந்தியிருப்பர்
- பெரும்பாலும் ஆண்களே பெண்களாக ஒப்பனை செய்து கூத்தாடுவர்

10. தென்மோடி கூத்திற்கான ஒப்பனைகள் எத்தகையது?

- ஆண்களுக்கு அரசமுடி (ராஜகிரீடம்) அணிவர்
- உடுப்பு கரப்பு உடுப்பாக காணப்படும்
- உடல் முழுவதும் வெள்ளை நிற பவுடர் பூசியிருப்பர்
- காலில் சலங்கை கட்டியிருப்பர்
- ஆண்களே பெண்களாக ஒப்பனை செய்து கொள்வர்

**(ஆ) காவடி**

11. கூத்தின் சமூக, சமய முக்கியத்துவம் எத்தகையது?

- ஆலய முன்றலில் வட்டக்களரி அமைத்து. சமய சம்பந்தமான கூத்துக்களை ஆடுவதனால் மக்களிடையே பக்தி உணர்வு கலை உணர்வு விருத்தியடையும்
- போதனைகள் (படிப்பினைகள்) கிடைக்கும்
- வேளாண்மை அறுவடைக்காலம் நிறைவடைந்ததும் கூத்துப்பழகி, அரங்கேற்றத்திற்காக உறவினர்களுக்கு அழைப்பு விடுப்பர்.
- கூத்தில் வரும் கதாபாத்திரங்களின் பெயரால் கதாப்பாத்திரம் தாங்கியவர்கள் யதார்த்த வாழ்விலும் அழைக்கப்படுவர்

உதாரணம் :- தருமர் சண்முகம்
துரியோதனன் முருகப்பர்
வீமன் சிவலிங்கம்
சல்லியன் ஆறுமுகன்

12. காவடி என்பதன் பொருள் விளக்கம் யாது?

காவு + தடி என்றும் இரு பதங்கள் சேர்ந்து காவடி என்றும் சொல் உருவாகிற்று

13. கூத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் 5 தருக.

1) மத்தளம்
2) சல்லரி
3) உடுக்கை
4) பறை மேளம்
5) நாதஸ்வரம்

14. காவடி ஆட்டம் பற்றிய தோற்றப் பின்னனி யாது?

- காவடி ஆட்டத்தின் தோற்றம் பூவீகமான சுமை தூக்கும் செயற்பாடோடு இணைந்தது
- தமது குழுவின் தேவைகளுக்காக சுமை தூக்குதல்
- எஜமானர்களது தேவைகளுக்காக சுமை தூக்குதல்
- நேர்த்திக்காக சுமை தூக்குதல்
- குறிஞ்சிக் குமரனாக முருகனை வழிபட்ட பண்டை தமிழர்கள் மலைமேல் உள்ள வழிபாட்டிடங்களுக்கு காவுதடிகள் மூலம் காணிக்கைப் பொருட்களை காவிச் சென்றமை
- இரும்பனைப் போன்று காவடி எடுத்தும் சந்நிதிக்கு வருபவர்க்கு முருகன் அருள் புரிவார்.

15. காவடி அமைப்பு முறையைப் பற்றி கூறுக.

- காவடி பெரும்பாலும் வில் விளைவு போன்று அமைக்கப்பட்டிருக்கும்.
- வில் வளைவின் இரண்டு பக்கங்களையும் தடியொன்று தொடர்புபடுத்தும்
- காவடியின் இரு பக்கங்களும் மயில் இறகால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்
- அத்துடன் சலங்கையும் கட்டப்பட்டிருக்கும்

16. காவடி அமைப்பதற்குத் தேவையான பொருட்களைக் குறிப்பிடுக.

1. குறுந்தடி
2. வேல்
3. சலங்கைகள்
4. மலர் மாலை
5. மயிலிறகுகள்
6. வளையக்கூடிய தடிகள்
7. துணி
8. முருகனின் சிறிய படம்

17. காவடி ஆட்டத்தின் வகைகளை குறிப்பிடுக.
    1. பாற் காவடி
    2. தானியக் காவடி
    3. புஸ்பக் காவடி
    4. பழக் காவடி
    5. பறவைக் காவடி

18. காவடியின் அமைப்புக்கேற்ப அவை எத்தனை வகைப்படும்? அவை எவை?
3 வகைப்படும்
    1. ஆனந்தக் காவடி - இவ்வகை எல்லோராலும் ஆடப்படும்
    2. துலாக் காவடி - துலா போன்ற வடிவத்தின் மேல் தொங்கி ஆடுவது
    3. முள்ளுக் காவடி - முள்ளுக்குத்தி ஆடும் காவடி

19. காவடி ஆட்டத்திற்கு பயன்படும் இசைக்கருவிகள் எவை?
பறை மேளம், மேளம், தவில், நாதஸ்வரம், உடுக்கு, சல்லாரி

20. காவடிப் பாடல்கள் பெரும்பாலும் யாரைப்பற்றிய துதிப்பதாக அமைகின்றது?
முருகனை

21. காவடியின் அலங்காரப் பொருட்கள் குறிக்கும் தத்துவம் யாது?
வேல் - ஆழ்ந்து, அகன்று நுண்ணிய கடவுட் கொள்கை கெட்ட வரை அழித்து நல்லோரைக் காப்பாற்றுதல்

மயிற்தோகை - பிரணவமாகிய ஓங்காரம்

மயிலிறகுகள் - ஆணவம் அழியாமல் வலிகுன்றி, மலபரிபாகமாகப்பட்டிருத்தல் (சூரன் ஆணவம் அடங்கி
மயிலானமை)

காவடி எடுப்பவர் - ஆன்மா - ஆணவம், கன்மம் முதலான பாசங்களிளின்றும் விடுபட்டு ஆன்மீக விடுதலையை
நாடுதல்

வழிபாட்டு முறை - தன்னைத்தானே துன்புறுத்தி ஆன்மீக விடுதலையைப் பெறுதல்

22. காவடி ஆட்டத்தின் சமய சமூக முக்கியத்துவம் எத்தகையது?
- மனிதர் தமக்கு ஏற்படும் துன்ப, துயரங்கள், நீங்க, பல்வேறு தெய்வங்கள் மீதும் நம்பிக்கை வைத்துக் காவடி எடுப்பர்.
- காவடி எடுத்தல் மென்பக்தியினையும் வன்பக்தியினையும் வெளிப்படுத்துகிறன்றது.

உதாரணம் - பால் காவடி - மென்பக்தி
முள்ளு காவடி - வன் பக்தி

- காவடி எடுப்பவன் தனது பக்தியை வெளிப்படுத்துவதோடு மன அமைதியையும் பெற்றுக் கொள்கிறான்.

- ஈழத்தில் இந்துக்களும் பௌத்தர்களும் கதிர்காம முருகன் மீது காவடி எடுப்பதைக் காணலாம்

**(இ) கரகம்**

23. கரகாட்டம் என்றால் என்ன?
அலங்கரிக்கப்பட்ட செம்பை அல்லது பித்தளையிலான குடத்தை ஆட்டக்காரர் தலையில் வைத்துக் கொண்டு, மேளப் பின்னணிக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாதவாறு ஆடும் ஆட்டம் கரகாட்டம் ஆகும்.

24. கரகம் என்பதன் வேறு பெயர்கள் யாது?
புனித நீர் தாங்கும் குடம், கமண்டலம், குடம், கும்பம், செம்பாட்டம், பூங்குடம், பூம்பந்தல், கரகக்கூத்து

25. "கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை" என கரகம் பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
தொல்காப்பியம்

26. கரகம் பற்றிய குறிப்புக்கள் காணப்படும் நூல்கள் 3 தருக.
கலித்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரம்

27. "உறித்தாழ்ந்த கரகம்" எனக்குறிப்பிடப்படும் இலக்கியம் எது?
கலித்தொகை

28. கரகம் எடுப்பதன் நோக்கம் 2 தருக.
   1. நாட்டின் வரட்சி நீங்குதல்
   2. நோய் ஏற்படும் போது அதில் நின்று மீளும்பொருட்டு அம்மன் மீதும், மாரி அம்மன் மீதும் கரகம் எடுப்பர்

29. கரகாட்டத்தின் வகைகள் எவை?
   1. தெய்வ வழிபாடுடன் தொடர்புடையது
உதாரணம் - சக்தி கரகம், அம்மன் கரகம்
   2. தொழில் முறையுடன் தொடர்புடையது
உதாரணம் - ஆட்டக்கரகம்

30. கரகத்தின் அமைப்பு எத்தகையது?
   - சக்தி கரகம் அமைப்பதற்கு செம்பு, தண்ணீர், வேப்பிலை, நூல் அரளிப்பூ, தென்னம்பூ முதலானவையும் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப்பறவை உருவங்களும் தேவையாகும்.
   - சக்தி கரகம் அமைப்பதற்கு தேர்ந்தெடுத்த செம்பில் தண்ணீர் எடுத்து கும்பத்தின் நடுவே தேங்காய் வைத்து, அதனைச் சுற்றி வேப்பிலை வைப்பர்
   - அத்துடன் அரளிப்பூ, தென்னம்பூ போன்றவற்றால் அலங்கரித்து செம்புப்பகுதியில் பரிவட்டம் கட்டுவர். கரகக் குடும்பத்தின் மேல் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப்பறவை உருவம் இருக்கும்.

31. கரகாட்டக் காரரின் ஒப்பனை எத்தகையது?
   - ஆட்டக்காரர்களில் பெண்களும், ஆண்களும் ஒப்பனைப் பொருட்களை பயன்படுத்துவர்.

உதாரணம் - முகப்பவுடர், உதட்டுச்சாயம், சந்தனம்

- பெண்கள் தலைமுடியை இறுக்க கட்டிக்கொண்டு இரட்டைப் பின்னல் அல்லது கொண்டை போடுவர்
- பூக்களைச் சூடி இருப்பர்.
- முழங்கால் வரை பாவாடை, மார்புக்கச்சை, இடுப்புப்பட்டி அணிந்திருப்பர்.
- கால்களில் சதங்கை கட்டியிருப்பர்
- ஆண்கள் தாறுபாச்சி கட்டி, உடம்பில் சந்தனம் பூசி, கால்களில் சதங்கை கட்டி ஆடுவர்
- கையில் வேப்பிலை, இடுப்பில் மஞ்சள் பட்டு. விபூதி, உருத்திராக்கம் அணிவர்.
- காவி நிற சேலை அணிவர்

32. கரகாட்டத்தின் போது இசைக்கப்படும் வாத்தியக்கரவிகள் எவை?
தவில்
நாதஸ்வரம்
குழல்
தாளம்
பறை
உடுக்கு

33. தமிழகத்தில் கரகம் ஆடப்படும் முக்கிய இடங்கள் எவை?
தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியா குமரி, இராமநாதபுரம்

**(ஈ) கோலாட்டம்**

34. இலங்கையில் கரகம் ஆடப்படும் முக்கிய இடங்கள் எவை?
மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைதீவு, யாழ்ப்பாணம், மன்னார், மலையகம்

35. கோலாட்டம் என்பதன் பொருள் யாது?
நிறங்கள் தீட்டப்பட்ட கோல்களைக் கொண்டு, தாளத்திற்கும் இசைக்கும் ஏற்றவாறு தட்டி ஆடுவது கோலாட்டம் எனப்படும்

36. கோலாட்டத்தின் வகைகள் எவை?
1. கோலாட்டம்
2. பின்னல் கோலாட்டம்
3. கோலாட்டக் கும்மி

37. கோலாட்டம் ஆடும் முறையைத் தருக.
- கோலாட்டம் ஒற்றைக் கம்பு கொண்டு அடிப்பது, இரட்டை கம்பு கொண்டு அடிப்பதென இருவகையாக ஆடப்படும்.
- ஒரு கம்பில் கயிற்றைக் கட்டிக்கொண்டு ஒவ்வொருவரும் குறிப்பிட்ட முறையில் ஆடி, கயிற்றினைப் பின்னலாகப் பின்னி, பின் அதனை பிரித்தெடுக்கும் ஆட்ட முறையும் உள்ளது.

38. ஆலய வழிபாட்டுடன் கோலாட்டம் கொண்டுள்ள சிறப்புத் தொடர்பு 2 தருக.
1. ஆலயங்களில் திருவாதிரை நாளிலும் கண்ணன் பிறந்த நாளிலும் கோலாட்டம் ஆடப்படுகிறது
2. தங்களுக்கு விருப்பமான தெய்வங்களுக்கு கோலாட்டம் நிகழ்த்தும் நாட்களாக ஓணம் பண்டிகையிலும், கார்த்திகை விளக்கீடும் காணப்படுகின்றது.

39. கோலாட்டத்தின் சமய, சமூக முக்கியத்துவம் எத்தகையது

- ஆரம்பத்தில் கோயிலை மையப்படுத்திய கோலட்டக் கலையானது இன்று பொது அரங்குகளிலும், பொது நிகழ்வுகளிலும் நிகழ்த்தப்படுகின்றது
- கோலாட்டத்தின் போது அழகு, பக்தி, இரசனை என்பன வெளிப்படுத்தப்படுகின்றது.
- ஆரம்பத்தில் திருமணம் ஆகாத அணிகளால் மட்டும் நிகழ்த்தப்பட்ட இந்த கோலாட்டம் தற்போது சிறுமியராலும், இளம் பெண்களாலும் ஆடப்படுகின்றது.

40. கோலாட்டக் கலையோடு தொடர்புடைய இலக்கியம் எது?
சிவ புராணம்

41. சிவ புராணத்தில் காணப்படும் கோலாட்டத்துடன் தொடர்புடைய புராணக் கதை கூறுக.
தேவர்களும் அசுரர்களும் போர் புரிந்த போது தேவர்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக பார்வதி 9 நாள் தவம் புரிந்தமையால் அவளின் முகம் அழகிழந்து கருமை நிறமானது. சிவனால் கூட அந்த கருமை நிறத்தை மாற்ற முடியவில்லை. பார்வதியின் தோழியர்கள் வருத்தமுற்று நந்திதேவருடைய அருளை வேண்டி அவர் முன் கோலாட்டம் ஆடினர்.

**மேலதிக வினாக்கள்**

42. வசந்தன் கூத்தில் வரும் வசந்தன் என்பதன் பொருள் யாது?
- வசந்த காலம்
- நிறைந்த இன்பத்தைத் தருவது

43. வசந்தன் கூத்தின் வகைகளைக் கூறுக.
- பிள்ளையார் வசந்தன்
- அம்மன் வசந்தன்
- அனுமார் வசந்தன்

44. வசந்தன் கூத்து ஆடப்படும் முறையைக் குறிப்பிடுக.
- கட்டியம் கூறுதல் - காலில் சலங்கை கட்டி கூத்துக்களுக்குரிய உடை அணிந்து திருப்பாடி ஆடி வருவர்
- தரையில் உயரமாகவும் வட்டமாகவும் அமைக்கப்பட்ட மேடையில் ஆடுவோர் வட்டமாக நின்று ஆடுவர்
- வட்டமாகக் கயிறுகட்டி அதற்குள் மேடையமைத்து ஆடப்படும்

45. வசந்தன் கூத்தின் சமய சமூக முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
- முருகன், கண்ணகியம்மன், முத்துமாரியம்மன் விழாக்களின் போது பக்திபூர்வமாக ஆடப்படும்
- கண்ணகி வழிபாட்டில் கொம்பு முறி விளையாட்டின் போது ஆடப்படும்
- பக்தி, பரவசம் ஏற்படும் - இறைசிந்தனை, ஆன்மீக வாழ்வு
- புராதண இதிகாச, சமயம் சார் கதைகள் பொருள் மரபாக
- பக்தி, போதனை, சமூக ஒருமைப்பாடு, சமய அறிவு பேணப்படும்
- தனக்காகவும் பிறருக்காகவும் இறைவனை வழிபடும் முகமாக ஆடப்படுதல்

## 13 - இலங்கையில் இந்து சமயம்

இலங்கையில் பொலநறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய கலாசார வளர்ச்சிகளை பரிசீலனை செய்க.

- நாட்டில் எல்லாப் பகுதியிலும் இந்து மரபுசார் கோயில் வழிபாடு, சமயச் சடங்குகள் வளர்ச்சி
- இந்திய தமிழக அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் இங்கும் செல்வாக்கு
- கி.பி 1017 இல் இராஜேந்திர சோழன் நாடு முழுவதையும் ஆண்டமை
- இலங்கை மும்முடி சோழ மண்டலம் எனப்பட்டது
- பொலனறுவை – ஜனநாத மங்களம்
- சோழ அரசர்களின் பிரதிநிதி – சோழ இலங்கேஸ்வரன்
- மகாவம்சம், சூளவம்சம், ராஜவலிய, பூஜவலிய போன்ற இலக்கியங்கள் மூலமும் கட்டப்பட்ட, சிற்ப, கல்வெட்டுக்கள் மூலம், புதைப்பொருள் சின்னங்கள் மூலமும் இக்கால இந்து சமய வளர்ச்சியை அறிய முடியும்
- தமிழகத்துடன் கொண்ட தொடர்பால் இந்து பண்பாடும், சைவநெறியும் வளர்ச்சி
- பொலநறுவையில் 16 இந்து கோயில்கள் கண்டுபிடிப்பு

(10 – சிவன் கோயில், 5 – விஷ்ணு கோயில், 01 – காளி கோயில்)

- சிவன் கோயில்களுள் 2ம் சிவதேவாலயம் (இராஜேந்திர சோழன்) - வானவன் மாதேஸ்வரன் எனப்படும்.
- கந்தளாய், மண்டலகிரி, பதவியா, மாதோட்டம், திருகோணமலை போன்ற இடங்களில் இந்து சமய மரபு வளர்ச்சி
- பௌத்த அரசர்களும், வணிகக் குழுக்களும், படை தளபதிகளும், கோயில்களை அமைத்ததுடன், பூசைகளையும் ஏனைய காரியங்களும் முறையாக நடக்க தானம் வழங்கினர்.
- திருகோணேச்சரம், விக்கரம சோழேஷ்வரம், உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஷ்வரம் - வளர்ச்சி
- திருக்கேதீஸ்வரம் - இராஜராஜேஸ்வரன் எனப்பட்டது
- சிவன் கோயில் - கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வீதிகள், வரிவாரக் கோயில்கள்
- சதுர்வேதி மங்கலங்கள் உருவாக்கம் - இதற்கு சான்றாக மெதிரிகிரிய (மண்டலகிரி) கல்வெட்டு 'கந்தளாயில் பிரமதேயம், ஜயம் கொண்ட சாலமேக சதுர்வேதி மங்கலம் பற்றிக் கூறும்.
- தாழிர்குமாரன் - திருக்கேதீச்சரத்தை புனரமைத்து அதன் தேவைகளுக்கென மாதோட்ட நகரத்து நிலத்தையும் தானமாக வழங்கியமை
- நிலாவெளி சாசனம் - திருகோணேச்சரத்திற்கு அதிக நிலம் தேவதானமாக விடப்பட்டமையை கூறும்
- தட்சிண கைலாய புராணம் - "பா தாங்கும் கோயிலும், பொன் மண்டபமும்" எனும் பாடலில் திருகோணேச்சரத்தில் அவனது பணி பற்றி கூறுகின்றது.
- ஆலயங்கள் அமைப்பதுடன், பூசைகளும் நடைபெற அரசர்கள் தானங்கள் வழங்கியமை.
- தமிழகத்தில் போல இங்கும் - ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திர பாராயணம்
- நானாதேசிகர், வீரவளஞ்சியர் முதலிய வணிக கணங்கள் செல்வாக்கு
- ஐந்நூற்றுவர் எனும் வணிகக் கணத்தின் பங்கு – ஆலயம் அமைத்தல், திருவுருங்களை நிறுவுதல், மண்டபங்களை அமைத்தல்

உதாரணம் ஐந்நூற்றுவர் மடம், ஐந்நூற்றுவர் மண்டபம்

- பதவியா கல்வெட்டு – காளி கணத்தவர் அமைத்த காளி கோயில்
- வேதாகம கிரியை நிகழ்த்தும் பிராமணர் - முக்கிய இடம்
- மிகிந்தலை கல்வெட்டு – "ஜயங்கொண்ட சானமேக சதுர்வேதி மங்கலம்"

- கந்தளாயில் அமைத்த பிராமணர் குடியிருப்பு – ராஜராஜன் சதுர்வேதி மங்கலம்
- அரசர்கள் - நாளாந்த வாழ்க்கை, சடங்குகள், கல்வி, கலை - இந்து கலாசார செல்வாக்கு தமிழக திராவிட கட்டடக்கலை செல்வாக்கு இங்கும் பரவியமை
- சூளவம்சம் - விக்கிரமபாகு புரோகிதர்கள் மூலம் வேள்விகளையும், இந்து சமயக் கிரியைகளை நடத்தினான்
- மகாவம்சம் - "மானாபரணனின் அரண்மையில் வேதங்களில் வல்ல புரோகிதர்கள் ஓமம் வளர்த்து யாகம் செய்தார்கள்"
- பராக்கிரமபாகு பிறந்த நாள் தொட்டு, கைதீகச் சடங்குகளை முறைப்படி பின்பற்றினான்
- 1907, 1908, 1960 – கடவுளர் படிமம், நாயன்மார் படிவம்
- நடராஜர், சோமாமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி, அப்பர், சுந்தரர், சம்பந்தர், காரைக்கால் அம்மையார்

01. "இலங்கையில் இராஜதானிகள் ஆட்சி காலத்தில் இந்து மதம் சிறப்புற்று வளர்ச்சியடைந்தது" பின்வரும் விடயங்களை விளக்குக.

(அ) இராஜதானிகளும் வரலாற்று மூலங்களும்
(ஆ) பௌத்த மரபுகளும் இந்து மரபுகளும்
(இ) வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்து சமய வளர்ச்சி
(ஈ) கிராமிய வழிபாடு
(உ) ஆரிய சக்கரவர்த்திகள் காலம்

(அ) இலங்கை மேல் மாகாணம் - கோட்டை, மத்திய மலைநாடு – கண்டி, வடபகுதி – யாழ்ப்பாண இராச்சியம்

- கி.பி 13 – கி.பி 16
- எல்லா பகுதியிலும் இந்து மதம் வளர்ச்சி – பல்வேறு மூலாதாரங்கள் மூலம் அறியலாம்
- சிங்கள – தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுக்கள், இலக்கியங்கள்
- குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடுதூது - இலக்கியங்கள்
- திருக்கரசைப் புராணம், தட்சண கைலாய புராணம், கோணேசர் கல்வெட்டு, கைலாசமலை – தமிழ் மொழி இலக்கியங்கள்
- பிற நாட்டவர்களின் குறிப்புகள்

(ஆ) பௌத்த சமய மரபுகளும் இந்து சமயமும்

- மூவேறு மன்னர்கள் ஆட்சி செய்தாலும் - இந்து சமய மரபு வளர்ச்சி
- யாழ்ப்பாணம் - சிங்கை ஆரியன், பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலி குமாரன், விஜய காலிங்கன்
- 1ஆம், 4ஆம், 6ஆம், 9ஆம் பராக்கிரமபாகு, மாயதுன்னை, 7ஆம் விஜயபாகு, ராஜ சிங்கன் - இந்து சமயம் வளர்ச்சி, நன்தொடைகள்
- சிங்கள மன்னர்களும் இந்து மதத்திற்கு ஆதரவு
- 6 ஆம் பராக்கிரமபாகு சிவன் கோயில்களுக்கும், முருகன் ஆலயத்திற்கும் - தானம் வழங்கியமை
- தேநுவரை விஷ்ணு ஆலயம் பற்றிய விடயங்களை – 2ஆம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு, குவெறோய் போன்ற வெளிநாட்டு பயணிகளின் குறிப்புகள்
- பூவை விடு தூது, அன்னம் விடு தூது – கோட்டையில் முருகன் கோயில் இருந்தமை
- சிங்கள மொழிக்கல்வெட்டு ஒன்று – தெய்வேந்திர முனையில் நகரீசர் நாகர், கணேசர் முதலான தெய்வங்களுக்கு அமைத்த கோயில்
- 6ஆம் 9ஆம் பராக்கிரமபாகு – முன்னேஸ்வர பணி

(இ) வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்து சமயம்

- யாழ்ப்பாண இராச்சியத்தில் - இந்து சமயம் வளர்ச்சி
- கைலாயமாலை – புவனேகபாகு நல்லூர் கந்தசாமி கோயிலை அமைத்தமை
- யாழ்ப்பாண வைபவமாலை – விஜயகாலிங்கனின் சமயப்பணிகள்
- உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம், நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் ஆலயம், அரியாலை சித்தி விநாயகர் ஆலயம் - புகழ்பெற்று விளங்கியமை
- சிகழக்கிலங்கையில் - திருக்கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம், புகழ்பெற்று விளங்கியமை
- திருக்கோணாசல புராணம் தோற்றம்

(ஈ) கிராமிய வழிபாடு

- கண்ணகி அம்மன், மாரியம்மன், நாச்சிமார், பெரிய தம்பிரான் முதலிய கிராமிய தெய்வங்கள்
- இந்நம்பிக்கைகளின் தொடர்ச்சியை இன்றும் மட்டக்களப்பு, வன்னி திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றது.

(உ) ஆரிய சக்கரவர்த்திகள் காலம் (கி.பி 1216 – 1621)

- சிவ சின்னமான நந்தியை – குலச்சின்னமாகக் கொண்டனர்
- இராமேஸ்வரத்து சேது பதிகளோடு திருமண உறவு காரணமாக தம்மை சேது காவலர் என அழைத்துக் கொண்டமை
- சேது – நாணயங்களிலும், நூல்களிலும் பொறிக்கப்பட்டமை
- நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் கைலாசநாதர் கோயில், சட்டநாதர் கோயில் இணுவில் கருணாகரப்பிள்ளையார் கோயில், அரசகேசரி பிள்ளையார் கோயில், அரியாலை சித்தி விநாயகர் கோயில்
- வேதம், புராணம், ஆகமம், தத்துவ தரிசனம் ஆகியவற்றில் புலமை பெற்ற அரசர்களின் ஆதரவின் கீழ் நல்லூர் பிராமணர்கள் வாழ்ந்தமை
- தட்சிணகைலாச புராணம், வியாக்கிரதபாத புராணம், கதிரமலைப் பள்ளு, கண்ணகி வழக்குரைக் கதை, கைலாச மாலை, கோணேசர் கல்வெட்டு, சரசோதி மாலை, இரகுவம்வம்

## 14 - இலங்கையில் இந்து கோயில்கள்

01. திருக்கோணேச்சரம் அமைந்தள்ள இடத்தை தருக.
இலங்கையின் கிழக்குக்கடற்கரை ஓரமாக உள்ள திருக்கோணமலையில் கடலிலுள்ளே நீண்ட உயர்ந்து நிற்கும் குன்றில்

02. திருக்கோணேச்சரத்தின் இறைவன் இறைவி யார்?
திருக்கோண நாதர்
மாதுமையாள்

03. திருக்கோணேச்சரத்தின் தீர்த்தம் எது?
பாவ நாசம்

04. திருக்கோணேச்சரத்தின் தலவிருட்சம் எது?
ஆல்

05. திருக்கோணேச்சர வரலாறு தொடர்பான நூல்கள் 5 தருக.
(1) திருக்கோணேசர் தல புராணம்
(2) இதிகாச புராணங்கள்
(3) திருக்கோணமலை அந்தாதி
(4) பெரிய புராணம்
(5) தட்சிண கைலாச புராணம்
(6) தட்சிண கைலாச மான்மியம்
(7) மகாவம்சம்

06. திருக்கோணேச்சர வரலாற்று சிறப்புகள் 3 தருக.
(1) நாயன்மார்களால் பதிகம் பாடப்பட்ட சிறப்புக்குரியது
(2) பல்லவ சோழ மன்னர் கால வரலாற்றுச் சிறப்புப் பெற்றது
(3) இவ்வாலயம் கி.மு 1300க்கு முற்பட்டது என ஈழத்து சிவாலயம் கூறுகின்றது

07. திருக்கேதீச்சரம் அமைந்துள்ள இடம் எது?
மன்னாருக்கு சமீபத்தில் மாந்தோட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. (மஹாது வட்டாபுரம்)

08. திருக்கேதீச்சரத்தின் இறைவன் இறைவி யார்?
திருக்கேதீஸ்வர நாதர்
கௌரி அம்பாள்

09. திருக்கேதீச்சரத்தின் தீர்த்தம் எது?
பாலாவி

10. திருக்கேதீச்சரத்தின் தலவிருட்சம் எது?
வன்னி

11. திருக்கேதீச்சரம் தொடர்பான வரலாற்று நூல்கள் 5 தருக
(1) மகாவம்சம்
(2) தாடாவம்சம்
(3) தேவார பதிகம்
(4) பெரிய புராணம்
(5) தட்சிணகைலாய மான்மியம்

12. திருக்கேதீச்சரம் மீது பதிகம் பாடிய நாயனார் யார்?
சம்பந்தர்
சுந்தரமூர்த்தி நாயனார்

13. மகாதேவன் கோயில் என அழைக்கப்பட்ட ஆலயம் எது?
திருக்கேதீச்சரம்

14. திருக்கேதீச்சரத்தின் சமூக மேம்பாடுகள் எத்தகையது?
(1) மடங்கள் அமைத்து உண்டி உறையுள் வழங்குதல்
(2) சமய சொற்பொழிவுகள் இடம்பெறல்
(3) அன்னதானம் வழங்கல்
(4) திருமுறை ஓதுதல்

15. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் எங்கு அமைந்துள்ளது?
மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்மேற்குப் பகுதியில் கொக்கட்டிச் சோலை என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

16. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் இறைவன், இறைவி, தீர்த்தம், தலவிருட்சம் என்பவற்றை தருக.

இறைவன் - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்

(மூல விக்கரகம் வெளியே தெரியாதபடியால் மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் தாபிக்கப்பட்டுள்ளது.)

இறைவி - பார்வதி அம்மையார்

தீர்த்தம் - கோயிற் திருக்கேணி

தலவிருட்சம் - கொக்கட்டி மரம்

17. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் தொடர்பான நூல்கள் எவை?

(1) மட்டக்களப்பு மான்மியம்
(2) கல்வெட்டு நூற்பிரதி
(3) மரபுவழிப் பாடல்கள்
(4) புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை பாடிய இரு நூல்கள்

18. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்திற்கு பணி செய்த மன்னன் யார்?

குளக்கோட்டன் கோயில் வளர்ச்சிக்காக திருப்பணி ஆற்றியதுடன் பூசைகளுக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டான். குளக்கோட்டன் பற்றிய கல்வெட்டு ஒன்று மேன்மை தான் தோற்றி லிங்கம் வெற்றி புனை….. என்று குறிப்பிடுகின்றது.

19. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் விழாக்கள் எத்தகையது?

(1) நித்திய கிரியை
(2) நைமித்திய கிரியை
(3) மகோற்சவம்

20. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் பூவை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?

சங்கமர்

21. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் சமூக மேம்பாடு எத்தகையது?

(1) திருவிழாக் காலங்களில் மட்டுமின்றி மடங்களில் அன்னதானம் நடைபெறுகின்றது.
(2) பாடசாலை மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடைபெறும்.
(3) செயலமர்வுகள், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடாத்துதல்.

22. கல் நந்தி புல் உண்ட சிறப்பைக் கொண்ட ஆலயம் எது?

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

23. முன்னேஸ்வரம் எங்கு அமைந்துள்ளது?

வடமேற்கு மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள சிலாபம் எனும் இடத்தில்

24. முன்னேஸ்வரத்தின் இறைவன், இறைவி, தீர்த்தம், தலவிருட்சம் என்பவற்றை தருக.

இறைவன் - முன்னைநாதர்

இறைவி - வடிவாம்பிகை

தீர்த்தம் - மாயன் ஆறு (தெதுறு ஓயா)

தல விருட்சம் - அரச மரம்

25. முன்னேஸ்வர சிறப்பை கூறும் நூல்கள் 4 தருக.

(1) தட்சணகைலாய மஹாத்மியம்
(2) முன்னேஸ்வர மான்மியம்

(3) ஸ்ரீ முன்னை நாத சுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்
(4) முன்னேஸ்வரந்தாதி

26. முன்னேஸ்வர தலத்திற்கு பணி செய்த மன்னர்கள் யாவர்?
குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்தை மீள அமைத்துத் திருப்பணி செய்தான்.
6ம் பராக்கிரம பாகு, 9ஆம் பராக்கிரமபாகு நாயக்க மன்னர்கள்
கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கள்

27. முன்னேஸவரத்தின் பூசைகள் எத்தகையவை?
(1) நித்திய பூசை
(2) நைமித்திய பூசை
(3) பௌர்ணமி தினத்தில் ஸ்ரீ சக்கர பூசை
(4) மகோற்சவம்
(5) பக்தோற்சவம்

28. முன்னேஸவரத்தின் சமூக மேம்பாடு எத்தகையது?
(1) மடங்கள் அமைத்து அன்னதானம் வழங்குதல்
(2) வேதாகமப் பாடசாலை, அறநெறி பாடசாலை அமைத்து சமயம் வளர்த்தல்
(3) இனமத பேதமின்றி வழிபாடு நடைபெறுதல்.

29. நகுலேஸ்வரம் எங்கு அமைந்துள்ளது?
இலங்கையின் வடக்கே கீரிமலையில் அமைந்துள்ளது

30. நகுலேஸ்வரம் புராதன காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
திருத்தம்பலேஸ்வரம்
31. நகுலேஸ்வரத்தின் இறைவன், இறைவி, தீர்த்தம் யாது?
இறைவன் - நகுலேஸ்வர பெருமான்
இறைவி - நகுலாம்பிகை
தீர்த்தம் - கீரிமலை

32. நகுலேஸவரத்தின் சிறப்பு பற்றிய நூல்கள் எவை?
(1) மகாபாரதம்
(2) மச்சய புராணம்
(3) தட்சணகைலாய மான்மியம்
(4) யாழ்ப்பாண வைபவ மாலை
(5) நகுலாச புராணம்
(6) நகுலேஸ்வர மான்மியம்
(7) நகுலேஸ்வர சதகம்
(8) திருப்புகழ்

33. நகுலேஸ்வரத்தின் விழாக்கள் எத்தகையவை?
நித்திய கிரியை, நைமித்திய கிரியை,
(1) ஆடி அமாவாசை அன்று பிதிர்க்கடன் தீர்த்தல் சிறப்பாக நடைபெறும்
(2) மகோற்சவம்

34. நகுலேஸ்வரத்தின் சமூக மேம்பாடு எத்தகையது?
(1) மடங்கள் அமைத்து புராண படனம், திருமுறை ஓதுதல் இடம்பெறல்
(2) அறிஞர்களுக்கு கௌரவம் அளித்தல்
(3) அடியவர் வழிபாடு

35. சோழ இளவரசியாகிய மாருதப்புரவீக வல்லியின் குன்மவலி நீங்கிய தலம் எது?
நகுலேஸ்வரம்

36. நகுலகிரி என எந்த இடம் அழைக்கப்பட்டது?
கீரிமலை

37. "கல் விகாரை நீங்கலாகவுள்ள கட்டடங்களில், முதாலம் சிவாலயமே பொலனறுவையைப் பார்க்க செல்வோரின் கூடுதலான கவனத்தை பெற்றது…… தளதா மாளிகை என்று பிழையாக வர்ணிக்கப்பட்டது" என கூறியவர் யார்?
தொல்பொருட் திணைக்கள ஆணையாளர் - எச்.சி.பி.பெல்

38. இரண்டாம் சிவாலயத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?
வானவன் மாதேவீஸ்வரம்

39. பொன்னம்பல வாணேச்சரம் எங்கு அமைந்துள்ளது?
கொழும்பு மாநகரில் கொச்சிக்கடைப் பிரதேசத்தில்

40. பொன்னம்பல வாணேச்சரத்தை கட்டியவர் யார்? எந்த ஆண்டு?
1856 – அருணாசலம் பொன்னம்பல முதலியாரால் அமைக்கப்பட்ட கருங்கற் கோயில்

41. பொன்னம்பல வாணேச்சரத்தின் இறைவன் யார்?
பொன்னம்பலவாணேச்சர்
42. பொன்னம்பல வாணேச்சரத்தின் இறைவி யார்?
சிவகாம சௌந்தரி

43. பொன்னம்பல வாணேச்சரத்தின் பூசைகள் யாவை?
(1) நித்திய பூசை
(2) நைமித்திய பூசை
(3) மகோற்சவம்
(4) மகா மண்டபத்தில் நித்தியாக்கினி வளர்த்தல் ஸ்ரீ சக்கர பூசை

44. பொன்னம்பல வாணேச்சரத்தின் சமூக மேம்பாடு எத்தகையது?
(1) இன மத பேதமின்றி அடியவர்கள் கலந்து கொள்வர்.
(2) ஆறநெறிப் பாடசாலை அமைத்து மாணவர்களுக்கு உதவுதல்

## 15 - இலங்கையில் இந்து சமயத்தின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய சமயப் பெரியார்கள்

01. இந்து போர்ட் சு.இராசரத்தினம் பிறந்த ஆண்டு பிறந்த இடம் என்பவற்றை தருக.
1884 ஆடி மாதம் 4ம் திகதி – யாழ்ப்பாணம்

02. இந்து போட் சு.இராசரத்தினம் கல்வி கற்ற இடம் எது?
ஆரம்ப கல்வி - யாழ் மத்திய கல்லூரி
உயர் கல்வி - கல்கத்தா பல்கலைக்கழகம் - கொழும்பு சட்டக் கல்லூரி

03. இந்து போட் சு.இராசரத்தினம் இறையடி சேர்ந்த தினம் எது?
1970.03.12

04. இந்து போட் சு.இராசரத்தினத்தின் சமயப் பணிகள் 5 தருக.

(1) சைவ மரபுகளை பேணியமை
(2) விபூதி தரித்தல், சைவ சமய விழாகட்கள் கொண்டாடுதல்
(3) சைவக் கல்வி மரபை பாதுகாக்க சைவ வித்தியா விருத்தி சங்கம் (1923) ஆரம்பிக்கப்பட்டது.
(4) திருமுறை ஓத வேண்டும், பண்ணோடு பாடவேண்டும் என்பதற்காக பாடசாலைகளில் பண்ணிசை வகுப்புகள் நடத்தப்பட்டன.
(5) சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினூடாக பல பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை.

(உதாரணம்) சைவ சமய பரீட்சைகள் நடத்தியமை
சைவ ஆசிரியர்களை பயிற்றுவித்தமை
சைவ பண்பாட்டினை பேணி பாதுகாத்தமை

05. இந்து போர் சு.இராசரத்தினத்தின் கல்விப் பணிகள் 5 தருக.

(1) பாடசாலை உருவாக்கியமை
(உதாரணம்) யாழ்ப்பாணம், பதுளை, நாவலப்பிட்டி, புத்தளம்
(2) அநாதை விடுதிகள் அமைத்தமை
(உதாரணம்) திருநெல்வேலி
(3) சைவ ஆசிரியர் கலாசாலை உருவாக்கியமை
(உதாரணம்) யாழ்ப்பாணம், திருநெல்வேலி (1928)
(4) 187 பாடசாலைகள் அரசாங்க நன்கொடைகளை பெற வைத்தமை
(5) சமூகத்தில் பின்தங்கிய மாணவரும் கல்வி கற்க வாய்ப்பு வழங்கியமை

06. பேராசிரியர் ஆ.சதாசிவத்தின் பிறப்பிடம், வாழிடம் என்பவற்றை தருக.

பிறப்பிடம் - அராலி தெற்கு
வாழ்விடம் - வலிகாமம் வடக்கு

07. இவருடைய புலமைக்கு சான்றுகள் 5 தருக.

(1) க.பொ.த உயர்தரம் 1947 சித்தி
(2) 1947 – மதுரை தமிழ்ப்பண்டிதர் பரீட்சையில் சித்தி
(3) 1948 – 1952 – பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்று சிறப்பு கலைமாணி முற்பிரிவில் சித்தி
(4) 1954 - பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமுதல்வர் (M.A) பட்டம்
(5) 1954 – 1956 ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றார்.

08. பேராசிரியர் ஆ.சதாசிவத்தின் தொழில் யாது?

(1) 1956 – 1965 வரை பேராதனையில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றினார்.
(2) 1965 – 1980 கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக, தலைவராக, பேராசிரியராக கடமையாற்றினார்.
(3) 1981 – 1988 அமரராகும் வரை பேராதனையில் பேராசிரியராக கடமையாற்றினார்.

09. இந்து நாகரீக பாடத்துறை இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் ஆரம்பித்த பெருமை யாரை சாரும்?

பேராசிரியர் ஆ.சதாசிவம்

10. பேராசிரியர் ஆ.சதாசிவம் வெளியிட்ட 02 நூல்களைத் தருக.

கருத்துரைக்கோவை - 1959
ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை – 1963

11. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எங்கு, எவ்வாண்டு பிறந்தார்?

யாழ்ப்பாணம் நல்லூர், 1882 டிசம்பர் 18

12. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெற்றோர் யாவர்?
கந்த பிள்ளை, சிவகாமி

13. ஆறுமுக நாவலரின் பிள்ளைத்திருநாமம் எது?
ஆறுமுகம்

14. நாவலர் எங்கு அவருடைய கல்வியைக் கற்றார்?
   (1) குருகுல கல்வி முறை – சுப்பிரமணிய பாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார்
   (2) யாழ் வெஸ்லியன் மிஷன் கல்லூரி

15. நாவலர் தமது ஆசிரியர் தொழிலை நிறுத்தியமைக்கு காரணம் யாது?
“சைவத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்க்க வேண்டும்” என்ற பேராசையாகும்.

16. நாவலர் இறையடி சேர்ந்த தினம் எது?
1879 டிசம்பர் 05 மக நட்சத்திரம்

17. நாவலருக்கு இலங்கை அரசாங்கம் நினைவு முத்திரை வெளியிட்ட ஆண்டு எது?
1971.10.29

01. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்தை வளம்பெறச் செய்வதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.
(அ) சமயப்பணி
(ஆ) கல்விப்பணி
(இ) பதிப்பாசிரியர் பணி
(ஈ) சமூகப்பணி

**(அ) சமயப்பணி**

- ஈழத்தில் உதித்த சைவப் பெரியார்களுள் ஆறுமுக நாவலரும் ஒருவர் 19ஆம் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்கு பரவிய காலத்தில் ஆறுமுக நாவலர் நல்லூரில் 1822 டிசம்பர் 18ஆம் திகதி பிறந்தார். தமிழ், ஆங்கலம்ஈ சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். சைவ சமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற இலட்சியத்தில் செயற்பட்ட பெரியாராவார்.
- சைவப்பிரசங்கங்களை ஆற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் வண்ணார் பண்ணை வைதீஸ்வரர் ஆலயம்
- புராண படனம் நிகழ்த்தியமை (உதாரணம்) நல்லூர் கந்தசுவாமி கோயில்
- ஆலயங்களை புனருத்தாரணம் செய்தமை

(உதாரணம்) திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம்

- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதியமை

(உதாரணம்) சைவ வினாவிடை – முதற் புத்தகம், 2ம் புத்தகம்
இலக்கண நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்தல்

- பண்ணிசையை வளர்த்தமை – பஞ்ச புராணம் ஓதுதல்

நல்லூர் மகோற்வத்திற்கு திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை

- பிரமச்சரிய வாழ்வினை சீராக வாழ்ந்து காட்டியமை
- புறச்சமய கண்டனம், அகச்சமய கண்டனம் செய்தமை

- கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை

(உதாரணம்) சைவ தூஷண பரிகாரம், நல்லூர் கந்தசுவாமி கோயில்

- தமிழகத்தில் அவர் மேற்கொண்ட பணிகளை பாராட்டிய வகையில் "நாவலர்" என்ற சிறப்புப்பட்டத்தை பெற்றவர்.

**(ஆ) கல்விப்பணி**

- சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார்.

(உதாரணம்) 1848 வண்ணார்பண்ணையிலும்
1864 சிதம்பரத்திலும்
1972 கோப்பாயிலும் வித்தியாசாலைகளை அமைத்தமை
1971 புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலை அமைத்தமை

- வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தமை
- பெண்களுக்கான கல்வி (3ஆம் பால பாடத்தில் விளக்கியுள்ளார்)

**(இ) பதிப்பாசிரியர் பணி**

- வண்ணார் பண்ணையிலும், தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும் வித்தியாதுபால யந்திரசாலைகளை நிறுவினார்.
- அகராதிகள் பதிப்பித்தல் (உதாரணம்) சூடாமணி நிகண்டு
- இலக்கண நூல்கள் - இலக்கண விளக்க சூறாவளி
- தருக்க நூல்கள் - தருக்க சங்கிரகம்
- இலக்கிய நூல்கள் - மகாபாரதம்
- அறிவியல் சார் நூல்கள் - இலங்கை பூமி சாத்திரம்
- முதன் முதல் ஏட்டுச்சுவடிகளிலிருந்து நூல்களை அச்சிவாகனமேற்றினார்

(உதாரணம்) தொல்காப்பிய சூத்திர விருத்தி

- தொகுத்துப் பதிப்பித்தமை – அருட்பா
- சில நூல்கள், இலக்கண குறிப்புகள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சிப் பதிப்புக்கள்
- சிலவற்றுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

(உதாரணம்) ஔவையார் அருளிச் செய்த நல்வழி, அத்திசூடி, வேந்தன் கொன்றை

- சில செய்யுள் நூல்களை வசன நடையில் எழுதிப்பதிப்பித்தார்.

(உதாரணம்) திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், கந்த புராண வசனம்

- அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதி பதிப்பித்தார்

(உதாரணம்) இலக்கண சுருக்கம்

- "நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு" என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.
- இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத்துறை வளர்ச்சியுற வித்திட்டமை
- இலங்கை நேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை சைவ உதய பானு பத்திரிகை வெளியிட ஆர்வம் காட்டியமை.

**(ஈ) சமூகப்பணி**

- 1876 / 77 – கடும் வரட்சி ஏற்பட்ட பஞ்சவேளையில் கஞ்சித்தொட்டி தருமம் மேற்கொண்டமை
- யுாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பேதி நோய் பரவிய போது மக்களோடு இணைந்து உரிய பரிகாரங்களை மேற்கொண்டமை.
- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்க பாடுபட்டவர்.
- யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கியமை

- பிறரை உரிய வேளையில் கௌரவித்தமை
- சுதேச எழுச்சிக்காக பாடுபட்ட தேசிய வீரர்
- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார்.
- மறுமலர்ச்சிக்கு காரணமாக விளங்கினார்.
- சைவத் தமிழ் மரபில் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கினார்.

02. சுவாமி விபுலானந்தரின் சமயப்பணிகளையும், கல்விப்பணிகளையும், கலைப்பணிகளையும், சமூகப்பணிகளையும் ஆராய்க.

**சமயப்பணிகள்**

- சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- ஈசன் உவக்கும் இன்மலர்கள், கோயில் - வினாவிடை அமைப்பில் இயற்றினார்
- மகாலட்சுமி தோத்திரம், நடராஜ வடிவம், உமாமகேஸ்வரம் - நூல்கள்
- சமய பிரசங்கம் செய்தமை
- சமய சொற்பொழிவகள் ஆற்றியமை
- இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் பரவலுக்கு முன்னோடி
- சமய, வேதாந்ததுறைசார் கவிதையாக்கம்
- தத்துவ கருத்துக்களை சாதாரண மக்களுக்கு இலகுநடையில் விளக்கினார்.
- சமயப்பெரியார்களை மதித்துப் போற்றினார்.
- சமயப்பெரியாரின் போதனைகளையும், பணிகளையும், முன்மாதிரியாகக் கொண்டார்.
- கலிப்பா, வஞ்சிப்பா, விருதப்பா, கண்ணிகள், சிந்துகளை கையாண்டு சமய நூல்களை பாடினார்.
- இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத்தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவியமை
- கல்விச்சாலைகள் பல அமைத்தமை
- மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களை கட்டி தரும பரிபாலனம் செய்தார்.
- சமய நூல்கள், கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்க பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமரவேள் நவமணிமாலை

**கல்விப்பணி**

- தானும் கல்வியில் உயர்ந்து இந்துக்களும் கல்வி பெற வேண்டும் என நினைத்தமை
- தமிழ் மாணவருக்காக – சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவ வலியுறுத்தியமை
- அண்ணாமலை பல்கலைக்கழகம் உதயமாவதற்கு வித்திட்டவர்
- மேல் நாட்டு கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைய போதிக்க ஆவணம் செய்தார்
- அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும், கொழும்பு பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராக பணியாற்றியமை
- சுய மொழியபிமாமைற்றதும், தேசாபிமானமற்றதும், அடிமைத்தமையானதும், நாகரீகத்தை நாசப்படுத்துவதுமான கல்வி முறையை கண்டித்தார்.
- கற்ற கல்விக்கு செயல் வடிவம் கொடுத்தார்
- இராம கிருஷ்ணமிஷனுக்குரிய கல்வி சட்டத்தை இந்துபோட் இராசரத்தினத்துடன் இணைந்து உருவாக்கியமை
- 1925 இலங்கை இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று தன் கல்விப்பணிகளை தொடர்ந்தார்.
- பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டியமை

- அநாதை ஆச்சிரமங்களை நிறுவி – அச்சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார்.
- இலங்கை கல்வித் திணைக்களத்தில் - பாடநூற் சபை, கல்வி அய்வு சபை, தேர்வுச்சபை என்பவற்றில் உறுப்பினராக பணிபுரிந்தவர்.
- வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனை நடத்தியமை
- பக்தி பாசுரங்களை பாராயணம் செய்தல்
- வார இறுதியில் சைவ சமய வகுப்புக்களையும், பண்ணிசை பயிற்சிகளையும் நடாத்துதல்.
- சமயக் கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல்
- மாணவர் நலனுக்காக 'கலைச்சொல் அகராதியை' உருவாக்கினார்
- பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சியான பணிகளை மேற்கொண்டார்.

**கலைப்பணி**

- இசை ஆராச்சி நூல் - யாழ்நூல்
- நாடக நூல் - மதங்க சூளாமணி
- இயல், இசை, நாடகம் - முத்தமிழிலும் வல்லவராதலால் - முத்தமிழ் வித்தகர்
- இவரின் கவிதைகள் ஓசை நயமிக்கவை
- காலத்திற்கேற்ற கவிதை
- இவரின் நூல்களில் செந்தமிழ் நடை கையாளப்பட்டது
- குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுக நாவலர், கங்கையில் விடுத்த ஓலை என்பவற்றை எழுதியுள்ளார்.
- ஆங்கில வாணி, பூஞ்சோலை காவலன்
- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சொல்லாக்க மாநாட்டில் தலைமை தாங்கியமை
- அவரின் உள்ளத்து உணர்வுகளை கவிதையிலே தீட்டிக் காட்டுபவர்.

**சமூகப் பணி**

- மக்களை நேசித்தவர்
- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்
- நாட்டு நலன், மக்கள் நலன், மொழி நலனுக்காக பாடுபட்டவர்.
- அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடை திட்டங்கள்
- இவரின் கல்வி செயற்பாடுகள் ஏழை மாணவர், அநாதை மாணவர் பயனடைந்தமை
- பிறருக்கு பணி புரிவதே பெருமின்பம் என திடசித்தம் கொண்டவர்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்**

- ஈழத்தில் உதித்த சைவ பெரியார்களுள் ஒருவர்
- 19ம் நூற்றாண்டு கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் பிறந்தவர்
- தமிழ், சைவம் வளர்க்க பாடுபட்டவர்
- ஞானபிரகாசர் மரபில் வந்த கந்தபிள்ளை – சிவகாமி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக நல்லூரில் 1882.12.18ம் திகதி பிறந்தவர்
- பிள்ளை திருநாமம் ஆறுமுகம்
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் தேர்ச்சி
- சுப்பிரமணிய உபாத்தியார், வேலாயுத முதலியார், சரவண முத்து உபாதியாயர், சேனாதிராய முதலியார் - குருகுல கல்வி

- யாழ் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் கல்வி பயின்றார்
- 7 ஆண்டுகள் அக்கல்லூரியில் ஆசிரியராக இருந்தார்

**சமயப்பணி**

- சைவ பிரசங்கம் ஆற்றியமை – வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம்
- புராண படனங்கள் நிகழ்த்தியமை – நல்லூர் கந்த சுவாமி கோயில்
- ஆலங்களை புனர்த்தாரணம் செய்தமை – திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம்

(“மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனை சென்றடையுங்கள்” விஞ்ஞாபனம்)

- சைவ நூல்கள் பலவற்றை எழுதியமை – சைவ வினாவிடை, இலக்கண நூல்கள்
- பண்ணிசையினை வளர்த்தமை – நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஒதுவித்தமை
- பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை
- பிறசமய கண்டனங்களையும் அகச்சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டமை – சைவ நூஷண பரிகாரம் நல்லூர் கந்தசுவாமி கோயில்

**கல்விப்பணி**

- சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தமை
- வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தமை
- பெண்களுக்கான கல்வி 3ஆம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்)
- நூல்களை வெளியிட்டமை

**பதிப்பாசிரியர் பணி**

- வித்தியாதுபாவ யந்திரசாலைகளை நிறுவினார்
- அகராதிகள் பதிப்பித்தல் - சூடாமணி நிகண்டு
- இலக்கண நூல்கள் - தருக்க சங்கிரகம்
- இலக்கிய நூல்கள் - மகாபாரதம்
- அறிவியல் சார் நூல்கள் - இலங்கை பூமி சாத்திரம்
- ஏட்டுச்சுவடிகளில் இருந்த நூல்களை அச்சுவாகனமேற்றினார்.

உதாரணம் -- தொல்காப்பிய சூத்திரவிருத்தி

- தொகுத்துப் பதிப்பித்தமை – அருட்பா
- சில நூல்கள், இலக்கணக் குறிப்புகள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சி பதிப்புக்கள்
- சிலவற்றுக்கு உரை எழுதி பதிப்பித்துள்ளார் - நல்வழி, ஆத்தி சூடி, கொன்றை வேந்தன்
- சில செய்யுள் நூல்களை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தார்

உதாரணம் திருவிளையாடற் புராண வசனம்

- அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதி பதிப்பித்தார்

உதாரணம் -- இலக்கண சுருக்கம்

- இலங்கை சைவ ஊடகத்துறை, பத்திரிகை துறை வளர்ச்சிக்கு வித்திட்டமை
- இலங்கை நேசன் - பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை
- சைவ உதய பானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை

**சமூகப்பணி**

- 1876 – 1977 கடும் வரட்சியில் பஞ்சம் ஏற்பட்ட போது கஞ்சி, தொட்டி தர்மம்
- யாழ்ப்பாண – கரையூர் - பேதி நோய் ஏற்பட்ட போது – உதவியமை
- மதுபாவனை, சூதாட்டம் - ஒழிக்கப்பாடுபட்டமை
- யாழ்ப்பாணக்கச்சேரி நிர்வாக ஊழல் தொடர்பாக – தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கியமை
- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தியமை
- பிறரை உரியவேளையில் கௌரவித்தமை
- 1879.12.05 மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்
- 1971.10.29 இலங்கை அரசாங்கம் நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்டது.

## 16 - ஊடகம்

01. ஊடகம் எனப்படுவது யாது?
மக்களுக்கு தகவல்கள், செய்திகள் போன்றவற்றை வழங்குகின்ற தகவல் தொடர்புச் சாதனங்கள்

02. ஊடக வகைகளைக் குறிப்பிடுக.
1. மரபுவழிச் சாதனங்கள்

ஓலைச்சுவடிகள், அழைப்பு ஓலைகள், நாட்டுப் புறப்பாடல்கள், கதைப்பாடல்கள், திருமுறைகள், முரசறைதல்

2. சொல் வழித்தொடர்பு சாதனங்கள்

பொதுக்கூட்டம், பொது விவாதம், பிரசங்கம், மகா நாடுகள்

3. வெளிப்புறச்சாதனங்கள்

விளம்பரப்பலகை, அறிவிப்புப்பலகை, சித்திரங்கள், சிற்பங்கள்

4. அச்சுக்கலை

பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், நாட்காட்டி, சஞ்சிகைகள், பஞ்சாங்கம், ஆய்வு வெளியீடுகள்

5. தொலைபேசி, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி
6. தகவல் தொழிநுட்பம்

இணையம், ஒலிநாடா, இலத்திரனியல் அஞ்சல், இறுவெட்டு, ஒளிநாடாக்கள்

03. ஊடகங்களில் அல்லது தொலைத் தொடர்புச் சாதனங்களில் பொருள் மரபாக வெளிப்படுத்தக் கூடிய இந்து சமய நெறிமுறைகளை குறிப்பிடுக.
- புராண, இதிகாசக் கதைகள், சமய சம்பந்தமான கதைப்பாடல்கள்
- சமய இலக்கிய வடிவங்கள், பிரபந்தங்கள், திருமுறைகள்
- நாயன்மார், அடியார் வரலாறுகள், கோயில் வரலாறுகள், கலைகள்
- விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள்
- நாட்டார் கதைகள், நாட்டார் இலக்கிய வடிவங்கள்

04. இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்கள் ஆற்றக் கூடிய பங்களிப்பினை மதிப்பிடுக.
- சமய பிரசங்கங்கள், பிரசாரங்கள், திருமுறைகள் என்பவற்றை ஒலி, ஒளி பரப்புதல்
- நாள், கோள், சுப நேரங்களை அறிந்து கொள்ள உதவுதல்
- வலைய அமைப்புக்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுதல்
- மத ஈடுபாடு, சமய நம்பிக்கை அதிகரிக்கச் செய்தல்
- சமய சம்பந்தமான விடயங்கள் இந்துப் பண்பாட்டு வரலாற்றம்சங்கள், புராணபடனமுறை என்பவை பரப்பப்படுதல்
- புராதன இதிகாச நாடகங்களை ஒளிபரப்புதல்
- ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படும் சமயம் சம்பந்தமான கருத்துக்கள் ஆதாரபூர்வமானவையாக இருத்தல் வேண்டும். தகவல்கள் மூலாதாரங்களிலிருந்து பெறப்படுதல் வேண்டும்.
- உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை பேணப்படுதல் வேண்டும்.

- ஊகம், கற்பனை தவிர்க்கப்படுவதன் மூலம் சமய நம்பிக்கை வளர்க்கப்படுதல் வேண்டும்.
- ஊடகம் தனக்குரிய தார்மீகப் பொறுப்பைப் பேணுதல் வேண்டும்.
- ஏனைய மதங்களை மதித்துக் கருத்துக்களை வெளியிடுதல் வேண்டும்.
- பொருத்தமான ஆளணியினரின் சிபார்சிலான தகவல்களை வழங்குதல்
- கல்வெட்டுக்கள், அகழ்வுச் சின்னங்கள் என்பவை பற்றிய தகவல்களினூடாக இந்து சமயத்தின் உண்மைத் தன்மை தொன்மை வெளிப்படும் வகையில் செயற்படுதல் அவசியமாகும்.
- கோட்பாடுகள் சரியான வழியில் மக்களைச் சென்றடைய உதவுதல்
- இந்து அறிவியல், அறவியல் சார்ந்த அம்சங்களை வெளிப்படுத்துதல் (உலகளாவிய ரீதியில்)
- சிறுவர்கள் இளைஞர்களை சமய கலாசார விழுமியங்களைப் பின்பற்றும் வகையில் நெறிப்படுத்துதல்